லெனின்

போல்ஷெவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா?



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி.இ.லெனின்

போல்ஷெவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா?[1]

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

பதிப்பகத்தார் உரை

''போல்ஷெவிக்குகள் நீடித்துஅரசாள முடியுமா?'' என்ற லெனினது நூலின் இம் மொழிபெயர்ப்பு, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியைச் சேர்ந்த மார்க்ஸீய-லெனினீயக் கல்லூரியால் தயாரிக்கப் பட்ட வி. இ. லெனின். நூல் திரட்டு, தொகுதி 34, ஐந்தாம் ருஷ்யப் பதிப்பிலிருந்து செய்யப்பட்டிருக்கிறது.

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-127}{014(01)-80}$ без объявл. 0101020000

பொருளடக்கம்

இரண்டாம் பதிப்பிற்கு முன்னுரை . . 5

பின்னுரை 76

குறிப்புகள் 86

பெயர்ப் பட்டியல் 106

இரண்டாம் பதிப்பிற்கு முன்னுரை

இத்துண்டுப் பிரசுரம் 1917ம் ஆண்டு செப்டம்பர் முடிவில் எழுதப்பெற்று அக்டோபர் முதல் தேதி முடிவடைந்தது; இது உள்ளடக்கத்திலிருந்தே வெளிப்படையாகும்.

அக்டோபர் 25ம் தேதியப் புரட்சி இத்துண்டுப் பிரசுரத்தில் எழுப்பியுள்ள கேள்வியைத் தத்துவத் துறையிலிருந்து நடைமுறைக் துறைக்கு மாற்றியுள்ளது.

ஆகவே இக்கேள்விக்கு இப்பொழுது சொற்களாலின்றிச் செயல்களால் விடையிறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. போல்ஷெவிக் கட்சியினர் அதிகாரத்தை மேற்கொள்வது சாத்தியமல்ல என்று நிருபிப்பதற்காகத் தரப்பட்டுள்ள தத்துவரீதியான வாதங்கள் எல்லாம் மிக மிகப் பலவீனமானவை. இவையோ, தவிடுபொடியாக்கப்பட்டுவிட்டன.

முன்னணி வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கம் இப்போது செய்து முடிக்க வேண்டிய கடமை தொழிலாளிகள், விவசாயிகளின் அரசாங்கம் நிலைத்து நிற்கக் கூடியதுதான் என்பதை நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்ட வேண்டியதேயாகும். வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் அனைவரும், உயிர்ப்புள்ள சக்தி வாய்ந்த, நேர்மையான விவசாயி ஜனப் பகுதிகள் அனைத்தும், உழைப்பாளிகள் அனைவரும், சுரண்டப்படுவோர் அனைவரும், இந்தப் பிரம்மாண்டமான, வரலாற்றுச் சிறப்புள்ள பிரச்சினையை நடைமுறையில் தீர்ப்பதற்கு எல்லா முயற்சிகளும் செய்வார்கள்.

வேலையில் இறங்குங்கள்! அனைவரும் வேலையில் இறங்குங்கள்! அகில உலக சோஷலிஸ்ட் புரட்சி எனும் இலட்சியம் வெற்றி பெற்றுத் தீரவேண்டும், அது வெற்றி பெற்றே தீரும்!!

செயின்ட் பீட்டர்ஸ்பர்க், நவம்பர் 9, 1917

நி. லெனின்

1918 ஆண்டு,
செயின்ட் பீட்டர்ஸ்பர்க்,
''போர்வீரர்கள், விவசாயிகள்
நூல்நிலையம்'' என்ற தொடரில்,
நி. லெனின், ''போல்ஷெவிக்குகள்
நீடித்து அரசாள முடியுமா?''
என்ற துண்டுப் பிரசுரத்தில்
முதன் முறையாக
வெளியிடப்பட்டது

''ரேச்''[2] பத்திரிகையிலிருந்து ''நோவயா ஷிஸ்ன்''[3] பத்திரிகை வரையும், காடெட்-கர்னீலோவ் குழுவினர்[4] தொடங்கி அரைகுறை போல்ஷெவிக்குகள் வரையும், போல்ஷெவிக்குகளைத் தவிர ஏனைய போக்குகள் அனைத்தும், எதில் ஏகோபித்து நிற்கின்றன?

போல்ஷெவிக்குகள் ஒருக்காலும் அரசாங்க அதிகாரம் அனைத்தையும் தனியாக ஏற்றுக்கொள்ளத் துணிய மாட்டார்கள், அன்றி அவ்வாறு துணிந்து கைப்பற்றினாலும் மிக மிகக் குறுகிய காலத்திற்குக்கூட அதைக் கையில் வைத்திருக்க அவர்களால் இயலாது என்ற விஷயத்தில்தான் அவையனைத்தும் ஒன்றுபட்டுள்ளன.

போல்ஷெவிக்குகள் தனியாக அரசாங்க அதிகாரம் அனைத்தையும் ஏற்பதென்பது முற்றிலும் காரிய சாத்திய மற்ற அரசியல் பிரச்சினை என்றோ, துரகங்காரமிக்க ''வெறியன்'' எவனாவது தான் அது நடக்கக் கூடியது என்று எண்ண முடியும் என்றோ, எவரேனும் சாதிப்பார்களேயானால், நாம் அதை மறுக்கிறோம்; மிகவும் பொறுப்புள்ள, மிகவும் செல்வாக்குள்ள, பல்வேறு ''நிறங்களில்'' உள்ள அரசியல் கட்சிகள், போக்குகள் ஆகியவற்றின் அறிக்கைகளை அப்படியே மேற்கோள் காட்டி நாம் அதை மறுக்கிறோம்.

ஆனால், மேலே கூறப்பட்டுள்ள கேள்விகளில் முதல் கேள்வியான, போல்ஷெவிக் கட்சியினர் தனியாக அரசாங்க அதிகாரம் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளத் துணிவார்களா என்பதுபற்றி முதலில் இரண்டொரு வார்த்தைகள் கூற வேண்டும். அகில ருஷ்ய சோவியத்துக்களின் மகாநாட்டில்[5], மந்திரி த்ஸெரெத்தேலியின் பிரசங்கத்தின் நடுவே, என்

இருப்பிடத்திலிருந்தபடியே நான் உரக்கக் கூவித் தெரிவித்த ஒரு கூற்றின் மூலமாக இந்தக் கேள்விக்குத் திட்டவட்டமாக 'ஆமாம்' என்று ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்கனவே பதில் அளித்துளேன்.[6] மேலும், நாம் தனியாக அரசாங்க அதிகாரத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று பொருள்பட, போல்ஷெவிக்குகள் ஏதாவது அறிக்கைகள் விட்டதாக நான் பத்திரிகைகளில் பார்க்கவுமில்லை, காதால் கேட்கவுமில்லை. இன்னுங் கூட நான் சாதிக்கிறேன்: வாய்ப்பு கிடைத்திருக்கும்போது அரசாங்க அதிகாரத்தை எடுத்துக்கொள்ள மறுக்கும் அரசியல் கட்சி—குறிப்பாக, முன்னணி வர்க்கத்தின் கட்சி—இருந்து கொண்டிருப்பதற்கு உரிமையற்றது, கட்சி என்று கருதப்படுவதற்குத் தகுதியற்றது, எல்லா அர்த்தங்களிலும் அது ஒரு சர்வ பூஜ்ஜியம்தான்.

காடெட்டுகள், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள்[7], அரைகுறை போல்ஷெவிக்குகள் (இவர்களை நான் கால்வாசி போல்ஷெவிக்குகள் என்றே கூறப் பிரியப்படுகிறேன்) ஆகியோர்கள் நாம் அக்கறை காட்டுகிற பிரச்சினையைப் பற்றிச் செய்துள்ள அறிக்கைகளை இப்போது மேற்கோள் காட்டுவோம்.

செப்டம்பர் 16ம் தேதிய ''ரேச்'' பத்திரிகையின் தலையங்கம் கூறுவதாவது:

''...சச்சரவும், குழப்பமும் அலெக்ஸந்த்ரீன்ஸ்கிய் தியேட்டரில்[8] ஆட்சி புரிந்தன; சோஷலிஸ்ட் பத்திரிகைகளும் அதே காட்சியைப் பிரதிபலிக்கின்றன. போல்ஷெவிக்குகளின் கருத்துக்கள் மட்டுமே திண்மையாகவும் துலக்கமாகவும் இருக்கின்றன. மகாநாட்டில்[9] இவை சிறுபான்மையோரின் கருத்துக்கள். சோவியத்துக்களில் இவை மென்மேலும் வளர்ந்து கொண்டே வருகிற ஒரு போக்காகும். போல்ஷெவிக்குகளின் சொற்போர் தொடுக்கும் தன்மை, தற்பெருமை பாராட்டும் சொற்றொடர்கள், தன்னம்பிக்கை இருப்பதாகப் போடும் வெளிவேஷம், இவையெல்லாம் எவ்வளவுதான் இருந்தபோதிலும், ஒருசில வெறியர்களைத் தவிர அவர்கள் எல்லோரும் வாய்ச் சொல் வீரர்களே. தாங்களாகவே 'அதிகாரம் அனைத்தையும்' எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் முயற்சி செய்ய மாட்டார்கள். கட்டுக் குலைப்பதிலும் அழிப்பதிலும் par excellence* இருக்கிற அவர்கள் உண்மையில்

---

* தலைசிறந்தவர்களாக.—(ப-ர்.)

கோழைகளே. தங்களுக்கு இயல்பான அறியாமையையும் தங்களது தற்கால வெற்றிகளின் நிலையற்ற தன்மையையும் அவர்கள் நெஞ்சின் அடியாழத்திலே நன்கறிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் முழு வெற்றியைக் காணும் முதல் நாள், அவர்களின் உடனடியான வீழ்ச்சியைக் குறிக்கும் முதல் நாளுமாகும் என்பதை நாமனைவரும் எவ்வளவு நன்றாக அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு நன்றாக அவர்களும் அறிவார்கள். அவர்கள் இயல்பாகவே பொறுப்புணர்ச்சியற்றவர்கள்; செயல்முறைகளிலும் சரி, நடவடிக்கைகளிலும் சரி, அராஜகவாதிகள். ஆகவே, அரசியல் சிந்தனையின் ஒரு போக்காகத் தான்—சரியாகச் சொன்னால் அதன் முறை பிறழ்ந்த வடிவாகத்தான்—அவர்களைக் கருதக் கூடும். போல்ஷெவிஸத்தை ஒரேயடியாக ஒழித்துக் கட்டுவதற்கு எல்லாவற்றிலும் சிறந்த வழி, நாட்டின் தலைவிதியை அதன் தலைவர்கள் கையில் ஒப்படைத்துவிடுவதுதான். இம்மாதிரிச் சோதனைகள் செய்யத் தகாதவை, அழிவு தரக் கூடியவை என்ற உணர்வு மட்டும் இல்லாமலிருந்தால், புகலற்ற நிலையில் அத்தகைய வீர நடவடிக்கை எடுப்பதற்குக்கூடத் துணியலாம். நல்ல வேளையாக, இந்த விடியாமூஞ்சி வீரர்கள் உண்மையில் எல்லா அதிகாரத்தையும் கைப்பற்றுவதற்கு முயலவேயில்லை என்பதை மீண்டும் கூறுகிறோம். எந்த விதமான சூழ்நிலையிலும் அவர்கள் ஆக்க வேலையை மேற்கொள்வதற்குச் சக்தியற்றவர்கள். ஆகவே, அவர்களின் திண்ணமும் துலக்கமும் அரசியல் மேடையளவில் தானே தவிர, பிரசங்க மாரியளவில் தானே தவிர, அதற்கு வெளியே கிடையாது. ஆகவே நடைமுறையில் அவர்களது நிலையை எந்த வகையிலும் கணக்கில் சேர்க்க முடியாது. இருந்த போதிலும் ஓர் அம்சத்தில் அதற்குக் கொஞ்சம் நடைமுறை முக்கியத்துவம் உண்டு; அதாவது, 'சோஷலிஸ்ட் சிந்தனையின்' மற்றெல்லாச் சாயைகளையும் அது தனக்கு எதிராக ஒன்றுபடுத்தி வைக்கிறது....''

இவ்வாறு காடெட்டுகள் வாதிக்கின்றனர். அதே சமயம், ருஷ்யாவில் ''ஆட்சி செலுத்தி நிர்வகித்து வரும்'' மிகப் பெரிய கட்சியான ''சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின்'' கருத்தைப் பார்ப்போம். இவர்களுடைய கருத்தும் இவர்களின் அதிகாரபூர்வமான கட்சிப் பத்திரிகையான ''தேலோ நரோதாவில்''[10] செப்டம்பர் 21ம் தேதி, கையெழுத்தற்ற, அதாவது தலையங்கக் கட்டுரையிலேயே வெளியிடப்பட்டுள்ளது:

''...மகாநாடு ஊர்ஜிதம் செய்துள்ள வேலைத்திட்டத்தின் அடிப்படையில், அரசியல் நிர்ணய சபை[11] கூட்டப்படும்

வரையில், ஜனநாயகத்துடன் இணைந்து வேலை செய்ய பூர்ஷ்வா வர்க்கம் மறுக்குமேயானால், அந்த மகாநாட்டிற்குள்ளிருந்தே கூட்டணி தோன்ற வேண்டும். கூட்டணியை ஆதரிப்பவர்களுக்கு இது ஒரு கடுமையான தியாகமாக இருக்கும். அதிகார விஷயத்தில் 'தூய போக்கைக்' கடைப்பிடிக்க வேண்டும் என்ற கொள்கையைப் பரப்புகிறவர்களுங்கூட இதற்கு உடன்பட்டாக வேண்டும். ஆனால் இவர்களிடையே உடன்பாடு ஏற்படாதென்று நாம் அஞ்சுகிறோம். அப்படி நேர்ந்தால் மூன்றாவதான, கடைசியான ஒரு நடவடிக்கை எஞ்சியுள்ளது; அதாவது, மகாநாட்டின் எந்தப் பாதி கோட்பாட்டின் அடிப்படையில் தனிக் கட்சி அரசாங்கக் கருத்தை வற்புறுத்தியதோ அந்தப் பாதியே அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

''இதையே திட்டவட்டமாகக் கூறுவோம்: போல்ஷெவிக் கட்சியினருக்கு மந்திரி சபை அமைக்க வேண்டிய கடமை ஏற்படும். அவர்கள் ஊக்கத்துடன் புரட்சிகர ஜனநாயகத்திடையே கூட்டணி மீது வெறுப்பு ஊட்டியுள்ளனர்; 'சமரசவாதத்தைக்' கைவிட்டுவிட்டால் எல்லாவிதமான நன்மைகளும் கிடைக்கச் செய்வோம் என்று வாக்களித்திருக்கின்றனர்; நாட்டின் துயரங்கள் அனைத்திற்கும் காரணம் இந்தச் சமரசவாதம் என்றும் சொல்லி வந்துள்ளனர்.

''தங்கள் கிளர்ச்சியின் மூலமாகத் தாங்கள் செய்து வருவது என்ன என்பதை அவர்கள் உணர்ந்திருந்தால், அவர்கள் பொது மக்களை ஏமாற்றி வரவில்லை என்றால், தங்கள் இஷ்டம் போல் அவர்கள் தாராளமாக வழங்கி வந்த புரோமிஸரி நோட்டுகளை இப்பொழுது செலுத்த வேண்டியது அவர்களின் கடமையாகும்.

''பிரச்சினை மிகத் தெளிவாயுள்ளது.

''அதிகாரத்தை மேற்கொள்வது தங்களால் இயலாத காரியம் என்ற அவசர அவசரமாகப் புனைந்த தத்துவங்களின்பின் மறைந்துகொள்வதற்கு அவர்கள் வீண் முயற்சிகள் செய்ய வேண்டாம்.

''இந்தத் தத்துவங்களை ஜனநாயகம் ஏற்காது.

''அதே நேரத்தில் கூட்டணியை விரும்புவோர் அவர்களுக்கு முழு ஆதரவு அளிக்க உத்தரவாதம் செய்ய வேண்டும். இவைதான் நம்முன் இருக்கிற மூன்று விதமான மாற்றுக்கள், மூன்று வழிகள். வேறு எதுவும் கிடையாது!'' (கொட்டையெழுத்துக்கள் ''தேலோ நரோதா'' தந்தவையே.)

இவ்வாறு வாதிக்கின்றனர் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள். கடைசியாக, ''நோவயா ஷிஸ்னைச்'' சேர்ந்த ''கால்வாசி போல்ஷெவிக்குகளின்'' ''நிலையை''—அதாவது, ஆற்றில்

ஒரு கால் சேற்றில் ஒருகால் என்றிருக்க முயற்சிப்பதை ஒரு நிலை என்று சொல்ல முடியுமானல் அதை—இனிக் கவனிப்போம். செப்டம்பர் 23ம் தேதி ''நோவயா ஷிஸ்ன்'' பத்திரிகையின் தலையங்கக் கட்டுரையிலிருந்து இது எடுக்கப் பட்டுள்ளது:

''...கொனவாலவ், கிஷ்கின் ஆகியோருடன் கூட்டணி ஒன்று மறுபடியும் அமைக்கப்படுமானல், அது ஜனநாயகத்தின் புதிய சரணுகதி என்றுதான் அர்த்தப்படும்; ஆகஸ்டு 14ம் தேதிய வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு பொறுப் புள்ள அரசாங்கம் அமைப்பதைப் பற்றிய மகாநாட்டின் தீர்மானத்தை ரத்து செய்வதாகத்தான் அர்த்தப்படும்....

''... மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதி களும் அடங்கிய, கருத்தொருமையுள்ள மந்திரி சபை, கூட்டு மந்திரி சபையில் பொறுப்புள்ள சோஷலிஸ்ட் மந்திரிகள் தங்கள் பொறுப்பை எப்படிக் குறைந்த அளவிலே உணர்ந் தார்களோ, அதே போலக் குறைந்த அளவிலேயே தன் பொறுப்பை உணர முடியும்.... அப்படிப்பட்ட அரசாங்கம் புரட்சியின் 'உயிர்ப்புள்ள சக்திகளைத்' தன்பால் சேகரித்து நிறுத்திக்கொள்ள இயலாது என்பது மட்டுமின்றி, அப்புரட் சியின் முன்னணிப் படையாகிய பாட்டாளி வர்க்கத்தின் செயல் பூர்வமான ஆதரவு கிடைக்கும் என்று நம்பிக்கை கொள்ளவும் இயலாது.

''ஆனல் வேறொரு வகையான கருத்தொருமையுள்ள மந்திரி சபையை, அதாவது 'பாட்டாளிகளும் ஏழை விவசா யிகளும்' அடங்கிய அரசாங்கத்தை அமைப்பது நிலைமையைச் சமாளிப்பதற்கு மற்ற வழிகளைவிடச் சிறந்ததாயிருக்காது, மோசமான வழியாகத்தான் இருக்கும். உண்மையில் அது பரிகாரமே ஆகாது, வெறும் தோல்வியே ஆகும். உண்மை யில் எவரும் அத்தகைய கோஷத்தை முன்வைக்கவில்லை, ''ரபோச்சிய் பூத்''[12] என்ற பத்திரிகையில் உள்ள சிற்சில குறிப்புரைகளைத் தவிர. அவையுங் கூட ஏதோ போகிற போக்கிலே, தைரியமில்லாத முறையில், அதை வெளியிட்டுப் பின்னர் முறையாக, 'மழுப்பித் தட்டிக் கழிப்பவையாக' உள்ளன.'' (இத்தகைய பச்சைப் பொய்யைப் பொறுப்பு வாய்ந்த பத்திரிகையாளர்கள்''தைரியமாக''எழுதுகிருர்கள்.

செப்டம்பர் 21ம் தேதிய ''தேலோ நரோதாவின்'' தலையங்கத்தைக்கூட அவர்கள் மறந்துவிட்டனர்.)

''ஒப்பனைக்காக, போல்ஷெவிக்குகள் 'எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே' என்கிற பழைய கோஷத்தை இப்போது மறுபடியும் உயிர்ப்பித்திருக்கிறார்கள். மத்திய நிர்வாகக் கமிட்டியின் வடிவில் சோவியத்துக்கள் செயல்பூர்வமான போல்ஷெவிக்-எதிர்ப்புக் கொள்கையைத் திட்டமாகக் கையாண்ட ஜூலை நாட்களிலே[13] இந்தக் கோஷம் வாபஸ் பெறப்பட்டது. எனினும் இப்பொழுது 'சோவியத் வழி' என்பது நேராக்கி நிமிர்த்தி விடப்பட்டிருக்கிறது என்று கருத முடியும்; அது மட்டுமல்ல, உத்தேசத்திலிருக்கும் சோவியத்துக்களின் மகாநாட்டில் போல்ஷெவிக்குகளே பெரும்பான்மையினராக இருப்பார்கள் என்று எண்ணுவதற்கு எல்லா ஆதாரங்களுமுண்டு. இத்தகைய நிலைமைகளில், 'எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே' என்ற கோஷத்தை போல்ஷெவிக்குகள் உயிர்ப்பித்திருப்பது, 'செயல் தந்திர வகைப்பட்ட கொள்கை' ஆகும். அந்தக் கொள்கை பாட்டாளிகள், 'ஏழை விவசாயிகளின்' சர்வாதிகாரத்தை நிறுவுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. சோவியத்துக்கள் என்று சொல்லும் பொழுது விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களும் அவற்றில் அடங்கும் என்பது உண்மையே; ஆகவே ருஷ்ய ஜனநாயகம் முழுவதிலும் மிகப் பெரும் பகுதியை ஆதாரமாகக் கொள்ளும் அதிகாரம் என்பதே போல்ஷெவிக் கோஷத்தின் உட்கிடையாகும். ஆனால், அவ்வாறிருப்பின், 'எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே' என்ற கோஷம் சார்பற்ற மகத்துவம் எதுவுமற்றுப் போய்விடுகிறது. ஏனெனில் சோவியத்துக்களின் உள்ளமைப்பும், மகாநாடு நிறுவிய 'பூர்வாங்க பார்லிமென்டின்' உள்ளமைப்பும் அநேகமாக ஒன்றுதான் என்று ஆகிவிடுகின்றன....'' (''நோவயா ஷிஸ்ன்'' கூற்று அபாண்டமான பொய். போலியான ஜனநாயக முறையும், உண்மையான ஜனநாயக முறையும் ''அநேகமாக ஒன்றுதான்'' எனக் கூறுவதை யொக்கும் இது. பூர்வாங்க பார்லிமென்ட் என்பது சிறுபான்மையோரின் சித்தத்தை, சிறப்பாக குஸ்கோவா, பெர்கென்ஹைம், சாய்கோவ்ஸ்கிய் கூட்டத்தாரின்

சித்தத்தை, பெரும்பான்மையோரின் சித்தமாகச் சித்தரித்து ஏய்த்து வருகிற பித்தலாட்டமே ஆகும். இதுதான் முதல் விஷயம். இரண்டாவது குறிப்பிடத்தக்க விஷயம் என்ன வெனில் மகாநாட்டில் அவ்க்ஸேன்தியேவ், சாய்கோவ்ஸ்கிய் போன்ற பேர்வழிகளால் தயாரித்தனுப்பப்பட்ட விவசாயி சோவியத்துக்களில்கூட கூட்டணியை எதிர்ப்பவர்களின் சத வீதம் மிகவும் அதிகமாகவேயிருந்தது. எந்த அளவுக்கு அதிக மாயிருந்தது என்றால் அவர்கள் தொழிலாளிகள்-போர்வீரர் கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களுடன் சேர்ந்தால் கூட்டணி அடியோடு தவிடுபொடியாகிவிட்டிருக்கும். இனி மூன்றாவது விஷயம் என்னவெனில் ''அதிகாரம் சோவியத்துக்களுக்கே'' என்ப தின் பொருள், விவசாயி சோவியத்துக்களின் அதிகாரம் பிர தானமாக நாட்டுப்புற மாவட்டங்களைத்தான் அணைத்திருக் கும்; அந்த நாட்டுப்புற மாவட்டங்களில் ஏழை விவசாயிகளின் கை மேலோங்கி யிருப்பது சர்வ நிச்சயம்...) ''அது ஒன்று தான் என்றால் போல்ஷெவிக் கோஷம் உடனே வாபஸ் பெறப்பட வேண்டும். ஆனால் 'அதிகாரம் சோவியத்துக் களுக்கே' என்பது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத் தை மறைப்பதற்குரிய ஒரு மாறுவேஷம் மட்டுமே என்றால் அப்படிப்பட்ட அதிகாரம் புரட்சியின் தோல்வியையும் அழி வையும் குறிக்கும்.

''நாட்டின் இதர வர்க்கங்களிடமிருந்து தனிமைப் பட்டிருப்பதோடல்லாமல் ஜனநாயகத்தின் உண்மையான உயிர்ப்புள்ள சக்திகளிடமிருந்தும் தனிமைப்பட்டிருக்கிற பாட்டாளி வர்க்கம் நிர்வாக முறையிலே அரசாங்க இயந் திரத்தைக் கைப்பற்றிக்கொண்டு மிகவும் சிக்கலான நிலைமை யில் அதை இயக்கிச் செல்லவும் முடியாது, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை மட்டுமின்றி, அத்துடன் புரட்சி முழுவதையும் அப்படியே வெள்ளத்திலடித்துச் செல்லும் படியான எதிர்ப்புச் சக்திகளின் நெருக்குதல் பூராவையும் அரசியல் ரீதியிலே அதனால் எதிர்த்து நிற்கவும் முடியாது, என்பதற்கெல்லாம் ருஜு வேறு வேண்டுமா?

''தற்போதைய நிலைமையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வல்லது ஜனநாயகத்திற்குள்ளேயே அமைந்த, உண் மையில் நேர்மையான கூட்டணியே யாகும்.''

* * *

இந்த நீண்ட கட்டுரைப் பகுதிகளை மேற்கோள் காட்டியதற்கு நாம் வாசகரின் மன்னிப்பைக் கோருகிறோம். ஆனால் அவ்வாறு மேற்கோள் காட்டுவது மிக மிக இன்றியமையாதது. போல்ஷெவிக்குகளை எதிர்த்து நிற்கும் பல்வேறு கட்சிகளின் நிலைகள் இன்னின்னவை என்று துல்லியமாகக் காட்ட வேண்டியது அவசியமாயிற்று. அத்துடன் இன்னொரு அதி முக்கியமான விஷயத்தையும் திட்டமாக மெய்ப்பிக்க வேண்டியிருந்தது. போல்ஷெவிக்குகள் அரசாங்க அதிகாரம் அனைத்தையும் தனியாக ஏற்பது என்ற பிரச்சினை சாத்தியமான பிரச்சினைதான் என்பது மட்டுமல்லாமல் அது அவசர அவசியமான பிரச்சினையுமாகும் என்று இந்த எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன என்ற அதி முக்கியமான விஷயத்தையும் நாம் நிரூபிக்க வேண்டியதாயிருந்தது.

போல்ஷெவிக்குகள் நீடித்து அரசாள முடியாது என்று காடெட்டுகளிலிருந்து ''நோவயா ஷிஸ்ன்காரர்கள்'' வரை ''அனைவரையும்'' ஏற்றுக் கொள்ளும்படி செய்கிற வாதங்களை இனி நாம் பரிசீலிக்க முற்படுவோம்.

மதிப்பு வாய்ந்த பத்திரிகையான ''ரேச்'' எவ்வித வாதங்களையும் கூறவில்லை; அது போல்ஷெவிக்குகளின்மீது பொறுக்கு மணிகளான ஆத்திரச் சொற்களை மட்டுமே வசை மாரியாகப் பொழிகின்றது. நாம் மேலே எடுத்துக் காட்டியுள்ள மேற்கோள், ''ரேச்'' போல்ஷெவிக்குகளை அதிகாரத்தைக் கைப்பற்றும்படி ''தூண்டுகிறது'' என்று எண்ணுவதும், அதை வைத்துக்கொண்டு ''தோழர்களே, எச்சரிக்கையாக இருங்கள், எதிரிகள் சொல்லும் யோசனை நிச்சயம் தீமை பயப்பதாகும்!'' என்று சிந்திப்பதும் மிகவும் தவறு என்று—மற்ற விஷயங்களோடு கூட—காட்டுகிறது. பொதுவான, ஸ்தூலமான விஷயங்களை நடை முறைக்குரிய வகையில் சீர் தூக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக பூர்ஷ்வா வர்க்கத்தினர் நம்மை அதிகாரத்தைக் கைப்பற்றும் படி ''தூண்டுகிறார்கள்'' என்ற சாக்கை ''ஏற்றுக் கொள்ளும்'' நிலைக்கு நாம் வந்து விட்டோமானால் பூர்ஷ்வா வர்க்கத்தினரால் நாம் ஏமாற்றப்படுவோம்; ஏனென்றால், போல்ஷெவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதினால் கோடிக்கணக்கான

கேடுகள் விளையும் என்று அவர்கள் எப்போதுமே துவேஷத்துடன் ஜோஸ்யம் சொல்லித்தான் வருவார்கள். ''போல்ஷெவிக்குகளை அதிகாரத்தைக் கைப்பற்ற அனுமதித்துவிட்டு, பிறகு நொறுக்குவதுதான் அவர்களை உடனடியாகவும் 'வரும் பல ஆண்டுகளாகவும்' தலைதூக்க விடாதபடி செய்வதற்குத் தலைசிறந்த வழியாகும்'' என்று அவர்கள் நிச்சயமாக எப்போதுமே துவேஷத்துடன் கூக்குரலிட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். இப்படிப்பட்ட கூக்குரல்களும் ''தூண்டுதல்'' என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம், ஆனால் எதிர்க் கோணத்திலிருந்து மட்டுமே. காடெட்டுகளும், பூர்ஷ்வாக்களும் அதிகாரத்தைக் கைப்பற்றும்படி நமக்கு எந்த வகையிலும் இப்பொழுதும் ''புத்திமதி கூற'' வில்லை, என்றைக்கும் ''புத்திமதி கூறின''தில்லை. தீர்க்க முடியாத அதிகாரப் பிரச்சினைகள் என்று சொல்லப்படுபவற்றைக் கொண்டு அவர்கள் நம்மைப் பயமுறுத்தப் பார்க்கிறார்கள்.

கூடாது! அரண்டு கிடக்கும் பூர்ஷ்வாக்களின் கூக்குரல்களைக் கேட்டு நாம் பயத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது. நாம் உறுதியாக மனதிற்கொள்ள வேண்டியதென்னவென்றால், ''தீர்க்க முடியாத'' சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஒருபோதும் முற்பட்டதில்லை என்பதைத்தான். ஆனால் சோஷலிஸத்தை நோக்கிச் செல்வதற்குரிய உடனடி நடவடிக்கைகள் எடுப்பது என்பது முற்றிலும் தீர்க்கக் கூடிய பிரச்சினையேயாகும்; இந்த மிக இக்கட்டான நிலைமையில் அது ஒன்றுதான் வழி; அந்தப் பிரச்சினையைப் பாட்டாளி வர்க்கமும் ஏழை விவசாயிகளும் நடத்தும் சர்வாதிகாரத்தால் மட்டுமே தீர்க்க முடியும். ருஷ்யாவிலுள்ள பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தை எடுத்துக் கொண்டால் முன்னெப்போதையும்விட இப்போது, வேறெங்கேயும்விட இங்கே, அது வெற்றி—நிலையான வெற்றி—பெறுவது திண்ணம்.

ஏதாவதொரு குறிப்பிட்ட தருணத்தைப் பிரதிகூலமாக்கும் படியான ஸ்தூலமான சூழ்நிலைமைகளைப் பற்றி நாம் சுத்தமாய்க் காரியரீதியிலே விவாதிப்போம்; ஆனால் பூர்ஷ்வா வர்க்கத்தின் வெறிக் கூச்சல்களைக் கேட்டு ஒரு கணமேனும் நாம் அரண்டுவிடமாட்டோம்; மேலும், போல்ஷெவிக்குகள் அரசாங்க அதிகாரமனைத்தையும் கைப்பற்றுவது

என்ற பிரச்சினை உண்மையில் மிகவும் அவசர அவசிய மான பிரச்சினையாக ஆகி வருகிறது என்பதையும் நாம் மறக் கப் போவதில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குப் ''பக் குவ நிலை இன்னும் வரவில்லை'' என்று நாம் ஒப்புக்கொள் வதினால் ஏற்படுகிறதைவிட இதை மறந்துவிடுவதால் நமது கட்சிக்கு உண்டாகும் அபாயம் அளவிடற்கரியவாறு பெரிதா யிருக்கும். இந்த விஷயத்திலே இப்போது ''பக்குவமற்றது'' என்று எதுவுமே இருக்க முடியாது. பத்து லட்சத்தில் ஒருக் கால் ஒன்றிரண்டு போக மற்றப்படி முழுக்க முழுக்க எல்லா வாய்ப்புக்களும் இதற்குச் சாதகமாகவே இருக்கின்றன.

''ரேச்சின்'' கோபமிக்க வசை மாரிபற்றி நாம் சொல் லக் கூடியதும், சொல்லித் தீர வேண்டியதும் இதுதான்:

அங்கீகாரக் குரலைக் கேட்கின்றோம் நாம்
அமைந் திசைக்கும் பாராட்டின் ஒலியிலல்ல,
பொங்கு சினக் காட்டுக் கூச்சல்களிலே தான் [14]

பூர்ஷ்வா வர்க்கத்தினர் நம்மீது இவ்வளவு காட்டுத் தனமாகப் பகைமை பாராட்டுவதே, அவர்களின் ஆதிக்கத் தைத் தூக்கி யெறிவதற்கு வேண்டிய சரியான வழி வகை களை நாம் பொது மக்களுக்குக் காட்டி வருகின்றோம் என்ற உண்மைக்கு மிகத் தெளிவான சான்றுகளில் ஒன்றாகும்.

* * *

''தேலோ நரோதா'' பத்திரிகை, ஒருநாளுமில்லாத திருநாளாக, இந்தத் தடவை தனது வசை மொழிகளால் நம்மைக் கௌரவித்து அருளவோ, வாதம் என்ற எதையும் ஒப்புக்குக்கூடக் காட்டவோ இல்லை. ''போல்ஷெவிக் கட்சி யினருக்கு மந்திரி சபை அமைக்க வேண்டிய கடமை ஏற் படும்'' என்ற சாத்திய நிலையைக் காட்டி, மறைமுகமான முறையில், ஒரு ஜாடை மூலம், நம்மைப் பயமுறுத்த மட்டுமே அது முயற்சிக்கிறது. நம்மைப் பயமுறுத்துவதாக முயற் சிக்கும் போது சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், கிலி பிடித்த மிதவாதிகளைப் பீடித்திருக்கும் பேயைக் கண்டு தாங்களே மரண கிலி யடித்துக் கிடக்கிறார்கள் என்று நான் திட்டமாக ஒப்புக்கொள்கிறேன். மத்திய நிர்வாகக் கமிட்டி போன்ற

மிகமிக உயர்ந்தவையும், மிகமிக அழுகிப் போனவையுமான ஸ்தாபனங்களிலும், இவை போன்ற ''தொடர்புள்ள'' (அதாவது, அப்பட்டமாகச் சொல்வதானல், காடெட்டுக ளுடன் பழகுவதற்கும், அவர்களுடன் கூடிக்குலாவுவதற்கு மான) குழுக்களிலும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் சில போல்ஷெவிக்குகளைப் பயமுறுத்துவதில் வெற்றிகொள்கின் றனர் என்றும் நான் அதே போலத் திட்டமாக ஒப்புக்கொள் கிறேன். ஏனென்ருல், முதலாவதாக, இந்த மத்திய நிர் வாகக் கமிட்டி, ''பூர்வாங்க பார்லிமென்ட்'', முதலிய வற்றில் உள்ள சூழ்நிலை மிகவும் வெறுக்கத்தக்கது, குமட்ட லெடுக்கும் அளவிற்கு நாற்றமெடுத்துப் போய்க் கிடக்கிறது. நீண்ட காலம் அதைச் சுவாசிப்பது எந்த மனிதனுக்கும் தீங்கிழைக்கக் கூடியதாகும். இரண்டாவதாக, உள்ளார்ந்த உணர்ச்சி தொத்திக் கொள்ளும் இயல்புடையது. ஆகவே, உள்ளாரப் பயந்து கிடக்கும் பிலிஸ்டைன் தனிப்பட்ட புரட்சி வாதியைக்கூட தாற்காலிகமாகத் தன்னைப் போலவே பிலிஸ் டைனுக மாற்றிவிட முடியும்.

துரதிர்ஷ்டவசத்தால் காடெட்டுகளோடு சேர்ந்து மந் திரியாக இருந்திருப்பவனே, அல்லது காடெட்டுகளின் அபிப் பிராயத்தில் மந்திரியாகத் தகுந்தவனே ஆன சோஷலிஸ்ட் புரட்சிவாதி ஒருவனின் உளமார்ந்த பயத்தை, ''மனிதத்துவ முறையிலே'' நாம் எவ்வளவுதான் புரிந்து கொள்ளக் கூடு மென்ருலுங்கூட நாமே அரண்டுவிடும் நிலைக்கு வந்துவிட் டால் பாட்டாளி வர்க்கத்துக்குத் துரோகம் புரியும் அளவுக்கு மிகமிக சுலபமாகச் செல்லக் கூடிய அரசியல் தவறு செய்த வர்களாவோம். கனவான்களே! உங்களுடைய காரியரீதி யான வாதங்களைச் சொல்லுங்கள்! உங்களுடைய பயத்தைக் கண்டு நாங்களும் பயப்படும் நிலைக்கு வருவோம் என்று மனக் கோட்டை கட்டாதீர்கள்!

* * *

இம்முறை ''நோவயா ஷிஸ்ன்'' ஒன்றில்மட்டுமே காரிய ரீதியான வாதங்களை நாம் காண்கிருேம். அது இப்போது பூர்ஷ்வாக்களுக்கு வக்காலத்து வாங்கும் பாத்திரத்தில் வெளிப்பட்டிருக்கிறது. போல்ஷெவிக்குகளுக்கு வக்காலத்து

வாங்குவதைவிட இதுவே அதற்குச் சாலப் பொருத்தமான பாத்திரமாகும். போல்ஷெவிக்குகளுக்காக வக்காலத்து வாங்குவது எல்லாவிதத்திலும் இனிய சுபாவம் படைத்த இந்தச் சீமாட்டிக்கு[15] ''அதிர்ச்சியைத்'' தருகிறது என்பது வெளிப்படை.

இந்த வக்கீல் ஆறு வாதங்கள் கூறுகிறார்:

1) பாட்டாளி வர்க்கம் ''நாட்டின் இதர வர்க்கங்களிடமிருந்து தனிமைப்பட்டிருக்கிறது'';

2) அது ''ஜனநாயகத்தின் உண்மையான உயிர்ப்புள்ள சக்திகளிடமிருந்தும் தனிமைப்பட்டிருக்கிறது'';

3) அது ''நிர்வாக முறையிலே அரசாங்க இயந்திரத்தை ஏற்றுக்கொண்டு செலுத்த முடியாது'';

4) அந்த அரசாங்க இயந்திரத்தை ''இயக்கிச் செல்லவும்'' அதனால் முடியாது;

5) ''நிலைமை மிகவும் சிக்கலானது''.

6) ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை மட்டுமின்றி, அத்துடன் புரட்சி முழுவதையும் அப்படியே வெள்ளத்திலடித்துச் செல்லும்படியான எதிர்ப்புச் சக்திகளின் நெருக்குதல் பூராவையும்'' அதனால் ''எதிர்த்து நிற்கவும் முடியாது''.

''நோவயா ஷிஸ்ன்'' முதல் வாதத்தை எள்ளி நகையாடத்தக்க விதத்தில் விகாரமாக வரையறுக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்திலும் அரை-முதலாளித்துவ சமுதாயத்திலும் பூர்ஷ்வா வர்க்கம், குட்டி பூர்ஷ்வா வர்க்கம் (விவசாயி மக்களே அதன் பிரதானமான பிரதிநிதி), பாட்டாளி வர்க்கம் ஆகிய மூன்று வர்க்கங்கள்மட்டுமே உண்டு என்பதை நாமறிவோம். விவாதத்திலிருக்கும் விஷயம் பூர்ஷ்வாக்களுக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டமாயிருக்கையில், பூர்ஷ்வாக்களுக்கு எதிரான புரட்சியாக இருக்கையில், பாட்டாளி வர்க்கம் இதர வர்க்கங்களிடமிருந்து தனிமைப்பட்டிருக்கிறது என்று கூறுவதின் பொருள் என்ன?

விவசாயி மக்களிடமிருந்து பாட்டாளி வர்க்கம் தனிமைப்பட்டிருக்கிறது என்றுதான் ''நோவயா ஷிஸ்ன்'' கூற விரும்பியது என்பது வெளிப்படை. ஏனெனில் நிலப்பிரபுக்களை அது குறித்திருக்க முடியாது. இருந்தாலும், விவசாயி

மக்களிடமிருந்து பாட்டாளி வர்க்கம் இப்பொழுது தனிமைப்பட்டிருக்கிறது என்று அதனுல் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் கூற முடியவில்லை. அவ்வாறு கூறுவது பச்சைப் புளுகு என்று பளிச்செனத் தெரிந்துவிடும்.

ஒரு முதலாளித்துவ நாட்டில்—அதிலும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிரான புரட்சியில் — குட்டி பூர்ஷ்வா வர்க்கத்திடமிருந்து பாட்டாளி வர்க்கம் ருஷ்யாவில் இன்று இருப்பது போன்று குறைவாகத் தனிமைப் பட்டிருப்பதைக் கற்பனை செய்து பார்ப்பதும் கஷ்டமாகும். இதைப் பற்றிய யதார்த்தரீதியான, மறுத்தற்கியலாத சான்ருக, கெட்ட பெயர் எடுத்த ''ஜனநாயக'' மகாநாடு என்ற த்ஸெரெத்தேலியின் ''புலீகின் டூமாவில்''[16] பூர்ஷ்வா வர்க்கத்துடன் கூட்டணி யமைப்பதை ஆதரித்தும், எதிர்த்தும் ''குரியாக்கள்''[17] தந்துள்ள வாக்குகளின் புத்தம் புதிய கணக்கு விவரம் நம்மிடமிருக்கிறது. சோவியத்துக்களின் குரியாக்களை எடுத்துக்கொண்டால், நாம் காண்பது:

	கூட்டணியை ஆதரிப்போர்	கூட்டணியை எதிர்ப்போர்
தொழிலாளிகள்-போர்வீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள்	*83*	*192*
விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள்	*102*	*70*
எல்லா சோவியத்துக்களும் சேர்ந்து மொத்தம்	*185*	*262*

இவ்வாறு, மொத்தத்தில் பெரும்பான்மையோர் பூர்ஷ்வாக்களுடன் கூட்டணி கூடாது என்ற பாட்டாளிவர்க்கத்தின் கோஷத்தையே ஆதரிக்கிருர்கள். காடெட்டுகள்கூட சோவியத்துக்களில் போல்ஷெவிக்குகளின் செல்வாக்கு வளர்ந்துள்ளதை ஒப்புக்கொள்ள நேர்ந்துள்ளதை நாம் மேலே பார்த்தோம். அதிலும் இங்கே நாம் எடுத்துக் காட்டியிருப்பது சோவியத்துக்களின் நேற்றைய தினத் தலைவர்களான

சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் மென்ஷெவிக்குகளும் கூட்டிய மகாநாடாகும். மத்திய ஸ்தாபனங்களில் இவர்களுக்குத்தான் நிச்சயமான பெரும்பான்மையுள்ளது. ஆகவே, சோவியத்துக்களில் உண்மையில் எந்த அளவிற்கு போல்ஷெவிக்குகள் பெரும்பான்மையோராக உள்ளனர் என்பது இங்கே குறைவாகவே மதிப்பிடப்பட்டுள்ளது என்பது வெளிப்படை.

பூர்ஷ்வா வர்க்கத்துடன் கூட்டணியாக இணைவது, உடனடியாக நிலப்பிரபுக்களின் நிலங்களை விவசாயிக் கமிட்டிகளுக்கு மாற்றிக் கொடுப்பது என்ற இவ்விரு விஷயங்களைப் பற்றி, தொழிலாளிகள்-போர்வீரர்கள்-விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களில் ஏற்கனவே போல்ஷெவிக்குகளுக்குப் பெரும்பான்மை ஆதரவு, பொது மக்களின் பெரும்பான்மை ஆதரவு, குட்டி பூர்ஷ்வாக்களின் பெரும்பான்மை. ஆதரவு இருக்கிறது. செப்டம்பர் 18ல் பெத்ரோகிராத் நகரில் நடைபெற்ற விவசாயிகள் பிரதிநிதிகளின் ஸ்தல சோவியத்துக்களின் மகாநாடு பற்றிய விவரம், சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளின் பத்திரிகையாகிய "ஸ்நாமியா த்ரூதாவின்"[18] 25வது இதழிலிருந்து எடுத்து செப்டம்பர் 24ம் தேதிய "ரபோச்சிய் பூத்தின்" 19வது இதழில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது. (காஸ்த்ரொமா, மாஸ்கோ, சமாரா, தௌரீதா என்ற குபேர்னியாக்களைச் சேர்ந்த) நான்கு விவசாயி சோவியத்துக்களின் நிர்வாகக் கமிட்டிகள் இந்த மகாநாட்டில் வரம்பிலாக் கூட்டணிக்கு ஆதரவாக வோட்டளித்தன. (விளாதீமிர், ரியஸான், கருங்கடல் என்ற) மூன்று குபேர்னியாக்களையும், இரண்டு சேனைகளையும் சேர்ந்த நிர்வாகக் கமிட்டிகளும் காடெட்டுகளில்லாத கூட்டணிக்கு ஆதரவாக வோட்டளித்தன. இருபத்து மூன்று குபேர்னியாக்களையும் நான்கு சேனைகளையும் சேர்ந்த நிர்வாகக் கமிட்டிகள் கூட்டணிக்கு எதிராக வோட்டளித்தன.

ஆகவே, விவசாயிகளில் பெரும்பான்மையோர் கூட்டணிக்கு எதிராகவுள்ளனர்!

இது "பாட்டாளி வர்க்கம் தனிமைப்பட்டிருக்கிறது" என்ற கூற்றுக்கு மறுப்பு.

போகிற போக்கிலே, இதை யொட்டிக் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம் உண்டு. தொலைவிலிருக்கும்

சமாரா, தௌரீதா, கருங்கடல் குபேர்னியாக்கள் மூன்றும் கூட்டணியை ஆதரித்து வோட்டளித்துள்ளன. அங்கு, மற்ற இடங்களைவிட மிக அதிகமாகப் பணக்கார விவசாயிகளும் பெரும் நிலப்பிரபுக்களும் இருக்கின்றனர். அவர்கள் கூலிக்கு வேலையாட்களை அமர்த்திக்கொள்கின்றனர். இவை தவிர, (விளாதீமிர், ரியஸான், காஸ்த்ரொமா, மாஸ்கோ என்ற) நான்கு தொழில் வளர்ச்சி பெற்ற குபேர்னியாக்களும் கூட்டணியை ஆதரித்து வோட்டளித்துள்ளன. ருஷ்யாவிலுள்ள பெரும்பாலான மற்ற குபேர்னியாக்களைவிட இவற்றில் விவசாயி பூர்ஷ்வாக்கள் அதிக பலமுடையவர்கள். இவ்விஷயத்தைப் பற்றி மேலும் அதிக விரிவான விவரக் குறிப்புகள் சேகரிப்பதும், மிக மிகப் ''பணக்காரர்களான'' விவசாயிகள் இருக்கும் குபேர்னியாக்களில் உள்ள ஏழ்மை மிக்க விவசாயிகள் பற்றிய தகவல் கிடைக்கக் கூடுமா என அறிந்து கொள்வதும் சுவாரசியமாக இருக்கும்.

மேலும், ''தேசீய இனக் குழுக்கள்'' கூட்டணியை எதிர்த்து நிற்பவர்களையே மிகமிகப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ளன என்பதும் சுவாரசியமான செய்தியாகும். அதாவது எதிர்த்தவர்கள் 40 பேர், ஆதரித்தவர்கள் 15 பேர். ருஷ்யாவிலுள்ள உரிமையற்ற தேசீய இனங்கள் மீது நெப்போலியப் போக்குள்ள கெரேன்ஸ்கியும் அவன் கும்பலும் கையாண்ட நாடுபிடிக்கும் பச்சை பலாத்காரக் கொள்கை ஒரு பலனை அளித்துவிட்டது. ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களின் பொது மக்களின் பரந்த பகுதியினர், அவர்களில் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தைச் சேர்ந்த மிகப் பலர், ருஷ்ய பூர்ஷ்வா வர்க்கத்தைவிட ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்திடம் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். ஏனெனில் ஒடுக்கும் தேசீய இனங்களுக்கெதிராக ஒடுக்கப்பட்ட தேசீய இனங்கள் விடுதலைப் போராட்டம் நடத்துவது என்பது இங்கு இன்றையச் சரித்திரப் போக்காகும். பூர்ஷ்வா வர்க்கத்தினர், ஒடுக்கப்பட்ட இனங்களின் சுதந்திர லட்சியத்திற்கு வெறுக்கத்தக்க முறையில் துரோகம் செய்துவிட்டனர்; பாட்டாளி வர்க்கமோ சுதந்திர லட்சியத்தின்பால் விசுவாசம் செலுத்துகிறது.

இன்றைய காலகட்டத்தில் ருஷ்யக் குட்டி பூர்ஷ்வா ஜனப்பகுதிகளுக்கு தேசீய இனப் பிரச்சினையும் நிலப் பிரச்சினையும் அடிப்படையான பிரச்சினைகளாகும். இதில் மறுப்புக்கே இடமில்லை. சிறப்பாக இந்த இரண்டு பிரச்சினைகள் சம்பந்தமாகவும் பாட்டாளி வர்க்கம், ''தனிமைப்பட்டே இருக்கவில்லை.'' பொது மக்களில் பெரும்பான்மையோர் அதன் பக்கம் இருக்கின்றனர். இந்த இரண்டு பிரச்சினைகள் சம்பந்தமாக, பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் திடமான, உண்மையில் ''புரட்சிகரமான ஜனநாயகக்'' கொள்கையைக் கடைப்பிடிக்கும் சக்தி பெற்றுள்ளது. அந்தக் கொள்கை குடி மக்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவைப் பாட்டாளி வர்க்க அரசாங்க அதிகாரத்துக்கு உறுதியாக்குவதோடின்றி, பொது மக்களிடையே புரட்சிகரமான உற்சாகம் வெடித்துக் கிளம்புவதையும் உறுதியாக்கிவிடும். ஜாரிஸத்தின்கீழ் விவசாயிகளின்மீது நிலப்பிரபுக்கள் செலுத்திய கொடிய ஒடுக்குமுறையும், உக்ரேனிய தேசீய இனத்தாரின் மீது பெரிய ருஷ்ய தேசீய இனத்தார் செலுத்திய கொடிய ஒடுக்குமுறையும் இருந்து வந்தன; குடியரசின்கீழ் அதே கொள்கையைப் படாடோபமான வார்த்தைகளால் மூடிமறைத்துத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் முயற்சி வேட்கையும் இருந்து வந்தது; (விவசாயி மக்களுக்கும் ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களுக்கும் கெரேன்ஸ்கிய் பரிசாக வழங்கி வரும்) பிடுங்கல், பழிப்பு, மாய்மாலங்கள், ஒத்திப் போடல், மறைமுக மோசடிகள், போக்குக் காட்டி மழுப்பல், முதலியன இருந்து வந்தன. பாட்டாளி வர்க்கம் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றினல்தான் முதல் தடவையாகப் பொது மக்களுக்குச் சர்க்காரிடமிருந்து இத்தகைய ஒடுக்குமுறை அல்ல, ஆழ்ந்த அனுதாபம் கிடைக்கும், அந்த அனுதாபம் செய்கைகளிலே நிரூபிக்கப்படும், நிலப்பிரபுக்களை எதிர்த்து உடனடியான, புரட்சிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும், பின்கள், உக்ரேனியர், பைலோரஷ்யர், முஸ்லிம்கள், முதலானோருக்குப் பூர்ண சுதந்திரம் உடனடியாகத் திரும்ப வழங்கப் பெறும்.

சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் மென்ஷெவிக்குகளுமான கனவான்களுக்கு இது நன்ருய்த் தெரியும். அதனல்

தான் கூட்டுறவுச் சங்கங்களின்[19] தலைவர்களாகிய அரைக் காடெட்டுகளையும் தங்களுடன் இழுத்துப் போட்டுக்கொண்டு அவர்கள் உதவியோடு பொது மக்களுக்கு எதிராகத் தங்கள் பிற்போக்கு ஜனநாயகக் கொள்கையைக் கொண்டு செலுத்தி வருகின்றனர். அதனுல்தான் அவர்கள் பொது மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்பதற்கோ, குடியொப்பம் வேண்டலுக்கோ ஒருபோதும் துணிய மாட்டார்கள்; நடைமுறைக் கொள்கையின் எவையாகிலும் அம்சங்களைப் பற்றி, உதாரணமாக நிலப்பிரபுக்களின் நிலங்களை உடனே விவசாயிக் கமிட்டிகளிடம் ஒப்படைப்பதா, பின்கள், உக்ரேனியர் ஆகியோரின் இன்னின்ன கோரிக்கைகளுக்கு இணங்குவதா என்பன போன்ற பிரச்சினைகளைப்பற்றிக் குறைந்த பட்சம் எல்லா ஸ்தல சோவியத்துக்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் வோட்டெடுப்பு நடத்த ஒருபோதும் துணிய மாட்டார்கள்.

தவிர, இன்றைய வாழ்க்கை முழுவதின் அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகிய சமாதானப் பிரச்சினை பற்றிய நிலை என்ன? பாட்டாளி வர்க்கம் ''இதர வர்க்கங்களிடமிருந்து தனிமைப்பட்டிருக்கிற'' தாம்.... இந்த விஷயத்தில் பாட்டாளி வர்க்கம் உண்மையில் தேச முழுமைக்கும் பிரதிநிதியாக, எல்லா வர்க்கங்களைச் சேர்ந்த உயிர்ப்புள்ள நேர்மையான எல்லாப் பகுதிகளின் பிரதிநிதியாக, குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தில் மிகமிகப் பெரும்பாலானவர்களின் பிரதிநிதியாக நிற்கிறது. ஏனெனில் பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான், அதிகாரத்தைப் பெற்றதுமே, போரில் ஈடுபட்டுள்ள எல்லா நாட்டினருக்கும் உடனடியாக நியாயமான சமாதானத்தைப் பிரேரிக்கும்; பாட்டாளி வர்க்கம் ஒன்றுதான் எவ்வளவு முடியுமோ அவ்வளவு மிகமிக விரைவாகவும் மிக மிக நியாயமாகவும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான உண்மையில் புரட்சிகரமான நடவடிக்கைகளை (இரகசிய உடன்படிக்கைகளை வெளியிடுதல், முதலியவற்றை) எடுக்கத் துணியும்.

இல்லை. பாட்டாளி வர்க்கம் தனிமைப்பட்டிருக்கிறது என்று கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் ''நோவயா ஷிஸ்னைச்'' சேர்ந்த கனவான்கள், அதன்மூலமாக, பூர்ஷ்வாக்களைக் கண்டு தாங்கள் நடுங்கிக் கொண்டிருப்பதைத்தான் காட்டிக்

கொள்கிறர்கள். குறிப்பாக இந்தச் சமயத்தில்தான், பாட்டாளி வர்க்கம் குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தில் பெரும்பான்மையிடமிருந்து ''தனிமைப்பட்டிருக்க'' வில்லை என்பதைத் தான் ருஷ்யாவிலுள்ள யதார்த்த நிலைமை சந்தேகத்திற்கிடமின்றிக் காட்டுகிறது. சிறப்பாக இந்த நேரத்தில்தான், ''கூட்டணியால்'' நேர்ந்த, துயர் மிகுந்த அனுபவத்திற்குப் பிறகு, பாட்டாளி வர்க்கம் பொது மக்களில் பெரும்பாலான வர்களது ஆதரவைப் பெற்று விளங்குகிறது. ஆகவே நீடித்து அரசாள்வதற்குரிய இ ந் த வாய்ப்பு போல்ஷெவிக் கட்சிக்கு நிச்சயமாக இருக்கிறது.

* * *

இரண்டாவது வாதம், பாட்டாளி வர்க்கம் ''ஜனநாயகத்தின் உண்மையான உயிர்ப்புள்ள சக்திகளிடமிருந்தும் தனிமைப்பட்டிருக்கிறது'' என்பதாகும். இதன் பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்வது முடியாத காரியம். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் பிரெஞ்சுக்காரர்கள் கூறுவது போல, அது ஒருவேளை ''கிரீக் மொழியாக'' இருக்கலாம்.

''நோவயா ஷிஸ்னைச்'' சேர்ந்த எழுத்தாளர்கள் மந்திரிப் பதவிக்குத் தகுதி வாய்ந்தவர்கள் அடங்கிய ஒரு கும்பலாகும். காடெட்டு மந்திரி சபையிலும் பதவி வகிக்க அவர்கள் முற்றிலும் தகுந்தவர்கள். ஏனெனில் அந்த மந்திரிகளுக்குத் தேவையாயுள்ளதெல்லாம், யுக்திப் பொருத்தமாகத் தோன்றுகிற, மெருகிட்ட சொற்றொடர்களைக் கூறும் திறமைதான். இந்தச் சொற்றொடர்கள் பொருளற்றவை. அவற்றின் உதவியால் எவ்விதக் கேவலமான செய்கைகளையும் மூடி மறைக்க முடியும். ஆகவே அவை ஏகாதிபத்தியவாதிகள், சமுதாய-ஏகாதிபத்தியவாதிகள் ஆகியோரின் பாராட்டைப் பெறுவது நிச்சயம். ''நோவயா ஷிஸ்ன்காரர்களுக்கு'', பாட்டாளி வர்க்கம் ஜனநாயகத்தின் உண்மையான உயிர்ப்புள்ள சக்திகளிடமிருந்து தனிமைப்பட்டிருக்கிறது என்று கூறுவதற்கு நிச்சயமாகக் காடெட்டுகள், பிரெஷ்கோவ்ஸ்கயா, பிளெகானவ் ஆகியோர், அவர்கள் கூட்டத்தாரின் பாராட்டுதல் கிடைக்கும். ஏனென்றல், அதன் மூலம் அவர்கள் மறைமுகமாகச் சொல்வது—அல்லது கொல்வதாகப் பொருள்

படுவது — **கா**டெட்டுகள், பிரெஷ்கோவ்ஸ்கயா, பிளெகானவ், கெரேன்ஸ்கிய் ஆகியோரும் அவர்கள் கூட்டத்தாரும் தான் ''ஜனநாயகத்தின் உயிர்ப்புள்ள சக்திகள்'' என்பதாகும்.

இது உண்மையல்ல. அவர்கள் உயிரற்ற சக்திகள். கூட்டணியின் வரலாறு இதை மெய்ப்பித்துள்ளது.

பூர்ஷ்வாக்களாலும், பூர்ஷ்வா அறிவுஜீவிகளுக்குரிய சூழ்நிலையாலும் அச்சுறுத்தபபட்டு நிற்கும் ''நோவயா ஷிஸ்ன் காரர்கள்'', ''வோல்யா நரோதா''[20], ''யெதீன்ஸ்த்வோ''[21], பத்திரிகைகளைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் போலவே ஆன காடெட்டுகளிலிருந்து எந்த அடிப்படை அம்சங்களிலும் மாறுபட்டிராத, சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் **வலதுசாரிப்** பகுதி தான் ''உயிர்ப்புள்ள'' சக்திகள் என்று கருதுகின்றனர். ஆனல் நாமோ, குலாக்குகளோடு[22] இல்லாமல் பொது மக்களுடன் தொடர்புள்ளவர்களை மட்டுந்தான், கூட்டணியின் படிப்பினைகளால் அக்கூட்டணியிடமே வெறுப்படைந்து விலகி விட்டவர்களை மட்டுந்தான், உயிர்ப்புள்ள சக்தியாகக் கருதுகிறோம். குட்டி பூர்ஷ்வா ஜனநாயகத்தின் ''செயல்பூர்வமான உயிர்ப்புள்ள சக்திகளை'' சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் இடதுசாரிப் பகுதி தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. சிறப்பாக எதிர்ப்புரட்சி தொடங்கிய ஜூலை மாதத்திலிருந்து இப்பகுதி முன்னிலும் பலம் பெற்றிருக்கிறது என்ற விஷயம் பாட்டாளி வர்க்கம் தனிமைப்பட்டிருக்க **வில்லை** என்பதை உணர்த்தும் மிகத் திண்ணமான யதார்த்த அடையாளங்களில் ஒன்றாகும்.

சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் நடுநிலைப் பகுதியினரின் ஊசலாட்டம் மிகச் சமீபத்தில் இடதுசாரிப் போக்கிலே திரும்பியிருப்பது இதை இன்னும் தெளிவாக வெளிப்படையாக்கி யுள்ளது. கிஷ்கின் கும்பலுடன் அமைக்கப்பட்ட புதிய கூட்டணியைத் தமது குழுவால் ஆதரிக்க முடியாது என்று செர்னோவ் செப்டம்பர் 24ம் தேதி செய்த அறிக்கை இந்த ஊசலாட்டத்தை நிரூபிக்கிறது. சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சிக்கு நகர வட்டாரங்களிலும், சிறப்பாக நாட்டுப்புறங்களிலும் கிடைத்த வோட்டுக்களைக் கொண்டு

பார்க்கும்போது, அதுதான் தலைமை வகிக்கும், ஆதிக்கம் பெற்ற கட்சியாகும். சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் நடு நிலைப் பகுதியினரே இந்தக் கட்சியின் பிரதிநிதிகளில் மிகப் பெரும்பான்மையோராக இருந்து வந்திருக்கின்றனர். இந்தப் பகுதியினரின் இடதுசாரி ஊசலாட்டமானது ''தேலோ நரோதாவிலிருந்து'' நாம் மேற்கோள் காட்டியுள்ள அறிக்கை, அதாவது சில சந்தர்ப்பங்களில் போல்ஷெவிக்குகளை மட்டும் கொண்ட அரசாங்கத்திற்கும் ஜனநாயகம் ''முழு ஆதரவு அளிக்க உத்தரவாதம் செய்ய வேண்டும்'' என்ற அறிக்கை எந்த வகையிலும் வெற்று வார்த்தைகளல்ல என்பதை நிரூபிக்கிறது.

கிஷ்கினுடன் கூடிய புதிய கூட்டணிக்கு சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளின் நடுநிலைப் பகுதியினர் ஆதரவு தர மறுத்ததும், (காக்கஸஸிலுள்ள ஜொர்தானியா போன்ற) நாட்டுப் புறங்களில் உள்ள **மென்ஷெவிக்-தற்காப்புவாதிகளில் கூட்டணியை எதிர்ப்போர்களின்** ஏற்றப் பெருக்கமும், இதுவரை மென்ஷெவிக்குகளையும், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளையும் பின்பற்றி வந்த **பொது மக்களின்** ஒரு பகுதி போல்ஷெவிக்குகளை மட்டும் கொண்ட அரசாங்கத்திற்கு ஆதரவு தரும் என்பதற்கு யதார்த்தரீதியான சான்றுகள் ஆகும்.

குறிப்பாக ஜனநாயகத்தின் **உயிர்ப்புள்ள** சக்திகளிடமிருந்துதான் ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் இப்பொழுது தனிமைப்பட்டிருக்கவில்லை.

* * *

மூன்ருவது வாதம்: பாட்டாளி வர்க்கம் ''நிர்வாக முறையிலே அரசாங்க இயந்திரத்தை ஏற்றுக் கொண்டு செலுத்த முடியாது'' என்பது. ஒருவேளை இதுவே மிகவும் வழக்கமான, மிகவும் அடிபட்டு வருகிற வாதமாகும். இந்தக் காரணத்திஞலும், அத்துடன் வெற்றி பெற்ற பின்னர் பாட்டாளி வர்க்கத்திற்கு எதிர்ப்படப் போகின்ற மிக **முக்கியமான, கடினமான** கடமைகளில் ஒன்றை இது சுட்டிக்காட்டுவதாலும் இந்த வாதம் மிகவும் கவனத்திற்குரியது. இக்கடமைகள் மிக்க கடினமானவை என்பதில் ஐயம் எதுவுமில்லை. ஆனல் சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக்கொள்ளும் நாம்,

இந்தக் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்காக இக்கஷ்டத்தைச் சுட்டிக்காட்டுவோமானுல், நடைமுறையில் நமக்கும் பூர்ஷ்வா வர்க்கத்தின் அடித் தொண்டர்களுக்கும் இடையே வித்தியாசம் முற்றிலும் இல் லாது போய் விடும். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கட மைகளை நிறைவேற்றுவதிலுள்ள கஷ்டத்தை உணர்வதன் மூலம் தூண்டப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் ஆதரவாளர் கள் இந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான வழிமுறை களை முன்னிலும் கவனத்துடனும் காரியப் பாங்குடனும் ஆய்ந்தறிய வேண்டும்.

அரசாங்க இயந்திரம் என்று சொல்லும்போது நாம் முக்கியமாகக் குறிப்பது நிரந்தரமான ராணுவம், போலீஸ் படை, அதிகார வர்க்கம் ஆகியவற்றையே. நிர்வாக முறை யிலே அரசாங்க இயந்திரத்தைப் பாட்டாளி வர்க்கம் ஏற்றுக்கொண்டு செலுத்த முடியாது என்று கூறிய ''நோவ யா ஷிஸ்ன்'' எழுத்தாளர்கள் கலப்பற்ற அறியாமையைக் காட்டிக்கொள்கிருர்கள்; வாழ்க்கையில் தென்படும் உண்மை களைக் கவனித்துப் பார்க்கவோ, போல்ஷெவிக் நூல்களில் வெகு காலத்திற்கு முன்பே கொடுக்கப்பட்டுள்ள வாதங் களைக் கருத்திற்கொள்ளவோ மறுக்கின்றனர்.

''நோவயா ஷிஸ்ன்'' எழுத்தாளர்கள் அனைவரும் தங் களை மார்க்ஸீயவாதிகள் என்று கருதிக் கொள்ளாவிடினும், குறைந்த பட்சம் மார்க்ஸீயத்தை அறிந்தவர்களாயும், படித்த சோஷலிஸ்டுகள் என்றும் கருதிக்கொள்கிருர்கள். ஆனுல் மார்க்ஸ் பாரிஸ் கம்யூனுடைய[23] அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, பாட்டாளி வர்க்கம் தயாராக வுள்ள அரசாங்க இயந்திரத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அதை உபயோகிக்க முடியாது என்று கற்பித்திருக்கிருர்; பாட்டாளி வர்க்கம் இந்தப் பழைய இயந்திரத்தைத் தகர்த்தெறிந்து விட்டு அதற்குப் பதில் புதியது ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் போதித்துள்ளார் (''அரசாங்கமும் புரட்சியும். அரசாங்கம் பற்றிய மார்க்ஸீயப் போதனையும், புரட்சியில் பாட்டாளி வர்க்கம் ஆற்ற வேண்டிய கடமை களும்'' என்று தலைப்பிட்ட துண்டுப் பிரசுரத்தில் இது பற்றி

விவரமாகக் கூறியிருக்கிறேன்; அதன் முதல் பகுதி இப்போது முடிந்துள்ளது, விரைவில் வெளிவரும்). இப்புதுவகை அரசாங்க இயந்திரம் பாரிஸ் கம்யூனுல் ஆக்கப்பட்டிருந்தது. தொழிலாளிகள்-போர்வீரர்கள்-விவசாயிகள் பிரதிநிதிகளின் ருஷ்ய சோவியத்துக்கள் அதே வகையைச் சேர்ந்த ''அரசாங்க இயந்திரம்'' ஆகும். 1917 ஏப்ரல் 4ம் தேதியிலிருந்து இந்த விஷயத்தைப் பன்முறை குறித்துக் காட்டியிருக்கிறேன். போல்ஷெவிக் நூல்களிலும், போல்ஷெவிக் மகாநாடுகளின் தீர்மானங்களிலும் அதனைக் காணலாம். ''நோவயா ஷிஸ்ன்'' நிச்சயமாக மார்க்ஸின், போல்ஷெவிக்குகளின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறியிருக்கலாம். ஆனுல் போல்ஷெவிக்குகள் கடினமான பிரச்சினைகளில் விளையாட்டுத் தனமான போக்குடையவர்கள் என்று அடிக்கடி மிகுந்த கர்வத்தோடு கண்டித்து வந்துள்ள பத்திரிகை இப்பொழுது இவ்விஷயத்தைக் கவனிக்காது ஒரேயடியாகத் தட்டிக்கழிப்பது என்பது தனது மூளை வறட்சியைப் பறைசாற்றிக்கொள்வது போலாகும்.

பாட்டாளி வர்க்கம் ''அரசாங்க இயந்திரத்தை'' ''ஏற்றுக் கொண்டு'' ''அதை இயக்கிச் செல்ல'' முடியாது. ஆனுல் பழைய அரசாங்க இயந்திரத்தில் இருக்கிற அடக்குமுறைக்குரிய, பழகிப் படிந்து போன, திருத்த முடியாத பூர்ஷ்வா அம்சங்களையெல்லாம் தகர்த்து எறிந்துவிட்டு அதனிடத்தில் தனக்கே சொந்தமான புதிய அரசாங்க இயந்திரத்தை அமைத்துக்கொள்ள முடியும். தொழிலாளிகள்-போர்வீரர்கள்-விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் இவ்வகைப்பட்ட இயந்திரமே யாகும்.

''நோவயா ஷிஸ்ன்'' இந்த ''அரசாங்க இயந்திரத்தை'' முற்றிலும் மறந்துவிட்டது விபரீதம்தான் என்று சொல்லாமல் வேறு விதமாக வர்ணிக்கவே முடியாது. தத்துவ ரீதியான வாதங்களில் இப்படி நடந்துகொண்டு, ''நோவயா ஷிஸ்ன்காரர்கள்'' சாராம்சத்தில் பார்க்கும்போது, அரசியல் நடைமுறையில் காடெட்டுகள் என்ன செய்து வருகிறுர்களோ, அதைத்தான் அரசியல் தத்துவத் துறையில் செய்து வருகிறுர்கள். ஏனெனில், உண்மையாகப் பாட்டாளி வர்க்கத்திற்கும், புரட்சிகரமான ஜனநாயகத்துக்கும் புதிய அர

சாங்க இயந்திரம் தேவையில்லை யென்ருல், சோவியத்துக்கள் தங்கள் raison d'être*ஐ இழந்துவிடும், இருத்தலுக்கான உரிமையையே இழந்து விடும், அந்த நிலையில் காடெட்-கர்னீலோவ் குழுவினர் சோவியத்துக்களை ஒன்றுமில்லாதபடி யடித்துவிட முயற்சிப்பது சரியே ஆகும்.

தத்துவத் துறையில் ''நோவயா ஷிஸ்ன்'' செய்துள்ள இந்த விபரீதமான தவறும், அப்பத்திரிகையின் அரசியல் குருட்டுத்தனமும் மற்ருெரு காரணத்தால் மேலும் விபரீதமாக விளங்குகின்றன. அது என்னவெனில், மென்ஷெவிக்-இன்டர்நேஷனலிஸ்டுகள் கூட (அவர்களுடன் ''நோவயா ஷிஸ்ன்'' கடந்த பெத்ரோகிராத் நகர டூமா தேர்தல்களில் கூட்டணி வகுத்து இருந்தது) இந்தப் பிரச்சினையில் போல்ஷெவிக்குகளுடன் சிறிது இணக்கம் காட்டியுள்ளனர். உதாரணமாக, தோழர் மார்த்தவ் ஜனநாயக மகாநாட்டில் வாசித்த சோவியத் பெரும் பான்மையினரின் அறிக்கையில் நாம் காண்பதாவது:

''புரட்சி நடந்த முதல் நாட்களில் மக்களின் உண்மையான படைப்புத் திறனின் மகத்தான தூண்டுதலினுல் தோன்றிய தொழிலாளிகள்-போர்வீரர்கள்-விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள், பழைய ஆட்சி முறையின் சிதைந்த அரசாங்கத் திசுவுக்குப் பதிலாகப் புரட்சி அரசாங்கத்தின் புதிய திசுவாக ஏற்பட்டுள்ளன....''

இது ஓரளவு மிகையான சொல்லணியோடு கூறப்பட்டுள்ளது. அதாவது, உரையலங்காரம், தெளிவான அரசியல் சிந்தனைக் குறையை மூடி மறைக்கின்றது. சோவியத்துக்கள் இன்னும் பழைய ''திசுவிற்குப்'' பதிலாக ஏற்பட்டுவிடவில்லை, இந்தப் பழைய ''திசுவும்'' பழைய ஆட்சி முறையைச் சேர்ந்தது அல்ல, ஜாரிஸமும் பூர்ஷ்வா குடியரசும் சேர்ந்த அரசாங்க அமைப்பாகும். இவ்வாறிருப்பினும் ''நோவயா ஷிஸ்ன்காரர்களை''விட மார்த்தவ் இவ்விஷயத்தில் எவ்வளவோ உயர்வாக விளங்குகிருர்.

சோவியத்துக்கள் ஒரு புதிய அரசாங்க இயந்திரமாகும். இந்த அரசாங்க இயந்திரம் முதலாவதாக, தொழிலாளிகள்,

---

* இருத்தலுக்கான அடிப்படைக் காரணம்.—(ப-ர்.)

விவசாயிகள் கொண்ட, ஆயுதந்தாங்கிய படையை அளித்துள்ளது. பழைய நிரந்தர ராணுவத்தைப்போல் மக்களோடு தொடர்பற்ற படையல்ல இது, மக்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டது. ராணுவக் கண்ணேட்டத்துடன் நோக்குவோமெனில், முன்னிருந்த படைகளைவிட ஒப்பிடற்கியலாத அளவு அதிக வன்மை கொண்டது இப்படை. புரட்சிக் கண்ணேட்டத்துடன் நோக்குவோமெனில் இதற்குப் பதிலாக வேறென்றையும் அமைத்துவிட முடியாது. இரண்டாவதாக, இந்த அரசாங்க இயந்திரம், பொது மக்களுடன், பெரும்பான்மையான மக்களுடன் ஓர் இணைப்பைத் தருகிறது. இவ்வளவு நெருங்கிய, பிரிக்க முடியாத, சுலபமாகக் கட்டுப்படுத்தக் கூடிய, சுலபமாகப் புதுப்பித்துக்கொள்ளக் கூடிய, தொடர்பைக் கொஞ்சமேனும் ஒத்திருக்கக் கூடியதெதுவும், முன்னல் இருந்த அரசாங்க இயந்திரத்தில் கிடையாது. மூன்ருவதாக, இந்த அரசாங்க இயந்திரத்திலுள்ள நபர்கள், எந்த விதமான அதிகார வர்க்கச் சடங்குகளுமின்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, எப்பொழுது வேண்டுமாலுைம் மக்கள் சித்தப்படி வாபஸ் பெறப்படும் நிலையில் இருப்பவர்களாதலால் முன்னுளைய இயந்திரங்களைவிட இது எவ்வளவோ மிகுந்த ஜனநாயகத் தன்மை யுடையதாகும். நான்காவதாக, பலவகைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களோடும் இது நெருங்கிய தொடர்பை அமைத்துத் தருகிறது; இதன் காரணமாக, அதிகார வர்க்கச் சடங்குகளின்றிப் பல்வேறு விதமான, அடிப்படையான சீர்திருத்தங்களைச் செய்வது எளிதாகின்றது. ஐந்தாவதாக, முன்னணிப் படையின், அதாவது தொழிலாளிகள், விவசாயிகள் கொண்ட ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் வர்க்க உணர்வு மிகுந்த, செயலாற்றல் மிகுந்த, முற்போக்கான ஜனப் பகுதியின், ஸ்தாபன வடிவத்தை அது தருகிறது. ஆகவே, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் முன்னணிப் படைக்கு, இந்த வர்க்கங்களைச் சேர்ந்த, இதுவரை அரசியல் வாழ்க்கையிலிருந்து, சரித்திரத்திலிருந்து முற்றிலும் விலகி ஒதுங்கி நின்று வந்திருக்கும் பெருந்தொகையான ஜனத்திரள் முழுவதையும் மேல்நிலைக்கு உயர்த்தி, பயிற்சி அளித்து, போதனை தந்து, தலைமை தாங்கி நடத்திச் செல்லத் திறனளிக்கும் இயந்திரமாக இது அமைகிறது. ஆரு

வதாக, பார்லிமென்ட் ஆட்சி முறையின் அனுகூலங்களையும், உடனடியான, நேர்முகமான ஜனநாயக முறையின் அனுகூலங்களையும் இணைப்பதை இது சாத்தியம் ஆக்குகிறது. அதாவது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளிடையே சட்டமியற்றும் வேலைகளையும், சட்டங்களை அமுல் நடத்தும் வேலைகளையும் ஐக்கியப்படுத்தச் சாத்தியமளிக்கிறது. பூர்ஷ்வா பார்லிமென்ட் ஆட்சி முறையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இது ஜனநாயகத்தின் வளர்ச்சியில் ஒரு முன்னேற்றமாக விளங்குகிறது. இம் முன்னேற்றம் உலக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது.

1905ல் நமது சோவியத்துக்கள் கருவடிவில் தான் இருந்தன எனலாம்.[24] ஒரு சில வாரங்களே அவை உயிருடன் இருந்தன. அக்காலத்திய நிலைமைகளில், அவை எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியுறுவதற்கு இடமேயில்லை என்பது தெளிவு. 1917ம் ஆண்டுப் புரட்சியிலும் இத்தகைய வளர்ச்சிக்கு இன்னும் இடமேற்படவில்லை. ஏனெனில் ஒரு சில மாதங்கள் என்பது மிகக் குறுகிய காலம். ஆனால் முக்கிய விஷயம் என்ன வென்றால் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் தலைவர்கள் சோவியத்துக்களை வேசிநிலைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்; வெறும் பேச்சுக் கூடங்களாக, தலைவர்களின் சமரசக் கொள்கையின் ஒரு துணையுறுப்பாக, அவற்றின் பாத்திரத்தை இழிவுபடுத்தி விட்டார்கள். லீபெர், டான், த்ஸெரெத்தேலி, செர்னேவ் போன்றவர்களின் தலைமையின் கீழ் சோவியத்துக்கள் உயிருடன் அழுகி மட்கி வந்திருக்கின்றன. அனைத்து அரசாங்க அதிகாரத்தையும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே சோவியத்துக்கள் சரியான வளர்ச்சி பெற முடியும்; தங்கள் சக்திகளையும் திறமைகளையும் முழுமையாக வெளிக்காட்ட முடியும். இல்லாவிடில் அவை செய்வதற்குரிய வேலை எதுவுமில்லை; இல்லாவிடில் அவை வெறும் கருக்கள்தாம் (நீண்ட காலம் கருநிலையில் தங்குவது கூடாது) அல்லது விளையாட்டுப் பொருட்கள்தாம். ''இரட்டை ஆட்சி'' என்றால் சோவியத்துக்களுக்குப் பாரிசவாதம் என்றுதான் பொருள்.

புரட்சிகர வர்க்கங்களைச் சேர்ந்த மக்களின் படைப்புத்திறன் சோவியத்துக்களைத் தோற்றுவிக்காதிருக்குமானால்,

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி கவைக்கு உதவாத இலட்சியமாகப் போயிருக்கும். ஏனெனில் பழைய அரசாங்க இயந்திரத்தை வைத்துக்கொண்டு பாட்டாளி வர்க்கம் நிச்சயமாக அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது போயிருக்கும், உடனடியாகப் புதிய அரசாங்க இயந்திரத்தை அமைப்பது என்பதும் முடியாத காரியமாகும். த்ஸெரெத்தேலி, செர்னேவ் வகையருக்கள் சோவியத்துக்களை வேசிநிலைக்குக் கொண்டுவந்த, துயர் தரும் வரலாறு, ''கூட்டணியின்'' வரலாறு, குட்டி பூர்ஷ்வா பிரமைகளிலிருந்து சோவியத்துக்கள் விடுபட்டதைக் குறிப்பதும் **வர்ஜாவர்ஜமின்றி யமைந்த பல்வேறு** பூர்ஷ்வா கூட்டணிகளின் கடைகெட்ட ஊழல்களையும் ஆபாசங்களையும் நடைமுறையில் துய்த்து அறிந்து அந்தக் ''கழுவாயில்'' புகுந்து வெளி வந்ததைக் குறிப்பதுமான வரலாறுமாகும். இந்தக் ''கழுவாயால்'' சோவியத்துக்கள் பலங்குன்றிப் போகவில்லை, எஃகின் உறுதியைத்தான் பெற்றுள்ளன என்று நம்புவோமாக.

* * *

பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்நோக்கியுள்ள முக்கியமான கஷ்டம், மிகத் துல்லியமான, மிக நேர்மையான கணக்குக் குறிப்பும், கட்டுப்பாடும் தேசம் முழுவதிலும் ஸ்தாபிப்பதுதான், பொருள் உற்பத்தியிலும் வினியோகத்திலும் தொழிலாளர் கட்டுப்பாட்டை ஸ்தாபிப்பதுதான்.

''தொழிலாளர் கட்டுப்பாடு'' என்ற கோஷத்தை முன்வைத்ததன் மூலம் நாம் ஸிண்டிக்கலிஸத்தில் இறங்கிவிட்டோம் என்று ''நோவயா ஷிஸ்ன்'' எழுத்தாளர்கள் வாதாடினர்கள். ''மார்க்ஸீயத்தை'' ஆழ்ந்து பயின்று அறிந்துகொள்ளாமல், ஸ்துரூவே முறையில்[25], அதாவது பொட்டையுருப் போட்ட அறிவீனர்களான பள்ளிப் பிள்ளைகளின் முறையில் அதைச் செயல்படுத்துவதற்கு இந்த வாதம் ஓர் உதாரணமாகும். ஸிண்டிக்கலிஸம் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான சர்வாதிகாரத்தை மறுக்கிறது அல்லது பொதுவாக அரசியலதிகாரம் அனைத்தையுமே போல அதை முக்கியப்படுத்தாமல் பின்னணிக்குத் தள்ளிவைக்கிறது. ஆனால் நாமோ அதனை முதல் இடத்தில் வைக்கிறோம். நாமும் ''நோவயா

ஷிஸ்ன்காரர்களைப்'' போலவே, தொழிலாளர் கட்டுப்பாடு அல்ல, ஆனால் அரசாங்கக் கட்டுப்பாடு என்போமானால், அது பூர்ஷ்வா-சீர்திருத்தவாதச் சொற்றொடரே ஆகும். சாரத்தில், அது கலப்பற்ற காடெட்டுச் சூத்திரமேயாகும். ஏனென்றால், தொழிலாளர் ''அரசாங்கக்'' கட்டுப்பாட்டில் பங்கு கொள்வதைக் காடெட்டுகள் ஆட்சேபிக்கவில்லை. இப்படிப் பங்கு கொள்ளச் செய்வது தொழிலாளர்களை ஏமாற்றுவதற்கு ஒரு சிறந்த மார்க்கத்தை பூர்ஷ்வா வர்க்கத்துக்குக் கிடைக்கச் செய்கிறது என்பதும், குவோஸ்தேவ், நிக்கீதின், புரொக்கோப்போவிச், த்ஸெரெத்தேலி கும்பல்களையெல்லாம் அரசியல் ரீதியிலே லஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கிவிடுவதற்கு அதுதான் அதிநுட்பமான வழி என்பதும் காடெட்-கர்னீலோவ் குழுவினருக்கு மிக நன்றாகத் தெரியும்.

''தொழிலாளர் கட்டுப்பாடு'' என்ற கோஷத்தைப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தோடு எப்போதும் அருகருகாக வைத்து, அதை எப்பொழுதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு உடனடுத்ததாக வைத்து நாம கூறும்பொழுது அதன் மூலம் நாம் குறிப்பிடுவது எந்த வகை அரசாங்கம் என்பதைத் தெளிவுபடுத்திவிடுகிறோம். அரசாங்கம் என்பது ஒரு வர்க்கத்தின் ஆதிக்கத்திற்குரிய கருவியாகும். எந்த வர்க்கத்தின்? பூர்ஷ்வா வர்க்கத்தின் என்றால் அது, எந்த அரசாங்க முறையின் மூலம் ருஷ்யாவின் உழைப்பாளி மக்கள் அரை வருஷத்திற்கு மேலாகக் ''கர்னீலோவ் தன்மைக்கும் கெரேன்ஸ்கிய் தன்மைக்கும்'' ஆளாக்கப்பட்டு வருகின்றார்களோ, அந்தக் காடெட்-கர்னீலோவ்-''கெரேன்ஸ்கிய்'' அரசாங்க முறையாகும். பாட்டாளி வர்க்கத்தின் என்றால், பாட்டாளி வர்க்க அரசாங்கத்தைப்பற்றி, அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றிப் பேசுகிறோமென்றால், தொழிலாளர் கட்டுப்பாடு என்பது பொருள் உற்பத்தி, வினியோகத் துறைகளில் சர்வஜனத் தன்மையுடைய, எல்லாவற்றையும் தழுவிய, எங்கும் நிலைத்திருக்கிற, மிகத் துல்லியமான, மிக நேர்மையான கணக்கு வைத்துக்கொள்ளல் ஆக முடியும்.

இதுவே பாட்டாளி வர்க்க, அதாவது சோஷலிஸ்ட் புரட்சியை எதிர்நோக்கியிருக்கும் பிரதானமான சங்கடம், பிரதானமான கடமை. சோவியத்துக்கள் இன்றி, குறைந்த

3—42

பட்சம் ருஷ்யாவில், இந்தக் கடமை நிறைவேறுவது அசாத்தியம். சோவியத்துக்கள் பாட்டாளி வர்க்கத்தின் ஸ்தாபன ரீதியான வேலையைக் குறிக்கின்றன. அது உலக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைத் தீர்க்க வல்லது.

இது, அரசாங்க இயந்திரம் என்ற பிரச்சினையின் மற்றோர் அம்சத்தின்முன் நம்மைக் கொண்டு நிறுத்துகிறது. பிரதானமாக ''அடக்குமுறைக்'' கருவியாய் இருக்கிற நிரந்தரமான இராணுவம், போலீஸ் படை, அதிகார வர்க்கம் ஆகியவற்றோடு தற்கால அரசாங்கத்திற்கு மற்றொரு கருவியும் இருந்து வருகிறது. பாங்கிகளுடனும், ஸிண்டிக்கேட்டுகளுடனும் அதற்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு வகையில் கூறுவதானால், பிரம்மாண்டமான அளவில் கணக்குக் குறிக்கும் வேலையையும் பதிவு வேலையையும் அது செய்து வருகிறது. இக்கருவியைத் தகர்க்க வேண்டாம், தகர்க்கக் கூடாது. அதை முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து பிடுங்கிக் கொள்ள வேண்டும். முதலாளிகளையும், அவர்களின் செல்வாக்கைச் செலுத்தவுதவும் வழிவகைகளையும் அதனிடமிருந்து கத்தரித்துவிட வேண்டும், வெட்டித்தள்ள வேண்டும், துண்டித்தெறிய வேண்டும். பாட்டாளி வர்க்க சோவியத்துக்களுக்கு அதைக் கீழ்ப்படுத்தி வைக்க வேண்டும். அதனை முன்னிலும் விரிவாக, எல்லாவற்றையும் தழுவியதாக, நாடு முழுவதிலும் பரவியதாகச் செய்ய வேண்டும். மிகப் பெருத்த அளவிலுள்ள முதலாளித்துவம் ஏற்கனவே செய்து முடித்துள்ள சாதனைகளைப் பயன்படுத்திக்கொள்வதின் மூலம் இதை நிறைவேற்றுவது சாத்தியம் (பொதுவாகவே பாட்டாளி வர்க்கப் புரட்சி இச்சாதனைகளைப் பயன்படுத்திக்கொள்வதின் மூலமாகத்தான் தனது குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும்).

முதலாளித்துவம் கணக்குக் குறிப்பதற்கு பாங்கிகள், ஸிண்டிக்கேட்டுகள், தபால் இலாகா, உபயோகிப்போர் சங்கங்கள், அலுவலக வேலையாட்களின் சங்கங்கள் போன்ற கருவிகளை ஆக்கித் தந்துள்ளது. பெரிய பாங்கிகள் இல்லாமல், சோஷலிஸம் என்பது அசாத்தியம் ஆகும்.

சோஷலிஸத்தைச் செயல்படுத்துவதற்கு நமக்குத் தேவையாயுள்ள ''அரசாங்க இயந்திரம்'' பெரிய பாங்கிகளே

யாகும். முதலாளித்துவ அமைப்பிலிருந்து தயாராகச் செய்து வைக்கப்பட்டுள்ள நிலையில் நாம் அதனை எடுத்துக்கொள்கிறோம். இதில் நாம் செய்ய வேண்டிய கடமை எல்லாம் இச் சிறந்த இயந்திரத்தை முதலாளித்துவ ரீதியில் அங்கவீனப் படுத்தி வந்த அம்சத்தை அதனிடமிருந்து வெட்டிவிட்டு, அதனை முன்னிலும் பெரிதாக; முன்னிலும் ஜனநாயகத் தன்மையுள்ளதாக, முன்னிலும் எல்லாவற்றையும் தழுவியதாக ஆக்குவதுதான். அளவு குணமாக உருமாறும். ஒவ்வொரு வோலஸ்திலும்* ஒவ்வொரு பாக்டரியிலும் கிளைகளை உடைய, பெரிதிலும் பெரிதான ஒரே அரசாங்க பாங்கியானது பத்தில் ஒன்பது பங்கு சோஷலிஸ்ட் இயந்திரமாக ஆகிவிடும். இதுவே நாடு முழுதிலும் பரவிய கணக்கு விவரக் குறிப்பு; பொருள் உற்பத்தியையும், வினியோகத்தையும் பற்றிய, நாடு முழுவதிலும் பரவிய கணக்குக் குறிப்பு ஆகும். ஒரு வகையில் சோஷலிஸ்ட் சமூகத்தின் எலும்புக்கூடு என்று இதனைச் சொல்லலாம்.

இந்த ''அரசாங்க இயந்திரத்தை'' (முதலாளித்துவ அமைப்பின்கீழ் முழுமையாக அரசாங்க இயந்திரமாய் இல்லாத, ஆனால் நம்மிடம், சோஷலிஸத்தின்கீழ், அவ்வாறான இயந்திரமாக ஆகப் போகிறதை) நாம் ஒரேயடியில், ஒரே அரசாங்க உத்தரவு மூலம் ''ஏற்றுக்கொள்ளவும்'', ''இயக்கிச் செல்லவும்'' முடியும். ஏனெனில் கணக்கு விவரக் குறிப்பு, கட்டுப்பாடு, பதிவு செய்தல், கணக்குப் பரிசோதனை, கணக்கெடுத்தல் ஆகிய வேலைகளைச் சிப்பந்திகள்தான் செய்து வருகின்றனர்; அவர்களில் பெரும்பான்மையோர் பாட்டாளி அல்லது அரைப் பாட்டாளி நிலையில்தான் இருக்கிறார்கள்.

பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் ஒரே உத்தரவால் இந்தச் சிப்பந்திகளை அரசாங்கச் சிப்பந்திகள் என்ற அந்தஸ்துக்கு மாற்ற முடியும்; மாற்ற வேண்டும். முதலாளித்துவத்தின் காவல் நாய்களான பிரியாண்டும் மற்ற பூர்ஷ்வா மந்திரிகளும் வேலை நிறுத்தம் செய்யும் ரயில்வே ஊழியர்களை ஒரே

* வோலஸ்த்—அக்டோபர் புரட்சிக்குமுன் சிறுவட்டாரம். —(மொ-ர்.)

அரசாங்க உத்தரவு மூலம் அரசாங்கச் சிப்பந்திகளாக மாற்றிவிடுவது போலத்தான் இதுவும். இவ்வகையான அரசாங்கச் சிப்பந்திகள் இன்னும் ஏராளமான பேர் நமக்குத் தேவை, ஏராளமான பேர் நமக்குக் கிடைக்கவும் முடியும். ஏனெனில் முதலாளித்துவம் கணக்குப் பரிசோதனையையும் கட்டுப்பாட்டையும் எளிதாக்கி விட்டிருக்கிறது; அதை முன்னைவிட எளிதான குறிப்பு முறையாகச் செய்துள்ளது. எழுதப்படிக்கத் தெரிந்த எவனும் அதைச் செய்ய முடியும்.

பாங்கி, ஸிண்டிக்கேட், வர்த்தகம் முதலானவற்றின் சாதாரண சிப்பந்திகள் அனைவரையும் "அரசாங்கச் சிப்பந்திகளாக மாற்றுவது" (முதலாளித்துவமும், நிதி முதலாளித்துவமும் நமக்காக இவ் விஷயத்தில் பூர்வாங்க வேலைகளைச் செய்து வைத்துள்ள காரணத்தால்) நடைமுறை நிர்வாகரீதியில் சாத்தியம், அரசியல் ரீதியிலும் இது சாத்தியம்; ஆனால் ஒரு நிபந்தனை: சோவியத்துக்களின் கட்டுப்பாடும் கண்காணிப்பும் இருந்து வரவேண்டும்.

மேலதிகாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் மிகச் சிலரே யாவர்; ஆனால் முதலாளிகளின் பக்கமே சாய்பவர்கள். ஆகவே முதலாளிகளைப் போலவே அவர்கள் மீதும் "கடுமையான" நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். முதலாளிகளைப் போலவே அவர்களும் எதிர்ப்புக் காட்டுவார்கள். அவர்களின் எதிர்ப்பை உடைத்தெறிய வேண்டும். அழியா வெகுளித்தனம் வாய்ந்த பெஷெகோனவ் "அரசாங்கக் காரியங்களில் அனுபவமற்ற குழந்தை" போல், "முதலாளிகளின் எதிர்ப்பு உடைத்தெறியப்பட்டு விட்டது" என்று 1917 ஜூன் மாதத்திலேயே கூறிய குழந்தை மொழி, சிறுபிள்ளைத்தனமான வாய் வீச்சு, சிறுபிள்ளைத்தனமான வீறுப்புப் பேச்சு, பாட்டாளி வர்க்கத்தால் நடைமுறை யதார்த்தமாகச் செய்து முடிக்கப்படும்.

இதை நாம் செய்ய முடியும்; காரணம்: மக்கள் தொகையில் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களின் எதிர்ப்பை, உண்மையில் விரல் விட்டு எண்ணக்கூடிய தொகையுள்ளவர்களின் எதிர்ப்பை, முறித்தெறிய வேண்டிய காரியம் தான் அது. அவர்கள் ஒவ்வொருவர் மீதும் அலுவலகச் சிப்பந்திகளின் சங்கங்களும், தொழிற்சங்கங்களும், உபயோகிப்

போர் சங்கங்களும், சோவியத்துக்களும் மிகக் கடுமையான கண்காணிப்பை ஏற்படுத்தும். அதன் பயனுக ஒவ்வொரு தீத் தீத்திச்சும்[26] ஸெதானில் பிரெஞ்சுக்காரர்கள் சுற்றி வளைக்கப்பட்டதே போல் சுற்றி வளைக்கப்பட்டிருப்பான். இந்த தீத் தீத்திச்சுகள் யாரென்று பெயர் பெயராக நமக்குத் தெரியும்: டைரக்டர்கள், போர்டு மெம்பர்கள், பெரும் பங்குதாரர்கள், முதலியோர்களின் பட்டியல்களை எடுத்துப் பார்த்தால் போதுமானது. அவர்கள் ருஷ்யா முழுவதிலும் சில நூறு, அல்லது அதிகமாகப் போனுல் சில ஆயிரம் பேர்கள்தான் இருக்கிருர்கள். அவர்கள் ஒவ்வொருவர் மீதும் பாட்டாளி வர்க்க அரசாங்கம், தனது சோவியத்துக்கள், அலுவலகச் சிப்பந்திகளின் சங்கங்கள், முதலியவைகள் அடங்கிய இயந்திரத்தைக் கொண்டு, பத்து அல்லது நூறு கண்காணிப்பாளர்களை நியமிக்க முடியும். ஆகவே ''எதிர்ப்பை முறியடிப்பதற்குப்'' பதிலாக, (முதலாளிகளின்மீது) தொழிலாளர் கட்டுப்பாடு மூலமாக எவ்வித எதிர்ப்புமே சாத்தியமில்லாதபடி செய்துவிட முடியும்.

முதலாளிகளின் சொத்தைப் பறிமுதல் செய்வது இவ்விஷயத்தின் ''முக்கிய அம்சமாக'' இருக்காது. ''முக்கிய அம்சமாக'' இருக்கப் போவது, முதலாளிகள், அவர்களுக்கு ஆதரவு தரக் கூடியவர்கள ஆகியோர் மீது நாடு முழுதிலும் பரவிய, எல்லாவற்றையும் தழுவிய தொழிலாளர் கட்டுப்பாடுதான். பறிமுதல் செய்வதால் மட்டும் எல்லாம் முடிந்துவிடாது. அதில் ஸ்தாபன அமைப்பு அம்சம், முறையான வினியோகத்தைப் பற்றிய கணக்கு வைக்கிற அம்சம் எதுவுமில்லை. பறிமுதல் செய்வதற்குப்பதில் நியாயமான வரி விதிக்கலாம் (உதாரணமாக ''ஷிங்கரேவ் முறையில்'' இருந்தாலும் போதும்). யாரும் சொத்து மதிப்பீடிலிருந்து தப்பிக்கவோ, உண்மையை மறைக்கவோ, சட்டத்தை மீறவோ முற்றிலும் சாததியமாகாதபடி செய்ய வேண்டும். அவ்வாறு நடப்பது சாத்தியமாகாதபடி தடுப்பதற்குத் தொழிலாளி அரசாங்கத்தின் தொழிலாளர் கட்டுப்பாடு ஒன்றினுல்தான் முடியும்.

கட்டாய முறையில் டிரஸ்டுமயமாக்கல், அதாவது அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சங்கங்களில் கட்டாயமாக

ஒன்று படுத்தி விடுதல்—இதற்கு முதலாளித்துவம் வழி செய்து வைத்திருக்கிறது; ஜெர்மனியில் ஜங்கர் அரசாங்கத்தால் இது நிறைவேற்றப்பட்டிருக்கிறது; ருஷ்யாவில் சோவியத்துக்களால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால், இதையும் எளிதில் நிறைவேற்றி வைக்க முடியும். இதுவே நமக்கு "ஓர் அரசாங்க இயந்திரத்தை" அளிக்கும். அவ்வரசாங்க இயந்திரம் சர்வவியாபகமானதாயும், மிக நவீனமானதாயும், அதிகார வர்க்கத் தன்மையற்றதாயும் இருக்கும்*.

* * *

பூர்ஷ்வா வர்க்கத்திற்கு வக்காலத்து வாங்கியவர்கள் தரும் நான்காம் வாதம்: பாட்டாளி வர்க்கம் அரசாங்க இயந்திரத்தை "இயக்கிச் செல்ல" இயலாது என்பதாகும். முந்திய வாதத்தைக் காட்டிலும் இந்த வாதத்தில் புதிதாக எதுவுமில்லை. உண்மைதான், பழைய இயந்திரத்தை நாம் ஏற்றுக் கொண்டு செலுத்தவும் முடியாது, இயக்கிச் செல்லவும் முடியாது. ஆனால் சோவியத்துக்களாகிய புதிய இயந்திரம் "மக்களின் உண்மையான படைப்புத் திறனின் மகத்தான தூண்டுதலினால்" ஏற்கனவே இயக்கப்பட்டு வருகிறது. சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகளின் தலைவர்களுடைய ஆதிக்கத்தால் அவ்வியந்திரத்தின் மீது பூட்டப்பட்டிருக்கும் விலங்குகளை உடைத்து அதை விடுவிக்க வேண்டியது மட்டுமே தேவை. இந்த இயந்திரம் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. முழு வேகத்துடன் முன்னே செல்வதைத் தடங்கல் செய்து கொண்டிருக்கும் அங்கவீன குட்டி பூர்ஷ்வா தடைகளை நீக்க வேண்டியதுதான் தேவை.

மேலே சொல்லப்பட்டுள்ளதுடன் சேர்த்து இரண்டு விஷயங்கள் இங்கே கவனிக்கப்பட வேண்டியது அவசியம்: முதலாவதாக, நம்மால் ஏற்படுத்தப் படாமல் ராணுவ ஏகா

---

*கட்டாய முறையில் டிரஸ்டுமயமாக்கல் என்பதின் பொருளுக்கு மேலும் விளக்க விவரங்கள் வேண்டுவோர் "நிகழவிருக்கும் பேராபத்தும் அதை எதிர்ப்பதற்கான வழியும்" என்ற என் துண்டுப் பிரசுரத்தைப் பார்க்க. —(ப-ர்.)

திபத்திய கட்டத்தில் முதலாளித்துவத்தால் சிருஷ்டிக்கப் பட்டுள்ள புதிய கட்டுப்பாட்டுச் சாதனங்கள்; இரண்டாவ தாக, பாட்டாளி வர்க்க வகைப்பட்ட அரசாங்கத்தின் நிர்வாகத்தில் மேலும் ஜனநாயக முறையைப் புகுத்தி வரு வதன் முக்கியத்துவம்.

தானிய ஏகபோக உரிமையும், உணவுப் பங்கீட்டு முறை யும் நம்மால் கொண்டுவரப்பட்டவையல்ல; போரில் ஈடுபட் டிருந்த முதலாளித்துவ அரசாங்கத்தால் கொண்டுவரப்பட் டவை. முதலாளித்துவ வரம்புக்குள் சர்வஜனக் கட்டாய உழைப்பு முறையையும் ஏற்கனவே அது கொண்டுவந்துள் ளது—இது தொழிலாளர்களுக்குள்ள ராணுவ கடுங்காவல் சிறைவாசம் ஆகும். வரலாற்றைப் படைக்கும் அதன் எல்லா நடவடிக்கைகளிலும் போலவே இவ்விஷயத்திலும் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவத்திலிருந்தே தனது ஆயுதங்களை எடுத்துக் கொள்கிறது. அவ் வாயுதங்களைப் ''புதிதாய்க் கண்டுபிடிக்க''வில்லை, ''சூன்யத்திலிருந்து ஆக்கிப் பெற'' வில்லை.

தானிய ஏகபோக உரிமை, உணவுப் பங்கீட்டு முறை, சர்வஜனக் கட்டாய உழைப்பு முறை ஆகியவை பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் கையில், முழு அதிகாரம் பெற்ற சோ வியத்துக்களின் கையில், கணக்கு வைப்பதற்கும் கட்டுப்படுத் துவதற்கும் மிக வன்மையுள்ள சாதனமாய் அமையும். முதலாளிகள்மீதும், பொதுவாகப் பணக்காரர்கள்மீதும் தொழி லாளிகளால் பிரயோகிக்கப்படும் போது, இதே சாதனம், முதலாளிகளின் எதிர்ப்பை ஒடுக்குவதற்காகவும் அவர்களைப் பாட்டாளி வர்க்க அரசாங்கத்துக்குப் பணியச் செய்வதற்கா கவும் வரலாற்றில் கண்டறியாத அரசாங்க இயந்திரத்தை ''இயக்கிச் செல்வதற்குரிய'' ஒரு சக்தியாக இருக்கும். கட் டுப்பாடு செய்வதற்கும் உழைக்குமாறு கட்டாயப்படுத்துவதற்கும் அமைந்த இந்தச் சாதனம் பிரெஞ்சுக் கன்வென்ஷனின் சட்டங்களைவிட, கில்லோடீன் என்ற அதன் தண்டனைக் கருவியைவிட, அதிக பலம் வாய்ந்ததாக இருக்கும். கில் லோடீன் பயமுறுத்த மட்டுமே செய்தது, செயல்பூர்வமான எதிர்ப்பை முறித்தெறிய மட்டுமே செய்தது. நமக்கு இது போதாது.

நமக்கு இது போதாது. நாம் முதலாளிகளைப் ''பய முறுத்துவது'' மட்டும், அதாவது, பாட்டாளி வர்க்க அர சாங்கத்தின் சர்வவல்லமையை அவர்கள் உணர்ந்து அதனைச் செயல்பூர்வமாய் எதிர்ப்பது என்ற எண்ணமனைத்தையும் விட்டொழிக்கும்படி செய்வது மட்டும் போதாது. அதோடு கூட, செயலற்ற எதிர்ப்பையும் நாம் உடைத்தெறிய வேண் டும். ஏனெனில் செயல்பூர்வமான எதிர்ப்பைவிட இது சந் தேகமின்றி அதிகம் அபாயமுள்ளது, கேடு செய்ய வல்லது. எல்லாவித எதிர்ப்பையும் உடைத்தெறிவது என்பது மட்டு மின்றிப் புதிய அரசாங்க, ஸ்தாபன வரம்புக்குள் நபர்களை வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தவும் வேண்டும். முதலாளிகளை ''நீக்கிவிட்டால்'' மட்டிலும் போதாது; (விரும்பத்தகாத, திருத்த முடியாத ''எதிர்ப்பாளர்களை'' நீக்கிய பிறகு) புதிய அரசாங்க சேவையில் நாம் அவர்களை அமர்த்த வேண்டும். முதலாளிகளுக்கும் பூர்ஷ்வா அறிவுஜீவிகள், அலுவலகச் சிப்பந்திகளின் ஒரு குறித்த மேல்தரப் பகுதிக்கும் இது பொருந்தும்.

இதைச் செய்வதற்குரிய சாதனம் நம்மிடம் இருக்கிறது. போரில் ஈடுபட்டுள்ள முதலாளித்துவ அரசு அதற்காகச் சாதனத்தையும், ஆயுதத்தையும் நம் கையில் தந்துள்ளது. இச்சாதனம்தான் தானிய ஏகபோக உரிமையும், உணவுப் பங்கீட்டுமுறையும், சர்வஜனக் கட்டாய உழைப்புமுறையும். ''வேலை செய்யாதவனுக்கு உணவில்லை''—என்ற அடிப்படை யான, முதன்மையான, பிரதானமான இந்த விதியைத் தொழிலாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் ஆட்சிக்கு வரும்போது அமுலாக்க முடியும், அமுலாக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் ஒரு வேலைச் சீட்டு உள் ளது. தற்சமயம் இது சந்தேகமின்றி முதலாளித்துவக் கூலி அடிமை முறைக்குரிய அத்தாட்சிப் பத்திரமாகத்தான், உழைப்பாளி இன்னின்ன புல்லுருவிக்குச் சொந்தமானவன் என்று காட்டும் அத்தாட்சிப் பத்திரமாகத்தான் இருக்கிறது, எனினும் இந்தச்சீட்டு தொழிலாளியை இழிவுபடுத்துவதல்ல.

சோவியத்துக்கள், வேலைச் சீட்டுகளைப் பணக்காரர் களுக்கும், அதன்பின், படிப்படியாக மக்கள் தொகை முழுவதற்கும் வழங்கும் (ஒரு விவசாய நாட்டில் மிகப்

பெரும்பாலான விவசாயிகளுக்கு வெகு காலம் வரைக்கும் வேலைச்சீட்டுகள் ஒருவேளை தேவையில்லாமலே இருக்கலாம்). இந்த வேலைச் சீட்டு ''மக்கள் மந்தையைக்'' குறிக்கும் ஒரு முத்திரைச் சீட்டாக, ''கடைநிலைப்'' பகுதியினரைக் காட்டும் ஒரு தஸ்தாவேஜாக, கூலியடிமை முறையின் அத்தாட்சிப் பத்திரமாக, இனிமேல் இருக்காது. புதிய சமூகத்தில் ''கூலிக்காரர்கள்'' என்று யாருமில்லை என்பதையும், மறு பக்கத்தில் **வேலை செய்யாதவர்கள்** என யாருமில்லை என்பதையும் காட்டுவதற்குரிய அத்தாட்சிச் சீட்டாக இருக்கும் இது.

பணக்காரர்கள், தங்கள் செயல் துறை எந்தச் சங்கத்தோடு அதிக நெருக்கமாகத் தொடர்புள்ளதோ, அந்தத் தொழிலாளர் அல்லது அலுவலகச் சிப்பந்திகள் சங்கத்திலிருந்து வேலைச் சீட்டு கட்டாயமாகப் பெற்ருக வேண்டும். அவர்கள் மனப் பூர்வமாகத் தங்கள் வேலையைச் செய்து வருகின்றனர் என்று வாராவாரம் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை அச்சங்கத்திடமிருந்து ஓர் அத்தாட்சிப் பத்திரமும் பெற்றுவர வேண்டும். இந்த அத்தாட்சிப் பத்திரம் இல்லாவிட்டால் உணவுப் பங்கீட்டுச் சீட்டுகளோ, பொதுவாக உணவுப் பண்டங்களோ பெற்றுக் கொள்ள முடியாது. பாங்கிகளைச் சீர்படுத்தவும், தொழில் நிலையங்களை இணைக்கவும் நமக்கு நல்ல ஸ்தாபன அமைப்பாளர்கள் தேவை (இவ்விஷயத்தில் முதலாளிகளுக்கு அதிக அனுபவம் உண்டு, அனுபவம் வாய்ந்தவர்களை வைத்துக் கொண்டு வேலை செய்வது எளிது), எஞ்சினீயர்கள், விவசாய நிபுணர்கள், டெக்னீஷியன்கள், விஞ்ஞான முறையில் தனித் தேர்ச்சி பெற்றவர்கள் ஆகியோர், முன்னைவிட மிகமிக அதிகமான அளவில் தேவை என்று பாட்டாளி வர்க்க அரசாங்கம் கூறும். இத்தகைய எல்லா வேலைக்காரர்களுக்கும் நாம் அவரவர் திறமைகளுக்குத் தக்கவையும் அவரவர்களுக்கு ஏற்கனவே பழக்கமானவையுமான வேலை யளிப்போம். எல்லோருக்கும் சமமான சம்பளம் வழங்குவதை அமுலுக்குக் கொண்டுவருவது படிப்படியாகத்தான் சாத்தியமாகக் கூடும். இடைக் காலத்தில், இந்தத் தனித்தேர்ச்சி பெற்றவர்களுக்கு அதிகச் சம்பளம் தருவோம். ஆனல் அவர்களை எல்லாப் பக்கங்களி

லிருந்தும் தொழிலாளர் கட்டுப்பாட்டின்கீழ் வைப்போம். ''வேலை செய்யாதவனுக்கு உணவில்லை'' என்ற விதியை விலக்கு வில்லங்கமெதுவுமின்றி முழுக்க முழுக்க அமுல் நடத்துவோம். நமது வேலையின் ஸ்தாபன வடிவத்தைப் பற்றிக் கூறவேண்டுமானால், நாம் அதனைப் புதிதாகக் கண்டுபிடிக்கப் போவதில்லை; முதலாளித்துவத்தின் கீழ் தயாராக இருக்கும் ஸ்தாபன வடிவத்தை — பாங்கிகள், ஸிண்டிக்கேட்டுகள், சிறந்த பாக்டரிகள், சோதனை நிலையங்கள், விஞ்ஞான அக்காடமிகள், முதலியவைகளை—அப்படியே எடுத்துக் கொள்வோம். ஆம், முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளின் அனுபவம் அளிக்கும் மிகச் சிறந்த மாதிரிகளை நாம் மேற்கொள்ள மட்டும் வேண்டியிருக்கும்.

முதலாளி வர்க்கம் முழுதும் மிகப் பிடிவாதமாக எதிர்ப்பைக் காட்டும்; ஆனால் மக்கள் எல்லோரும் சோவியத்துக்களில் ஸ்தாபனரீதியில் ஒன்றுபடுவதால் இவ்வெதிர்ப்பு தகர்த்தெறியப்படும் என்று நாம் கூறுகையில் கொஞ்சங்கூடக் கற்பனை யுலகில் திரியாமல் மிக நிதானமான, காரியரீதியான மதிப்பீட்டின் அடிப்படையிலிருந்துதான் பேசுகிறோம். அசாதாரணமான பிடிவாதம் காட்டும், கட்டுக்கு இணங்கி வர மறுக்கும் முதலாளிகளை, அவர்களுடைய எல்லாச் சொத்தையும் பறிமுதல் செய்து சிறையிலிடுவதின் மூலம் நிச்சயமாகத் தண்டிக்கத்தான் வேண்டியிருக்கும். ஆனால் மறுபக்கத்தில், பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி இன்றைய ''இஸ்வேஸ்தியாவில்''[27] நான் படித்தது போன்ற நிகழ்ச்சிகள் தொகை தொகையாய்ப் **பெருக்கம் அடையச் செய்யும்:**

''செப்டம்பர் 26ல், தொழிற்சாலைக் கமிட்டிகளின் மத்திய கவுன்சில் முன் இரண்டு எஞ்சினீயர்கள் வந்து எஞ்சினீயர்களின் ஒரு குழு சோஷலிஸ்ட் எஞ்சினீயர்கள் சங்கம் ஒன்று ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்கள். இக்காலம் உண்மையிலே சமுதாயப் புரட்சியின் ஆரம்ப காலம் என்று அச்சங்கம் கருதுவதால் தொழிலாளி மக்களுக்குச் சேவை செய்யத் தன்னை அர்ப்பணித்துக்கொள்கிறது என்றும், தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டுத் தொழிலாளர் ஸ்தாபனங்களுடன் முழு இணக்கத்தோடு வேலை செய்ய விரும்புகிறது என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு தொழிற்சாலைக் கமிட்டிகளின்

மத்திய கவுன்சிலைச் சேர்ந்த பிரதிநிதிகள் அளித்த பதிலில் தங்கள் ஸ்தாபனத்துக்குள்ளேயே ஓர் எஞ்சினீயர் செக்ஷனை மகிழ்ச்சியோடு அமைப்பதாகவும், உற்பத்தியில் தொழிலாளர் கட்டுப்பாடு செலுத்துவது சம்பந்தமான தொழிற்சாலைக் கமிட்டிகளின் முதல் மகாநாட்டின் அடிப்படைக் கோட்பாடுகளை அந்த எஞ்சினீயர் பகுதி தனது வேலைத் திட்டத்தில் உட்படுத்திக் கொள்ளும் என்றும் சொன்னார்கள். தொழிற்சாலைக் கமிட்டிகளின் மத்திய கவுன்சில் பிரதிநிதிகளும், சோஷலிஸ்ட் எஞ்சினீயர்களின் முன்முயற்சிக் குழுவினரும் சேர்ந்த கூட்டம் ஒன்று வரும் சில நாட்களில் நடத்தப்படும் (''இஸ்வேஸ்தியா த்ஸிக்'', செப்டம்பர் 27, 1917).

* * *

பாட்டாளி வர்க்கம் அரசாங்க இயந்திரத்தை இயக்கிச் செல்ல முடியாது என்று கூறப்படுகிறது.

1905 புரட்சிக்குப்பிறகு 1,30,000 நிலப்பிரபுக்கள் ருஷ்யாவில் ஆட்சி செலுத்தினர். 15 கோடி மக்களின்மீது முடிவற்ற பலாத்காரச் செயல்களைப் புரிந்தும், அம்மக்களை எல்லையற்ற அவமானத்திற்கு உட்படுத்தியும், மிகப் பெரும்பான்மை மக்களை அரைப் பட்டினி நிலைக்கு விரட்டியும், மிகக் கடுமையான உழைப்பிற்கு அடிமைப்படுத்தியும் அவர்கள் ஆட்சி செலுத்தினர்.

அவ்வாறிருந்தும், 2,40,000 உறுப்பினர் கொண்ட போல்ஷெவிக் கட்சி ஏழை மக்களின் நலன் கருதி, பணக்காரர்களுக்கு எதிராக ருஷ்யாவில் ஆட்சி செலுத்த முடியாது என்று கூறப்படுகிறது. இந்த 2,40,000 பேருக்கும் வயது வந்த மக்கள் தொகையில் பத்து லட்சம் வோட்டுகளின் ஆதரவு ஏற்கனவே கிடைத்திருக்கிறது. இதுதான் கட்சி அங்கத்தினர் தொகைக்கும் கட்சிக்குக் கிடைக்கப்பெற்ற வோட்டுத் தொகைக்கும் உள்ள விகிதாச்சாரமாகும். ஐரோப்பாவின் அனுபவத்தைக் கொண்டு இந்த விகிதாச்சாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ருஷ்யாவின் அனுபவமும் அதைத்தான் ஸ்தாபித்துள்ளது. உதாரணமாக, சென்ற ஆகஸ்ட் மாதத்தில் நடந்த பெத்ரோகிராத் டூமா தேர்தல்கள் இந்த விகிதாச்சாரத்தைக் காட்டுகின்றன. ஒவ்வொரு மாதமும் 20ம் தேதியன்று கிடைக்கும் கொழுத்த சம்பளத்துக்காக

அல்லாமல் தங்களுடைய இலட்சியங்களுக்காக சோஷலிஸ்ட் அரசாங்கத்துக்கு விஸ்வாசம் பாராட்டுகிற பத்து லட்சம் மக்களைக் கொண்ட ''அரசாங்க இயந்திரம்'' நமக்கு ஏற்கன வே இருக்கிறது.

அது மட்டுமல்ல. நமது அரசாங்க இயந்திரத்தை உடனடியாகப் பத்து மடங்கு பெரிதாக்கிக் கொள்ளும் ''மந்திர சாதனமும்'' நமக்கு இருக்கிறது. எந்த முதலாளித்துவ அரசாங்கத்துக்கும் இந்தச் சாதனம் இருந்தது கிடையாது, இருக்கவும் முடியாது. உழைப்பாளிகளை, ஏழை மக்களை, அரசாங்க நிர்வாகத்தின் அன்றாட வேலைகளில் ஈடுபடுத்து வதே இந்த மந்திர சாதனமாகும்.

இந்த மந்திர சாதனத்தை உபயோகிப்பது எவ்வளவு எளிது என்பதையும், எவ்வளவு பிசகின்றி அது வேலை செய் யும் என்பதையும் விளக்குவதற்குக் கூடியவரை மிகத் தெளி வான, எளிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

அரசாங்கம் ஒரு குடியிருப்பு வீட்டிலிருந்து ஒரு குடும் பத்தைக் கட்டாயப்படுத்தி வெளியேற்றி இன்னொரு குடும் பத்தை அங்கே குடியமர்த்த வேண்டியிருக்கிறது. முதலா ளித்துவ அரசாங்கம் அடிக்கடி இவ்வாறு செய்கிறது. நமது பாட்டாளி வர்க்க அல்லது சோஷலிஸ்ட் அரசாங்கமும் இவ் வாறு செய்யும்.

முதலாளித்துவ அரசாங்கம், சம்பாதித்துப் போடுகிற வனை இழந்துவிட்ட காரணத்தால் வீட்டு வாடகை செலுத் தத் தவறிவிட்ட ஒரு தொழிலாளர் குடும்பத்தை வீட்டை விட்டு வெளியேற்றுகிறது. போலீஸ் அல்லது மிலீஷியாவுடன், ஒரு முழுப் பட்டாளத்துடன், அமீனா வந்து சேருகிறான். தொழிலாளர் வாழும் வட்டாரத்தில் யாரையாவது வெளி யேற்றம் செய்வதற்கு ஒரு கஸாக் ராணுவப் பிரிவே தேவைப் படுகிறது. ஏன்? ஏனென்றால் அமீனாவோ அல்லது மிலீஷியாக் காரர்களோ மிகப் பெரிய ராணுவப் படையின் பாதுகாப் பின்றி அங்கே போவதற்குச் சம்மதிப்பதில்லை. மக்களை வெளி யேற்றும் காட்சி, பக்கத்தில் குடியிருப்பவர்களிடையே, புகலற்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான மக்களிடையே, கடுஞ் சீற்றத்தையும், முதலாளி கள் மீதும் முதலாளித்துவ அரசாங்கத்தின் மீதும் கொடிய

துவேஷத்தையும் கிளப்பிவிடுகிறது. ஆகவே, அமீனுவும், மிலீஷியாக்காரர்களும் எந்த நிமிடத்திலும் பொது மக்க ளால் தலைவேறு கால்வேருகப் பிய்த்தெறியப்படும் அபாயத் தில் இருக்கிருர்கள். பெரிய ராணுவப் படைகள் தேவைப் படுகின்றன. நகரமாயிருந்தால் சில ரெஜிமென்டுகள் தேவை யாகின்றன. அந்த ரெஜிமென்டுகளும் தொலைவில் தள்ளி யிருக்கிற பிரதேசங்களிலிருந்துதான் கொண்டுவரப்பட வேண்டும். அதன் காரணம் என்னவென்ருல், நகர்ப்புறத்து ஏழை மக்களின் வாழ்க்கை ராணுவத்தினருக்கு அறிமுகமில் லாததாய் இருக்க வேண்டும், அப்போர்வீரர்களை சோஷ லிஸம் ''தொற்றிக்கொள்ளக்'' கூடாது.

பாட்டாளி வர்க்க அரசாங்கம் மிகக் கஷ்ட நிலையில் உள்ள ஒரு குடும்பத்தைப் பணக்காரனுடைய வீட்டில் கட் டாயப்படுத்திக் குடியமர்த்த வேண்டும் என்று வைத்துக் கொள்வோம். நமது தொழிலாளர் மிலீஷியாப் படையில் பதினைந்து பேர்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம்: இரண்டு மாலுமிகள், இரண்டு போர்வீரர்கள், வர்க்க உணர் வுள்ள இரண்டு தொழிலாளர்கள் (அவர்களில் ஒருவன் மட்டும் நமது கட்சியைச் சேர்ந்தவனுக அல்லது அதன் அனுதாபியாக இருப்பதாக வைத்துக்கொள்வோம்), ஓர் அறிவுஜீவி, ஏழை உழைப்பாளிகள் எட்டுப் பேர், குறைந்த பட்சம் ஐவர் பெண்கள், வீட்டு வேலைக்காரிகள், பயிற்சித் திறனற்ற தொழிலாளர்கள், முதலியோர். இப்படை பணக் காரனுடைய மனைக்கு வந்து சேருகிறது; பார்வையிடுகிறது. அதில் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் வசித்துவரு கிற ஐந்து அறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுகொள் கிறது. ''நாட்டினரே, இந்தக் குளிர்காலத்திற்கு நீங்கள் இரண்டு அறைகளுக்குள் நெருக்கி வசித்துக்கொண்டு, இப் போது நிலவறைகளில் வசித்து வரும் இரண்டு குடும்பங் களுக்கு மற்ற இரண்டு அறைகளைக் காலி செய்து கொடுக்க வேண்டும். எஞ்சினீயர்களின் உதவியால், (நீங்களும் ஓர் எஞ்சினீயர் தானே?) எல்லோருக்கும் நல்ல வீடுகள் கட்டித் தரும் வரையில் நீங்கள் சிறிது நெருக்கிக்கொண்டுதான் வசித்து வர வேண்டும். உங்களுடைய டெலிபோனைப் பத்து குடும்பங்கள் உபயோகிக்கும். கடைக்கு ஓடி, சாமான்கள்

வாங்கி வருவது போன்ற சில்லறைக் காரியங்களுக்குச் செலவாகும் நேரத்தில் இது நூறு மணி வேலை நேரத்தை மிச்சமாக்கிக் கொடுக்கும். உங்களுடைய குடும்பத்தில் அரை குறை உடல்வலுவுள்ள இருவர்—ஐம்பத்து ஐந்து வயது மாதும் பதினுன்கு வயதுப் பையனும்—இருக்கிருர்கள். அவர்களுக்கு வேலையில்லை, ஆனுல் ஏதாகிலும் இலேசான வேலை செய்யலாம். இருவரும் நாளொன்றுக்கு மூன்று மணி நேரம் வேலை பார்த்து, இந்தப் பத்துக் குடும்பங்களுக்கும் உணவுப் பண்டங்கள் வினியோகம் சரியாக நடக்கிறதா என்று மேற்பார்வை செய்து அதற்குச் சரியான கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். எங்கள் படையிலுள்ள மாணவர் இப்பொழுதே இந்த அரசாங்க உத்தரவின் இரண்டு பிரதிகளை எழுதிக் கொடுப்பார். சரியாக அதன்படி நடந்து வருவோம் என்று உறுதிச் சீட்டு தயை செய்து எழுதிக் கையொப்பமிட்டு எங்களிடம் தருவீர்களாக.''

பழைய பூர்ஷ்வா அரசாங்க இயந்திரம், நிர்வாகம் ஆகியவற்றுக்கும், புதிய சோஷலிஸ்ட் அரசாங்க இயந்திரம், நிர்வாகம் ஆகியவற்றுக்கும் உள்ள ஒப்புநிலையைத் தெளிவான உதாரணங்களைக் கொண்டு நன்கு எடுத்துக்காட்ட முடியும் என்று இது விளக்குகிறது என்பது என் அபிப்பிராயம்.

நாம் கற்பனையூரில் சஞ்சரிப்பவர்களல்ல. ஒவ்வொரு பயிற்சியற்ற தொழிலாளியும், சமையற்காரியும் உடனடியாக அரசாங்க நிர்வாக வேலையை மேற்கொள்ள முடியாது என்பது நமக்குத் தெரியும். இவ்விஷயத்தில் நாம் காடெட்டுகள், பிரெஷ்கோவ்ஸ்கயா, த்ஸெரெத்தேலி ஆகியோர் கூறுவதை ஒப்புக்கொள்கிறேம். ஆனுல் பணக்காரர்களோ, பணக்காரக் குடும்பங்களிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களோதான் அரசாங்கத்தை நிர்வகிக்க, நிர்வாகத்தின் சாதாரணமான அன்ருட வேலையைப் பார்க்கத் திறனுள்ளவர்கள் என்ற குருட்டு நம்பிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று நாம் கோருகிறேம். அதில்தான் நமக்கும், மேற்கூறிய கனவான்களுக்கும் வித்தியாசம். வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகளும் போர்வீரர்களும் அரசாங்க நிர்வாக வேலைக்குப் பயிற்சி பெற வேண்டும், அதை உடனடியாகத் தொடங்கவேண்டும்—அதாவது, எல்லா

உழைப்பாளி மக்களேயும் எல்லா ஏழை மக்களேயும் இந்த வேலைக்காகப் பயிற்றுவதை உடனடியாகத் தொடங்க வேண்டும்—என்று நாம் கோருகிறேம்.

காடெட்டுகளுங்கூட மக்களுக்கு ஜனநாயக முறையைப் போதிக்கத் தயாராயிருக்கின்றனர் என்பதை நாமறிவோம். காடெட்டுச் சீமாட்டிகள், சிறந்த ஆங்கில, பிரெஞ்சு ஆதாரங்களுக்கிணங்க, பெண்களுக்குச் சம உரிமைகள் வேண்டும் என்பது பற்றி வீட்டு வேலைக்காரிகளிடையே சொற்பொழிவாற்றத் தயாராயிருக்கின்றனர். அடுத்தாற்போல வரும் சங்கீதக் கூட்டத்தில், ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில், மேடைமீது முத்தங்கள் பரிமாறுதல் ஏற்பாடு செய்யப்படும்: சொற்பொழிவாற்றிய காடெட்டுச் சீமாட்டி பிரெஷ்கோவ்ஸ்கயாவை முத்தமிடுவாள், பிரெஷ்கோவ்ஸ்கயா மாஜி மந்திரி த்ஸெரெத்தேலியை முத்தமிடுவாள்; இப்படியாகத்தானே குடியாட்சியின் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் பற்றி ஓர் உதாரணபூர்வமான போதனே நன்றியுள்ள மக்களுக்குக் கற்பிக்கப்படும்....

ஆமாம், காடெட்டுகள், பிரெஷ்கோவ்ஸ்கயா, த்ஸெரெத்தேலி ஆகியோர் தங்களுக்கே உரித்தான சொந்த வழியில் ஜனநாயகத்தில் ஈடுபாடுடையவர்கள் என்பதையும், அதனே அவர்கள் மக்களிடையே பிரசாரம் செய்து வருகிறுர்கள் என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறேம். ஆனுல் ஜனநாயகம் பற்றிய நமது கருத்து அவர்களின் கருத்திலிருந்து சிறிது வேறுபட்டிருக்கிறது என்றுல் அதைக் குறித்து என்ன செய்யலாம்?

நமது கருத்தின்படி, போரால் விளைந்துள்ள, கண்டு கேட்டறியாத துன்பங்களேயும் துயரங்களேயும் தணிப்பதற்கும், அதே சமயத்தில் போரால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பயங்கரமான புண்களே ஆற்றுவதற்கும் புரட்சிகரமான ஜனநாயகம் தேவை; ஏழைகளுக்குக் குடியிருப்பு இடங்களேப் பகிர்ந்து கொடுப்பது பற்றி மேற்சொல்லிய உதாரணத்தில் விவரித்தது போன்ற, புரட்சிகரமான நடவடிக்கைகள் தேவை. நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் உணவுப் பண்டங்கள், ஆடைகள், செருப்புகள், முதலியவற்றின் வினியோகத்திலும், நாட்டுப்புறப் பகுதிகளில் நிலம், முதலியவை சம்பந்

தமாயும் முற்றிலும் இதே விதமான வழிமுறை அனுசரிக்கப்பட வேண்டும். இவ்வித உணர்ச்சியோடு அரசாங்க நிர்வாக வேலையை நடத்துவதற்கு இரண்டு கோடி இல்லாவிட்டாலும் ஒரு கோடி மக்களைக் கொண்ட அரசாங்க இயந்திரத்தை, எந்த முதலாளித்துவ அரசிலும் ஒருபோதும் காணக் கிடைத்திராத இயந்திரத்தை, உடனடியாக இயங்கச் செய்ய முடியும். நம்மால் மட்டுமே இவ்வித இயந்திரத்தைப் படைக்க முடியும். ஏனெனில் மக்கள் தொகையில் மிகப் பெரும் பாலானவரின் பூர்ணமான, தன்னலங் கருதாத அனுதாபம் நமக்கு நிச்சயமாக உண்டு. நம்மால்மட்டுமே இவ்வித இயந்திரத்தைப் படைக்க முடியும்; ஏனெனில் நீண்டகாலமாக முதலாளித்துவம் தந்த ''பயிற்சியினால்'' (முதலாளித்துவத்தின் பள்ளியில் நாம் படிக்கச் சென்றது வெட்டியாக அல்ல) கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கும், வர்க்க உணர்வு கொண்டதொழிலாளர்கள் நமக்கு இருக்கின்றனர். இந்தத் தொழிலாளர்கள் தொழிலாளர் மிலீஷியாவை அமைக்கவும், அதைப் படிப்படியாய்ப் பெரிதாக்கி (அதை உடனே விரிவாக்கத் தொடங்கி) முடிவில் சர்வஜன மிலீஷியாவாகச் செய்யவும் முடியும். வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள் தலைமை தாங்க வேண்டும், ஆனால் அரசாங்க நிர்வாக வேலையில் உழைப்பாளி மக்கள் திரளையும், ஒடுக்கப்பட்ட மக்கள் திரளையும் அவர்கள் ஈடுபடுத்தலாம்.

இப்புதிய இயந்திரம் எடுத்துக்கொள்ளும் முதல் நடவடிக்கைகளில் தவிர்க்க முடியாதபடி தவறுகள் ஏற்படும். ஆனால் விவசாயிகள் பண்ணையடிமை முறையிலிருந்து விடுதலை பெற்றுத் தங்கள் காரியங்களைத் தாங்களே மேற்கொண்டு நடத்தப் புறப்பட்டபொழுது தவறுகள் செய்யவில்லையா? நடைமுறையைத் தவிர, மக்களின் உண்மையான சுயாட்சியை நோக்கி உடனடியாகச் செல்வதைத் தவிர, மக்கள் தாங்களே ஆட்சி புரியப் பயிற்சி பெறுவதற்கும், தவறுகளைத் தவிர்ப்பதற்கும் வேறு வழி ஏதாவதுண்டா? தங்களது சமூக நிலை முழுவதின் காரணமாக மூலதனத்தையே முற்றிலும் சார்ந்து கிடக்கிற விசேஷ உத்தியோகஸ்தர்கள் மட்டுமே அரசாங்கத்தை நிர்வகிக்க முடியும் என்பது பூர்ஷ்வா அறிவுஜீவிகளின் குருட்டு நம்பிக்கையாகும். அதைக்

கைவிட வேண்டும்; அதுதான் இன்றையப் பிரதான விஷயம். பூர்ஷ்வாக்களும் அதிகார வர்க்கத்தினரும், ''சோஷலிஸ்ட்'' மந்திரிகளும் பழைய முறைப்படியே ஆட்சி நடத்த முயற்சித்து வருகிறுர்கள்; ஆனுல் அவர்களால் ஆட்சி நடத்த முடியவில்லை. ஏழு மாதங்கள் ஆனபிறகும் விவசாய நாட்டிலே விவசாயிகளின் எழுச்சி ஏற்பட்டு வருவதுதான் அவர்கள் கண்ட பலன்!! இப்படிப்பட்ட நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதுதான் பிரதான விஷயம் ஆகும். ஒடுக்கப்பட்ட மக்களிடையே, உழைப்பாளி மக்களிடையே தங்கள் பலத்தில் நம்பிக்கை யுண்டாகும்படி செய்வதும், ரொட்டி, எல்லாவகை உணவுப் பண்டங்கள், பால், துணி மணிகள், குடியிருப்பு வீடுகள், முதலியவற்றை, ஏழைகளின் நலன்களைக் கருதி, மிகக் கட்டுதிட்டமும் ஒழுங்கும் வாய்ந்த சரியான முறையில் வினியோகிப்பதற்குரிய வேலையை அவர்கள் தாங்களே எடுத்து நடத்த முடியும், எடுத்து நடத்த வேண்டும் என்பதை அவர்களுக்கு நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டுவதும்தான் பிரதான விஷயம். இவற்றைச் செய்தாலொழிய ருஷ்யாவை நிலை குலைவினின்றும் அழிவினின்றும் காப்பாற்ற முடியாது. அரசாங்க நிர்வாகத்தைப் பாட்டாளிகளிடமும் அரைப் பாட்டாளிகளிடமும் ஒப்படைப்பதை மனச்சாட்சி பூர்வமாக, தைரியமாக எங்கும் தொடங்குவது மக்களிடையே சரித்திரத்தில் இதற்குமுன் கண்டிராத புரட்சிப் பேருக்கத்தைக் கிளப்பி, துன்பங்களை எதிர்த்துப் போராடுவதற்குரிய மக்கள் சக்திகளைப் பெருவாரியாகப் பெருக்கித்தரும். இம்மக்கள் முதலாளிகளுக்காகவோ, நிலப்பிரபுக்களுக்காகவோ, அதிகார வர்க்கத்தினருக்காகவோ இன்றி, தடிக் கம்புக்குப் பயப்படுவதால் இன்றி, தங்களுக்காகவே வேலை செய்யத் தொடங்கிவிடுவார்கள். அதனுல் பழைய, குறுகிய கருத்துடைய அதிகார வர்க்கச் சக்திகளுக்கு அசாத்தியமானவை என்று தோன்றிய பற்பல காரியங்கள், கோடிக் கணக்கான பொது மக்களுக்குச் சாத்தியமானவை ஆகிவிடும்.

* * *

அரசாங்க இயந்திரம் என்ற பிரச்சினையுடன் மத்தியத்துவம் என்ற பிரச்சினையும் தொடர்புள்ளது. அதை வெகு ஊக்கத்துடன் ஆனால் மிகப் பொருத்தமற்ற முறையில் தோழர் பஸாரோவ் செப்டம்பர் 27ம் தேதி, ''நோவயா ஷிஸ்ன்'' 138வது இதழில் ''போல்ஷெவிக்குகளும் அதிகாரப் பிரச்சினையும்'' என்ற கட்டுரையில் கிளப்பியுள்ளார்.

தோழர் பஸாரோவ் பின்வருமாறு வாதிக்கிறார்: ''சோவியத்துக்கள் அரசாங்க நடவடிக்கைகளின் எல்லாத் துறைகளுக்கும் பொருத்தமான இயந்திரமல்ல'' என்று. அவர் கூற்றுப்படி ஏழு மாத அனுபவம் காட்டிவிட்டதாம், ''பீட்டர்ஸ்பர்க் நிர்வாகக் கமிட்டியின் பொருளாதார இலாகாவின் கைவசமுள்ள நூற்றுக்கணக்கான தஸ்தாவேஜுகள்'' ஊர்ஜிதப்படுத்தியுள்ளனவாம் — எதை? பல இடங்களில் சோவியத்துக்கள் நடைமுறையில் ''பூர்ண அதிகாரத்தைச்'' செலுத்தி வந்த போதிலும் ''பொருளாதாரச் சீரழிவைத் தடுத்துச் சமாளிக்கும் வேலையில் திருப்திகரமான சாதனை எதையும் அவை நிறைவேற்ற முடியவில்லை'' என்பதை அவை காட்டி ஊர்ஜிதப்படுத்தி யுள்ளனவாம். ''உற்பத்தியின் துறைகளுக்கிணங்கப் பிரித்து, ஒவ்வொரு உற்பத்தித் துறைக்குள்ளும் கறாரான மத்தியத்துவம் ஏற்படுத்தி, எல்லாவற்றையும் ஒரே யொரு, நாடெங்கும் பரவியுள்ள கேந்திரத்துக்கு உட்படுத்தப்பட்டதாயமைந்த'' ஓர் இயந்திரம்தான் தேவைப்படுகிறதாம். தயவு செய்து கேளுங்கள்: ''ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டுள்ள நபர்களைப் பற்றி போல்ஷெவிக்குகள் எவ்வளவுதான் ஏளனமாகப் பேசினாலும் சரி... பழைய இயந்திரத்தை விலக்கி இன்னொன்றை அதனிடத்தில் நிறுவுவதல்ல விஷயம்; அந்தப் பழைய இயந்திரத்தைச் சீர்திருத்துவது மட்டுமே விஷயமாகும்....''

தோழர் பஸாரோவின் இந்த வாதங்கள் எல்லாம் பூர்ஷ்வா வர்க்கத்தின் வாதங்களின் மறுபிரதியாகவும், அதன் வர்க்கப் பார்வையின் ஒரு பிரதிபலிப்பாகவும் இருப்பதைத் தவிர்க்க முடியாமல் போனது உண்மையிலே அதிசயம்தான்.

உண்மையில், ருஷ்யாவில் எங்காவது சோவியத்துக்கள் ''பூர்ண அதிகாரம்'' பெற்றுள்ளன என்று கூறுவது (முதலாளிகள் கூறி வரும், தன்னலங் கருதும், வர்க்கச் சார்பான

பொய்யைத் திரும்பச் சொல்வதாகும், இன்றேல்) கேலிக்கிடமாகும். பூர்ண அதிகாரம் என்பது எல்லா நிலத்தின் மீதும், எல்லா பாங்கிகள் மீதும், எல்லா பாக்டரிகள் மீதும் அதிகாரம் எனப் பொருள்படும். வரலாறு கொஞ்சமாவது தெரிந்தவனும், அரசியலுக்கும் பொருளாதாரத்திற்குமுள்ள தொடர்பு பற்றிய விஞ்ஞான பூர்வமான விஷய விபரங்களைக் கொஞ்சமாவது அறிந்தவனும் இந்த ''அற்ப'' விஷயத்தை ''மறந்து போயிருக்க'' முடியாது.

சோவியத்துக்களிடம் அதிகாரத்தைக் கொடுக்காது அவை எடுக்கும் ஒவ்வொரு முக்கியமான நடவடிக்கைக்கும் குழிபறித்துக்கொண்டு, அரசாங்கத்தைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு, நிலங்கள், பாங்கிகள், முதலானவை மீதும் அதிகாரத்தைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு, பூர்ஷ்வா வர்க்கத்தினர் பொருளாதாரச் சீரழிவிற்குக் காரணம் சோவியத்துக்களே என்று அவை மீது பழி சுமத்துகின்றனர்!! இதுவே அவ்வர்க்கத்தினர் செய்து வரும் வஞ்சகச் சூழ்ச்சியாகும். கூட்டணியின் வருத்தமிக்க அனுபவம் முழுதும் இதுதான்.

சோவியத்துக்கள் ஒரு நாளும் பூர்ண அதிகாரத்தைப் பெற்றிருக்கவேயில்லை. அவை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் தாற்காலிகமான பரிகாரத்தையும், மிகுதியான குழப்பத்தையும் தவிர வேறெதையும் விளைக்க முடியவில்லை.

தங்கள் திடநம்பிக்கை, வேலைத் திட்டம், தங்கள் கட்சி முழுவதின் செயல்தந்திரங்கள் ஆகியவற்றின்படி மத்தியத்துவத்தை ஆதரிப்பவர்களான போல்ஷெவிக்குகளிடம் வந்து மத்தியத்துவம் மிகவும் அவசியம் என்று சொல்வது திறந்த கதவை உடைத்துத் திறப்பது போலாகும். ''நோவயா ஷிஸ்ன்'' எழுத்தாளர்கள் இந்த வீண் வேலையில் ஈடுபட்டுள்ளதற்குக் காரணம், அவர்களது ''நாடெங்கும் பரவிய'' பார்வையை நாம் ஏளனம் செய்வதின் பொருளையும், முக்கியத்தையும் அவர்கள் அறவே புரிந்துகொள்ளாததுதான். ''நோவயா ஷிஸ்ன்காரர்கள்'' இதைப் புரிந்து கொள்ளாததற்குக் காரணம், வர்க்கப் போராட்டம் பற்றிய தத்துவத்தை அவர்கள் சிந்தனை பூர்வமாய் ஏற்றுக்கொள்ளாமல் உதட்டளவில் மட்டுமே ஏற்றுக் கொள்கிறார்கள்.

வர்க்கப் போராட்டத்தைப்பற்றித் தாங்கள் குருட்டுப் பாடம் செய்த சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு தத்துவ ரீதியில் கோமாளித் தனமாயும், நடைமுறையில் பிற்போக்காயுமிருக்கிற ''வர்க்கங்களுக்கு மேற்பட்ட பார்வையிலே'' இடைவிடாமல் சறுக்கி விழுந்தவாறு இருந்து வருகிறார்கள். இவ்வாறு பூர்ஷ்வாக்களை அடிவருடித் திரியும் வேலையை ''நாடெங்கும் பரவிய'' திட்டம் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

அருமை மக்களே, அரசாங்கம் என்பது, ஒரு வர்க்கக் கருத்தோட்டம். அரசாங்கம் என்பது ஒரு வர்க்கத்தால் மற்றொரு வர்க்கத்துக்கு எதிராகச் செலுத்தப்படுகிற பலாத்காரத்தின் ஒரு கருவி, ஓர் இயந்திரம். எவ்வளவு காலம் வரை பலாத்காரத்தின் இந்த இயந்திரம் பூர்ஷ்வா வர்க்கத்தால் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகச் செலுத்தப்பட்டு வருகிறதோ, அவ்வளவு காலம் வரைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் கோஷம் ஒன்றே ஒன்றுதான்: இந்த அரசாங்கத்தைத் தகர்த்தெறிவதே. ஆனால் அரசாங்கம் பாட்டாளி வர்க்கத்தின் அரசாங்கமாகும் போது, பாட்டாளி வர்க்கத்தால் பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராக உபயோகிக்கப்படும் பலாத்காரத்தின் இயந்திரமாகும் போது, பலம் வாய்ந்த அதிகாரத்தையும் மத்தியத்துவத்தையும் முழு மனதுடன், பூர்ணமாக ஆதரிப்பவர்களாவோம்.

இன்னும், எல்லோரும் புரிந்துகொள்கிற வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், நாம் ''திட்டங்களை'' ஏளனம் செய்யவில்லை; ஆனால் பஸாரோவும் அவர் கூட்டத்தாரும் ''தொழிலாளர் கட்டுப்பாட்டை'' நிராகரித்துப் பேசும்பொழுது, ''பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தை'' நிராகரித்துப் பேசும்பொழுது தாங்கள் பூர்ஷ்வா சர்வாதிகாரத்தை ஆதரித்து நிற்கின்றனர் என்பதை அறிந்துகொள்ளத் தவறிவிட்டதைக் குறித்துத்தான் நாம் எள்ளி நகையாடுகிறோம். நடுநிலை வழி என்று ஒன்றுங் கிடையாது; நடுநிலை வழி என்பது குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதியின் வீண் கனவாகும்.

எந்த ஒரு மத்தியக் குழுவும் சரி, எந்த ஒரு போல்ஷெவிக்கும் சரி, சோவியத்துக்களின் மத்தியத்துவத்திற்கு எதிராக,

அவற்றைச் சேர்த்திணைப்பதற்கு எதிராக எக்காலத்திலும் வாதித்ததில்லை. எங்களில் எவரும் உற்பத்தித் துறைகளுக்கிணங்கத் தொழிற்சாலைக் கமிட்டிகளை அமைப்பதையும், அவற்றை மத்தியத்துவப் படுத்துவதையும் எதிர்க்கவே இல்லை. பஸாரோவின் அம்புகள் குறிதவறிச் செல்கின்றன.

''மத்தியத்துவத்தைக்'' குறித்தல்ல, ''திட்டங்களைக்'' குறித்தல்ல, சீர்திருத்தவாதத்தைக் குறித்து நாம் சிரிக்கத்தான் செய்கிறோம், சிரித்துத்தானிருக்கிறோம், சிரித்துக்கொண்டுதானிருப்போம். கூட்டணியின் அனுபவத்திற்குப் பிறகு, உங்களுடைய சீர்திருத்தவாதம் கேலிக்கிடமானதாகும். ''பழைய இயந்திரத்திற்குப் பதில் புதியதொன்றை அமைப்பது அல்ல, பழையதையே சீர்திருத்துவது'' என்று சொல்வதற்குச் சீர்திருத்தவாதியாக இருப்பது என்றுதான் பொருள், புரட்சிகரமான ஜனநாயகவாதியல்ல, சீர்திருத்த ஜனநாயக வாதியாகி விடுவது என்றுதான் பொருள். சீர்திருத்த வாதம் என்பது ஆளும் வர்க்கம் சலுகைகள் தருவதைத்தான் குறிக்குமே தவிர அதன் வீழ்ச்சியைக் குறிக்காது. ஆளும் வர்க்கம் சலுகைகளைத் தருகிறது, எனினும் அதிகாரம் அதன் கையில்தான் இருக்கிறது.

கூட்டணியின் அரை வருட காலத்தில் இதையேதான் சோதனை செய்தும் பார்த்தாய்விட்டது.

இதைக் குறித்துத்தான் நாம் சிரிக்கின்றோம். வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய போதனையை நன்கு புரிந்து கொள்ளத் தவறிவிட்ட பஸாரோவ், ''ஆமாம், அப்படித்தான்; நாங்கள் சீர்திருத்தங்களை எவ்வகையிலும் எதிர்க்கவில்லை, தொழிலாளிகள் நாடெங்கும் பரவிய கட்டுப்பாட்டில் பங்கு கொள்வதை நாங்கள் ஆதரிக்கிறோம். நாங்கள் அதை முழுதும் ஏற்றுக்கொள்கிறோம்'' என்று பாடும் பூர்ஷ்வா வர்க்கத்தினரின் கானத்தில் தானும் அகப்பட்டுக்கொள்கிறார். நல்ல பிள்ளையான பஸாரோவ் யதார்த்தத்தில் முதலாளிகளுக்குப் பின்பாட்டுப் பாடுகிறார்.

கடுமையான வர்க்கப் போராட்டத்திற்கிடையே ''நடு'' நிலையைக் கடைப்பிடிக்க முயலும் மக்களின் நிலைமை எப்பொழுதும் இவ்வாறுதான் இருந்து வந்துள்ளது, எப்பொழுதும் இவ்வாறுதான் இருந்து வரும். வர்க்கப் போராட்டத்

தைப் புரிந்துகொள்ளச் சக்தியற்றுப் போன காரணத்தால் தான் ''நோவயா ஷிஸ்ன்'' எழுத்தாளர்களின் கொள்கை பூர்ஷ்வா வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே கேலிக்கிடமான, நிரந்தரமான ஊசலாட்டமாக இருக்கிறது. .

''திட்டங்கள்'' போட்டபடி, சுறுசுறுப்பாயிருங்கள், அருமை நாட்டினரே! அது அரசியலல்ல, அது வர்க்கப் போராட்டத்துக்குரிய விஷயமல்ல; இந்தத் துறையில் நீங்கள் பொது மக்களுக்கு உபயோகமாயிருக்கலாம். உங்கள் பத்திரிகையில் பொருளாதார நிபுணர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். உற்பத்தியையும் வினியோகத்தையும் ஒழுங்கு முறைக்குக் கொண்டு வருவதற்குரிய பிரச்சினைகளைக் கவனிக்கத் தயாராயிருக்கிற எஞ்சினீயர்கள், முதலானோருடன் இணைந்து கொள்ளுங்கள். ருஷ்யாவில் பண்டங்களின் உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றையும் பாங்கிகள், ஸிண்டிக்கேட்டுகள் முதலியவற்றையும் பற்றிய கறாரான புள்ளி விவரங்களைக் குறித்துக் காரியரீதியான பரிசீலனை செய்வதற்கென்று உங்களுடைய பெரிய ''இயந்திரத்தின்'' (உங்கள் பத்திரிகையின்) நடுப்பக்கத்தை உபயோகியுங்கள். இதன் மூலம் நீங்கள் மக்களுக்குப் பயன் படலாம். ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு கால் என்ற உங்களுடைய போக்கு இவ்விஷயத்தில் அவ்வளவு குறிப்பாகத் தீங்கு ஏதும் செய்யாது. ''திட்டங்கள்'' பற்றிய இப்படிப்பட்ட வேலையினால் உங்களுக்குத் தொழிலாளிகளின் நன்றிதான் கிடைக்குமே தவிர ஏளனமல்ல.

பாட்டாளி வர்க்கம் வெற்றிகொள்ளும்பொழுது கீழ்க் கண்டவாறு செய்யும்: அது தொழிலாளர் ஸ்தாபனங்களின் கட்டுப்பாட்டின்கீழ் பொருளாதார நிபுணர்கள், எஞ்சினீயர்கள், விவசாய நிபுணர்கள், முதலியோரை வேலைக்கு அமர்த்தும்; ''திட்டம்'' வகுப்பதற்கு, அதைச் சரிபார்ப்பதற்கு, மத்தியத்துவப்படுத்துவதின்மூலம் உழைப்பை மிச்சப்படுத்தும் வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு, மிக எளிய, மலிவான, வசதியான, சர்வ வியாபகமான கட்டுப்பாட்டுக்குகந்த நடவடிக்கைகளையும் வழிமுறைகளையும் கண்டுபிடித்துத் தருவதற்கு அவர்களை அமர்த்தும். இவ்வேலைக்காக அந்தப் பொ

ருளாதார நிபுணர்களுக்கும், புள்ளி விவரக்காரர்களுக்கும், தொழில் நுணுக்க நிபுணர்களுக்கும் நாம் நல்ல ஊதியம் கொடுப்போம். ஆனல்... ஆனல் அவர்கள் மனச் சான்றின் படியும் பூர்ணமாகவும் உழைப்பாளிகளின் நலன்களைக் கருதி வேலை செய்து வரவில்லையென்றல் உண்பதற்கு எதுவும் தர மாட்டோம்.

மத்தியத்துவமும் ''திட்டமும்'' எங்களுக்கு உடன்பாடானவைதான். ஆனல் அந்த மத்தியத்துவமும் திட்டமும் பாட்டாளி வர்க்க அரசாங்கத்துக்குரியவையாயிருக்க வேண்டும், சுரண்டுகிறவர்களுக்கு எதிராக ஏழை மக்களின், உழைப்பாளிகளின், சுரண்டப்பட்டோரின் நலன்களைக் கருதி, பொருள் உற்பத்தி, வினியோகம ஆகியவற்றில் பாட்டாளி வர்க்கத்தின் ஒழுங்குமுறைக்கு இயைந்தவையாக இருக்க வேண்டும். ''நாடெங்கும் பரவிய'' என்பதற்கு ஒரே ஒரு பொருளைத் தான் நாம் ஏற்றுக் கொள்ள முடியும். முதலாளிகளின் எதிர்ப்பை முறிப்பது, மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு, அதாவது பாட்டாளிகள், அரைப் பாட்டாளிகள் ஆகியோருக்கும் தொழிலாளிகள், ஏழை விவசாயிகள் ஆகியோருக்கும் அனைத்து அதிகாரத்தையும் தருவது என்ற பொருளைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள முடியும்.

* * *

போல்ஷெவிக்குகள் நீடித்து அரசாள முடியாது என்பதற்குக் கூறியுள்ள ஐந்தாவது வாதம் ''நிலைமை மிகவும் சிக்கலானது'' என்பதுதான்...

ஆஹா, எப்படிப்பட்ட அறிஞர்கள் இவர்கள்! ஒருவேளை ''மிகவும் சிக்கலான நிலைமை'' இல்லாமற்போனல் அவர்கள் புரட்சியுடன் சமரசம் செய்து கொள்ளத் தயாராயிருப்பார்கள் போலும்.

அப்படிப்பட்ட புரட்சிகள் ஒருபொழுதும் நடப்பதில்லை. அவ்விதமான புரட்சிக்கு ஏங்கிப் பெருமூச்சு விடுவது பூர்ஷ்வா அறிவுஜீவியின் பிற்போக்கு அழுகை தவிர வேறென்றுமில்லை. மிகவும் சிக்கலானதல்ல என்று தோன்றும் நிலைமையில் புரட்சி துவங்கினலும், அப்புரட்சியின் வளர்ச்சி எப்பொழுதும் அசாதாரணச் சிக்கலான நிலைமையை உண்டாக்கிவிடுகிறது.

உண்மையான, ஆழ்ந்த புரட்சி, மார்க்ஸின் மொழியைக் கூறுமிடத்து[28] ''மக்களின்'' புரட்சி, நம்புதற்கருமையான அளவிலே சிக்கல் மிகுந்த, வேதனை மிக்க ஒரு நிகழ்முறை ஆகும். பழைய சமுதாய அமைப்பு முறையும் கோடிக்கணக் கான மக்களின் பழைய வாழ்வு முறையும் மடிந்து, புதிய சமுதாய அமைப்பு முறையும் கோடிக்கணக்கான மக்களின் புதிய வாழ்வு முறையும் பிறக்கிற நிகழ்முறை ஆகும் அது. புரட்சி என்பது மிகக் கடுமையான, வெறிகொண்ட, உக்கிர மான வர்க்கப் போராட்டமாகும், உள்நாட்டுப் போராகும். வரலாற்றில் காணும் எந்த மகத்தான புரட்சியும் உள்நாட் டுப் போரின்றி நிகழ்ந்தேறியதில்லை. ''உருமாலை முக்காடிட் டவர்தான்''[29] ''மிகவும் சிக்கலான நிலைமை'' ஒன்றில்லாத உள் நாட்டுப் போர் நடக்கும் என்று எண்ண முடியும்.

மிகவும் சிக்கலான நிலைமையில்லாது போனால் புரட்சி யே இருக்காது. ஓநாய்களுக்குப் பயந்தவர்கள் காட்டிற்குள் செல்லக் கூடாது.

ஐந்தாவது வாதத்தில் விவாதிப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் பொருளாதார அல்லது அரசியல் அர்த்தமோ, அல்லது வேறெந்த அர்த்தமோ அதில் ஏதுமில்லை. புரட்சி யால் பீதியடைந்து துன்பப்படும் மக்களின் பெருமூச்செறிவு தான் அதில் அடங்கியுள்ளது. உதாரணத்துக்காக இது பற்றி எனது இரண்டு சொந்த அனுபவங்களைக் கூற விரும் புகிறேன்.

ஜுலை நாட்களுக்குச் சிறிது முன்னால் செல்வரான ஓர் எஞ்சினீயருடன் பேசிக்கொண்டிருந்தேன். இந்த எஞ்சினீ யர் ஒரு காலத்தில் புரட்சிவாதி, சோஷல்-டெமாக்ரடிக் இயக்கத்தில் கலந்துகொண்டவர்; போல்ஷெவிக் கட்சி அங் கத்தினராகவும் இருந்தவர். கொந்தளித்துப் பொங்குகிற, அடக்க முடியாத நிலையில் இருக்கிற தொழிலாளிகள் மீது அவர் இப்போது ஒரேயடியாக பயமும் சினமும் கொள்கிறார். ''அவர்கள் குறைந்த பட்சம் ஜெர்மன் தொழிலாளிகளைப் போலாவது இருப்பார்களானால்...'' என்றார் அவர் (அவர் நன்கு கற்றவர், வெளிநாடுகளுக்குப் போய் வந்தவர்).''நிச் சயமாக, சமூகப் புரட்சி தவிர்க்க முடியாதது என்பதை நான் பொதுவாக அறிவேன். ஆனால் இங்கு, போரின் காரண

மாகத் தொழிலாளிகளின் தரம் இப்படி குறைக்கப்பட்டுப் போயிருக்கையில்... அதை ஒரு புரட்சி என்று சொல்ல முடியாது, பாதாளப் படுகுழி என்றுதான் சொல்ல வேண்டும்.''

ஜெர்மானிய எக்ஸ்பிரஸ் ரயில் வண்டி எவ்வாறு ஒரு ஸ்டேஷனுக்கு வந்து சேருகிறதோ, அதே போல் சரித்திரமும் சாத்வீகமான வகையில், அமைதியாக, மென்மையாக, துல்லியமான முறையில் சமூகப் புரட்சியை நடத்திச் செல்லுமாயின் அவர் அதை ஏற்கத் தயாராயிருந்தார். நிதானமிக்க கண்டக்டர் ஒருவன் வண்டிக் கதவைத் திறந்து, ''இது சமூகப் புரட்சி ஸ்டேஷன்! Alle aussteigen (எல்லோரும் இங்கு இறங்குங்கள்)!'' என்று தெரிவிப்பான். அப்படி ஏற்பட்டால் தீத் தீத்திச்சுகளின் கீழ் எஞ்சினீயராக இருப்பதை விட்டு, தொழிலாளர் ஸ்தாபனங்களின் கீழ் எஞ்சினீயராக இருப்பதற்கு அவரால் ஏன் முடியாது?

அம்மனிதர் வேலை நிறுத்தங்களைப் பார்த்துள்ளவர். மிகவும் சமாதானமாயுள்ள காலங்களில்கூட மிகச் சாதாரணமான வேலை நிறுத்தம் எவ்வளவு உணர்ச்சியாவேசத்தைக் கிளப்பிவிடுகிறது என்பது அவருக்குத் தெரியும். வர்க்கப் போராட்டம் ஒரு பெருந் தேசத்திலுள்ள எல்லா உழைப்பாளி மக்களையும் கிளப்பிவிடும்போது, நிலப்பிரபுக்களால் நூற்றுக் கணக்கான வருடங்கள் துன்புறுத்தப்பட்டும், முதலாளிகளாலும் ஜாரிஸ்ட் அதிகார வர்க்கத்தினராலும் பல பத்தாண்டுகளாகக் கொள்ளையடிக்கப்பட்டும், மிதிக்கப்பட்டும் வந்த கோடிக் கணக்கான மக்களைப் போரும் சுரண்டலும் மிகக் கொடிய துன்பத்தில் தள்ளிவிடும்போது, இந்த புயல் எத்தனை கோடி மடங்கு சீற்றமுள்ளதாயிருந்து தீரும் என்பதும் அவருக்கு நிச்சயம் தெரியும். ''தத்துவரீதியில்'' இவையனைத்தையும் அவர் புரிந்துகொள்கிறார்; வெறுமே உதட்டளவில் ஒப்புக்கொள்கிறார்; ஆனால் உண்மையில் ''மிகவும் சிக்கலான நிலைமையைக்'' கண்டு அவர் பீதியடைகிறார்.

ஜூலை நாட்களுக்குப் பிறகு, கெரேன்ஸ்கிய் அரசாங்கம் என் மீது மிகுந்த பரிவோடு கவனம் வைத்து என்னைக் கௌரவித்ததன் காரணமாக, நான் தலைமறைவாக இருந்து வேலை செய்ய வேண்டியதாயிற்று. என் போன்றவர்களுக்குப்

புகலிடம் தந்தவர்கள் தொழிலாளர்கள் தான் என்பது தெரிந்த விஷயம். பெத்ரோகிராத் நகர்ப்புறத்திலுள்ள தொழிலாளர் வட்டாரமொன்றில், தொழிலாளி ஒருவனது சிறிய வீட்டில் பகலுணவு பரிமாறிக்கொண்டிருக்கும் சமயம். வீட்டு அம்மையார் மேஜைமீது ரொட்டியை வைக்கிறார். வீட்டுக்காரரர் கூறுகிறார்: ''எவ்வளவு நேர்த்தியான ரொட்டி, பாருங்கள். இப்பொழுது மோசமான ரொட்டி கொடுக்கத் துணியமாட்டார்கள் 'அவர்கள்'. பெத்ரோகிராதில் நல்ல ரொட்டி கொடுப்பார்கள் என்ற எண்ணத்தையே நாம் அநேகமாய் விட்டுவிட்டிருந்தோம்'' என்று.

ஜூலை நாட்களைப் பற்றிய இந்த வர்க்கரீதியான மதிப்பீட்டைக் குறித்து நான் அதிசயித்தேன். அந்த நிகழ்ச்சியின் அரசியல் முக்கியத்துவத்தைச் சுற்றி எனது சிந்தனை சுழன்று கொண்டிருந்தது. நிகழ்ச்சிகளின் பொதுப் போக்கில் இது வகிக்கும் பாத்திரம் என்ன என்று சீர்தூக்கியவாறும், சரித்திரத்தில் இந்தக்கோணல் மாணலான பாதையை உண்டாக்கி வைத்த நிலைமையைப் பற்றியும் அதனால் ஏற்படப் போகும் நிலைமையைப் பற்றியும் பகுத்தாராய்ந்தவாறும், மாறி விட்ட நிலைமைக்குத் தகுந்தாற்போல் நமது கோஷங்களையும் கட்சி இயந்திரத்தையும் எப்படி மாற்றுவது என்றெல்லாம் எண்ணமிட்டவாறும் இருந்தேன். இல்லாமையை அறியாத நான் ரொட்டி பற்றி யாதொரு சிந்தனையும் கொண்டதில்லை. ரொட்டி தானாகவே கிடைத்துக் கொண்டிருப்பது, அது எழுத்தாளன் செய்யும் வேலையின் உபவிளைவு என்று இருந்து வந்தவன் நான். யாவற்றிற்கும் அடிப்படையான, ரொட்டிக்காக நடக்கும் வர்க்கப் போராட்டம் என்ற விஷயத்தை, மிகச் சிக்கலான, சுற்றுப் பாதைவழியே, அரசியல் பகுப்பாராய்ச்சி மூலமாகச் சிந்தனை அணுகுகிறது.

ஆனால் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் இந்தப் பிரதிநிதி—அவன் நல்ல சம்பளம் வாங்குகிற, அறிவாளிகளான தொழிலாளர்களில் ஒருவனாக இருந்தாலுங்கூட—அதிசயிக்கத் தகுந்த எளிமையுடனும் நேர்மையுடனும், மனோதிடத்துடனும், ஆச்சரியப்படத்தக்க தெளிவான பார்வையுடனும் விஷயத்தை நேராக எதிர்கொண்டு சமாளிக்கிறான். நம் போன்ற அறிவுஜீவிகளுக்கும் இந்த குணத்திறன்களுக்கும் வெகு தூரம்,

பூமிக்கும் நட்சத்திர மண்டலத்துக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரம். உலகம் முழுதும் இரண்டு முகாம்களாகப் பிரிந்துள்ளது: உழைப்பாளிகளாகிய ''நாம்'', சுரண்டுவோராகிய ''அவர்கள்''. நடந்தவற்றைக் குறித்து எந்த விதமான திகைப்பும் கிடையாது. உழைப்புக்கும் மூலதனத்துக்கும் இடையே நடந்து வரும் நீண்ட காலப் போராட்டத்தில் ஏற்படுகிற பல சண்டைகளில் அதுவும் ஒன்று. அறுப்பறுக்கும்போது மணி சிதறத்தான் செய்யும்.

''புரட்சியின் இந்த 'மிகவும் சிக்கலான நிலைமை' என்ன துன்பகரமாயுள்ளது'' என்றுதான் பூர்ஷ்வா அறிவுஜீவி சிந்திக்கிறான், உணர்கிறான்.

''நாம் 'அவர்களைக்' கொஞ்சம் நெருக்கிக் கசக்கினோம்; முன் போல் 'அவர்கள்' இப்போது முரட்டுத்தனமாக நடந்து கொள்ளத் துணிய மாட்டார்கள். மறுபடியும் நெருக்கிக் கசக்குவோம்—அவர்களை ஒரேயடியாகத் தூக்கியெறிந்து விடுவோம்'' என்றுதான் தொழிலாளி சிந்திக்கிறான், உணர்கிறான்.

* * *

இனி, கடைசியாக, ஆறுவது வாதம்: ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை மட்டுமின்றி, அத்துடன் புரட்சி முழுவதையும் அப்படியே வெள்ளத்திலடித்துச் செல்லும்படியான எதிர்ப்புச் சக்திகளின் நெருக்குதல் பூராவையும்'' பாட்டாளி வர்க்கத்தால் ''எதிர்த்து நிற்கவும் முடியாது''.

கனவான்களே, எங்களைப் பயமுறுத்தப் பார்க்காதீர்கள்; அதில் வெற்றி பெற மாட்டீர்கள். கர்னீலோவ் கலகத்தில்[30] (கெரேன்ஸ்கிய் ஆட்சி அதன் தன்மையிலிருந்து எந்த விதத்திலும் மாறுபட்டதல்ல) இந்த எதிர்ப்புச் சக்திகளையும் அவைகளின் நெருக்குதலையும் நாங்கள் கண்டிருக்கிறோம். பாட்டாளி வர்க்கமும் ஏழை விவசாயிகளும் கர்னீலோவ் கும்பலை எப்படி துடைத்தெறிந்தார்கள் என்பதை எல்லோரும் பார்த்தார்கள், அதை மக்கள் நினைவில் கொண்டும் இருக்கிறார்கள். பூர்ஷ்வா வர்க்கத்தினுடைய ஆதரவாளர்களின் நிலைமையும் சரி, புரட்சியை அதிவிசேஷமாக ''எதிர்த்த'', மிகவும் சௌகரிய வாழ்க்கை நடத்தும் சிறு வட்டார

நிலச் சொந்தக்காரர்களுடைய ஒரு சில பிரதிநிதிகளின் நிலைமையும் சரி, எவ்வளவு இரங்கத் தக்கதாயிருந்தது, ஆதரவற்றதாயிருந்தது என்பதையும் எல்லோரும் பார்த்தார்கள், அதை மக்கள் நினைவில் கொண்டும் இருக்கிறார்கள். அரசியல் நிர்ணய சபையைக் கூட்டும் வரையில் (கலகம் செய்யும் விவசாயிகளுக்கெதிரான ''ராணுவ நடவடிக்கைகளின்'' பாதுகாப்பின்கீழ் இது கூட்டப்படும்!) கெரேன்ஸ்கிய் கும்பலையும் (அதாவது, கர்னீலோவ் கும்பலையும்) த்ஸெரெத்தேலி-புலீகின் பித்தலாட்ட டூமா சபையையும் ''சகித்துக் கொள்ளுங்கள்'' என்று செப்டம்பர் 30ம் தேதியிட்ட ''தேலோ நரோதா'' தொழிலாளர்களைக் கேட்டுக்கொண்டது. ''தேலோ நரோதா'' மிகுந்த ஆவேசத்துடன் ''நோவயா ஷிஸ்ன்'' கூறும் ஆருவது வாதத்தை அப்படியே திரும்பச் சொல்லி, தொண்டை கிழியப் பின்வருமாறு கத்துகிறது: ''கெரேன்ஸ்கிய் அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் பணியப் போவதில்லை'' (அதாவது, சோவியத்துக்களின் ஆட்சிக்கு, தொழிலாளிகள், விவசாயிகளின் ஆட்சிக்குப் பணியப் போவதில்லையாம். இனக்கொலை வெறியர்கள், யூத எதிர்ப்பாளர்கள், முடியரசுவாதிகள், காடெட்டுகள் ஆகியோருக்குப் பின்னடைந்துவிட விரும்பாத ''தேலோ நரோதா'' சோவியத்துக்களின் ஆட்சியை, தொழிலாளிகள், விவசாயிகளின் ஆட்சியை, ''திரோத்ஸ்கிய்-லெனின்'' ஆட்சி என்று அழைக்கிறது; அத்தகைய தந்திரங்களை சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் மேற்கொள்ள முற்புட்டு விட்டார்கள்!).

ஆனால் ''நோவயா ஷிஸ்னோ'', அல்லது ''தேலோ நரோதாவோ'' வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளிகளைப் பயமுறுத்திவிட முடியாது. ''கெரேன்ஸ்கிய் அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்திலும் பணியப் போவதில்லை'' என்று நீங்கள் சொல்கிறீர்கள்; அதாவது இன்னும் எளிமையாய், நேரடியாய், தெளிவாய்க் கூறப் போனால், கெரேன்ஸ்கிய் அரசாங்கம் ''கர்னீலோவ் கலகத்தைத்'' திரும்பவும் நடத்தப் போகிறது என்கிறீர்கள். ''தேலோ நரோதாவைச்'' சேர்ந்த கனவான்கள் இது ஓர் ''உள்நாட்டுப் போர்'' ஆகுமென்றும், இது ஒரு ''பயங்கரமான சாத்திய நிலை'' என்றும் சொல்லத் துணிந்துள்ளனர்!

இல்லே, கனவான்களே! நீங்கள் தொழிலாளிகளே ஏமாற்றிவிட முடியாது. அது உள்நாட்டு யுத்தமாகாது. ஒரு சில கர்னீலோவ் கும்பலின் நிச்சயமாய்த் தோல்வியடையப் போகிற கலகமாகத்தான் ஆகும்; அவர்கள் மக்களுக்குப் ''பணிய மறுக்க'' விரும்புவார்களானல், வீபர்க்கில் கர்னீலோவ் கும்பலுக்கு நேர்ந்ததை எப்படியாவது விரிந்த அளவில் மீண்டும் நிகழ்த்துமாறு மக்களேத் தூண்டிவிட விரும்புவார்களானல், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் அதை **விரும்புவார்களாளுல்**, சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சியின் உறுப்பினரான கெரேன்ஸ்கிய் அதை விரும்புவாரானல், அவர் மக்களே வெறி கொள்ளும் படி செய்ய முடியும். ஆனல் கனவான்களே, தொழிலாளிகளேயும் போர் வீரர்களேயும் இதனுல் நீங்கள் பயமுறுத்திவிட முடியாது.

என்ன எல்லேயற்ற திமிர்! புதிய புலீகின் டூமா சபையைப் பித்தலாட்டமாக உண்டாக்கி வைத்தார்கள்; மோசடி செய்து தங்களுக்கு உதவியாகப் பிற்போக்கான கூட்டுறவுச் சங்கத்தினரையும் கிராமக் குலாக்குகளேயும் கொண்ட ஒரு கும்பலேத் திரட்டிக்கொண்டார்கள்; இந்தக் கும்பலோடு (சொத்துடைமையுள்ள வர்க்கங்கள் என்று சொல்லிக் கொள்ளப்படும்) முதலாளிகளேயும் நிலப்பிரபுக்களேயும்அணி சேர்த்துக்கொண்டார்கள்; இந்த விதமான கர்னீலோவ் கும்பலின் உதவியைக் கொண்டு **மக்களின் சித்தத்தை**, தொழிலாளர், விவசாயிகளின் சித்தத்தை, **முறியடிக்க** விரும்புகிருர்கள்.

விவசாயிகள் மிகுதியாக வாழும் ஒரு நாட்டில், வெள்ளப் பெருக்கு எடுத்தாற்போல் எங்கு பார்த்தாலும் விவசாயிகளின் எழுச்சி ஏற்பட்டுப் பரவும்படி அவ்வளவு மோசமான நிலேமைக்கு விவகாரங்களே அவர்கள் கொண்டுவந்துவிட்டார்கள்! சற்றே நினேத்துப் பாருங்கள்: மக்கள் தொகையில் 80 சதவிகிதம் விவசாயிகள் கொண்ட ஒரு ஜனநாயகக் குடியரசில் அவர்கள் விவசாயிகளே எழுச்சி செய்யும்படி நிர்ப்பந்தித்திருக்கிருர்கள்.... செர்னேவின் பத்திரிகையும் ''சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின்'' கட்சிக்குரிய பிரசாரத்தாளுமான ''தேலோ நரோதா'', செப்டம்பர் 30ம் தேதியன்று, ''சகித்துக் கொள்ளுங்கள்'' என்று தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வெட்கமின்றிப் புத்திமதியளிக்க

முன்வந்த இதே ''தேலோ நரோதா'', செப்டம்பர் 29ம் தேதியன்று ஒரு தலையங்கக் கட்டுரையில் பின்வருமாறு ஒப்புக்கொண்டு தீர வேண்டியிருந்தது:

''குறிப்பாக அதே மத்திய ருஷ்யாவின் நாட்டுப்புறப் பிரதேசங்களில் இன்னும் ஆதிக்கம் செலுத்தும் கொத்தடிமை உறவுமுறைகளை ஒழிப்பதற்கு இதுவரை அனேகமாக ஒன்றும் செய்யப்படவில்லை.''

அதே ''தேலோ நரோதா'', அதே செப்டம்பர் 29ம் தேதியத் தலையங்கக் கட்டுரையில், ''புரட்சிகரமான மந்திரிகள்'' கையாளும் செயல்முறைகளில் ''ஸ்தொலீபின் பிடி இன்னும் இருந்து வருவது நன்ருகத் தெரிகிறது'' என்று சொல்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வது என்ருல், அதை இன்னும் தெளிவாக, எளிமையாகக் கூறுவதானுல், அப்பத்திரிகை கெரேன்ஸ்கிய், நிக்கீத்தின், கிஷ்கின் கூட்டத்தை ஸ்தொலீபின் குழுவினர் என்றழைக்கிறது.

''ஸ்தொலீபின் குழுவினராகிய'' கெரேன்ஸ்கியும் அவன் கூட்டத்தாரும் விவசாயிகளை எழுச்சியுறுமாறு நிர்ப்பந்தித்துள்ளனர்; இப்பொழுது விவசாயிகளுக்கெதிராக ''ராணுவ நடவடிக்கைகள்'' எடுத்து வருகின்றனர்; அதே சமயம் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டப் போவதாகக் கூறி மக்களைத் தேற்ற முயல்கின்றனர் (ஆனுல் கெரேன்ஸ்கியும் த்ஸெரெத்தேலியும் குறித்த தேதியாகிய செப்டம்பர் 17ல் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும் என்று ஜூலை 8ல் புனிதமாகப் பிரகடனம் செய்து ஏற்கனவே ஒரு முறை மக்களை ஏமாற்றிவிட்டு, பிறகு தங்கள் வாக்குறுதியை மீறிவிட்டு, மென்ஷெவிக் டான் கூறிய புத்திமதியைக்கூட மதிக்காமல், அப்போதுள்ள மென்ஷெவிக் மத்திய நிர்வாகக் கமிட்டி விரும்பியபடி அக்டோபர் மாத முடிவுக்குங்கூட அதை ஒத்திப் போடாமல், நவம்பர் மாத முடிவிற்கு ஒத்திப் போட்டனர்). ஏற்கனவே இதுபோன்ற விஷயத்தில் பொய் பேசியவர்களை என்னவோ மக்கள் நம்பிவிட முடியும் என்பது போலவும், வெகு தொலைவிலே யுள்ள கிராமங்களிலும் ராணுவ நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிற, அதாவது வர்க்க உணர்வு பெற்ற விவசாயிகள் தான்தோன்றித்தனமாகக்

கைது செய்யப்படுவதையும் தேர்தல்களில் பித்தலாட்டம் செய்வதையும் மூடி மறைக்கிற சர்க்காரால் அரசியல் நிர்ணய சபை முறையாகக் கூட்டப்படும் என்று ஏதோ மக்கள் நம்பிவிட முடியும் என்பது போலவும், அரசியல் நிர்ணய சபையை விரைவாகக் கூட்டுகிறோம் என்று கூறி ''ஸ்தொலீபின் குழுவினரான'' கெரேன்ஸ்கியும் அவன் கூட்டத்தாரும் மக்களைத் தேற்ற முயல்கின்றனர்.

விவசாயிகளை எழுச்சி செய்யுமாறு நிர்ப்பந்திப்பது, பிறகு வெட்கங் கெட்ட முறையில் அவர்களிடம் ''நீங்கள் 'சகித்துக் கொள்ள' வேண்டும், நீங்கள் காத்திருக்க வேண்டும், எழுச்சி செய்யும் விவசாயிகளை 'ராணுவ நடவடிக்கைகளால்' அடங்கச் செய்து வரும் சர்க்காரை நீங்கள் நம்ப வேண்டும்'' என்று பேசுவது!

சமாதானத்தைப் பற்றி எப்பொழுது பார்த்தாலும் சொற்களை அள்ளி வீசிக்கொண்டு, அதே சமயத்தில் யுத்தத்திலீடுபட்டுள்ள எல்லா நாடுகளுக்கும் நியாயமான சமாதானத்தைப் பிரேரிக்காமல், ஜூன் 19க்குப் பிறகு நடந்த தாக்குதலில் நூறாயிரக் கணக்கான ருஷ்யப் போர்வீரர்கள் மடியும் நிலைமைக்கு விவகாரங்களைக் கொண்டுவந்து விடுவது, போர் நீடிக்கும் நிலைமைக்குக் கொண்டு வந்துவிடுவது, ஜெர்மானிய மாலுமிகள் கலகஞ்செய்து தங்கள் அதிகாரிகளைக் கடலில் எறியும் நிலைமைக்குக் கொண்டுவந்துவிடுவது! இருந்த போதிலும் தொழிலாளிகளிடமும் விவசாயிகளிடமும் உயிரை விடும் போர்வீரர்களிடமும் வெட்கங்கெட்ட முறையில் ''நீங்கள் சகித்துக்கொள்ளவேண்டும்'', ''ஸ்தொலீபின் குழுவினரான'' கெரேன்ஸ்கிய் அரசாங்கத்தை நம்ப வேண்டும், கர்னீலோவின் ஆட்களான தளகர்த்தர்களை இன்னும் ஒரு மாதத்திற்கு — அந்த ஒரு மாதத்திற்குள் ஒருவேளை இன்னும் ஆயிரக் கணக்கான போர்வீரர்களை மரணப் படுகுழிக்கு அவர்கள் அனுப்பிவிடுவார்கள் — நம்ப வேண்டும்... ''நீங்கள் சகித்துக்கொள்ள வேண்டும்'' என்று பேசுவது.

இது வெட்கங்கெட்ட காரியமில்லையா?

இல்லை, சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கனவான்களே, கெரேன்ஸ்கியின் கட்சித் தோழர்களே, நீங்கள் போர்வீரர்களை ஏமாற்றிவிட முடியாது!

தொழிலாளிகளும் போர்வீரர்களும் ஒரு நாள் கூட, ஓர் அதிகப்படி மணி நேரம் கூட கெரேன்ஸ்கியின் அரசாங்கத்தைச் சகித்துக்கொள்ள மாட்டார்கள். சோவியத் அரசாங்கம் போரிலீடுபட்டுள்ள எல்லா நாடுகளுக்கும் நியாயமான சமாதானத்தை உடனடியாகப் பிரேரிக்கும் என்பதும், அதன் வாயிலாக உடனே போர் நிறுத்தத்தைப் பெற்று விரைவில் சமாதானத்தை நிலைபெறச் செய்வது அதற்கு முற்றிலும் சாத்தியமாகலாம் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

ஒரு நாள்கூட, ஓர் அதிகப்படி மணி நேரம்கூட நமது விவசாயிப் படையிலுள்ள போர்வீரர்கள் கெரேன்ஸ்கிய் அரசாங்கம்—விவசாயி எழுச்சியை நசுக்குவதற்கு ராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிற அந்த அரசாங்கம்— சோவியத்துக்களின் சித்தத்திற்கு எதிராக அதிகாரத்தில் இருக்க அனுமதிக்க மாட்டார்கள்.

இல்லை, சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கனவான்களே, கெரேன்ஸ்கியின் கட்சித் தோழர்களே, நீங்கள் இனிமேல் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் ஏமாற்றிவிட முடியாது.

* * *

மரணபயம் கொண்டிருக்கும் ''நோவயா ஷிஸ்ன்'' எதிர்ப்புச் சக்திகளின் நெருக்குதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வெள்ளத்திலடித்துச் செல்லும் என்று நமக்கு உறுதியாய்க் கூறுகிறது. இந்தப் பிரச்சினையில் தர்க்க ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மற்றொரு விபரீதமான தவறு இருக்கிறது. பயத்தால் மதியிழந்து கிடப்பவர்கள் மட்டுமே அதைக் காணத் தவறுவர்.

''எதிர்ப்புச் சக்திகளின் நெருக்குதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வெள்ளத்திலடித்துச் செல்லும்'' என்று நீங்கள் கூறுகிறீர்கள். மிக நன்று. ஆனால், எனது அருமையான நாட்டினரே, நீங்கள் அனைவரும் கற்றவர்கள், பொருளாதார நிபுணர்கள். ஜனநாயகத்தை பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிர்வைத்துக் கூறுவது பொருளற்றது, அது அறியாமைக்கு அறிகுறி என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அது ராத்தலுக்குக் கெஜங்களை எதிர்வைத்துக் கூறுவது போலாகும். ஏனெனில் ஜனநாயகப் போக்குள்ள பூர்ஷ்

வாக்களும் உண்டு, (வாந்தேயை[31] ஏற்படுத்திவிட வல்லதான) குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தின் ஜனநாயகப் போக்கற்ற பகுதிகளும் உண்டு.

''எதிர்ப்புச் சக்திகள்'' என்பது வெறுஞ் சொற்றொடர்; அதற்குரிய வர்க்கப் பெயர் (நிலப்பிரபுக்களால் தாங்கி நிறுத்தப்படுகிற) **பூர்ஷ்வா வர்க்கம்.**

நிலப்பிரபுக்களோடு கூடிய பூர்ஷ்வா வர்க்கமும், பாட்டாளி வர்க்கமும், முக்கியமாக விவசாயிகளாயுள்ள சிறு உடைமையாளர்களான குட்டி பூர்ஷ்வா வர்க்கமும் என்று, ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டையும் போலவே, ருஷ்யாவும் இந்த மூன்று அடிப்படைச் ''சக்திகளாகப்'' பிரிந்துள்ளது. ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் (அதோடு ருஷ்யாவிலும்) நீண்டகாலமாக இருந்துவருவதாகத் தெரிவது இந்த மூன்று அடிப்படைச் சக்திகளே. இவை விஞ்ஞான பூர்வமான பொருளாதாரப் பகுப்பாராய்ச்சியால் மட்டிலும் அன்றி, எல்லாத் தேசங்களின் நவீனகால சரித்திரத்திலுள்ள அரசியல் அனுபவத்தாலும், பதினெட்டாம் நூற்றுண்டு தொடங்கி நடந்துள்ள எல்லா ஐரோப்பியப் புரட்சிகளின் அனுபவத்தாலும், 1905, 1917ம் ஆண்டுகளில் நடந்த இரு ருஷ்யப் புரட்சிகளின் அனுபவத்தாலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

ஆக, பாட்டாளி வர்க்க அதிகாரத்தை பூர்ஷ்வா வர்க்கத்தின் நெருக்குதல் வெள்ளத்திலடித்துச் செல்லும் என்று சித்தரித்துப் பாட்டாளிகளை நீங்கள் பயமுறுத்துகிறீர்களா? உங்கள் அச்சுறுத்தலுக்கு இந்த ஒரே ஒரு பொருள்தான் உண்டு. வேறு பொருள் கிடையாது.

நல்லது. உதாரணமாக, பூர்ஷ்வா வர்க்கம் தொழிலாளிகள், விவசாயிகளின் ஆட்சியை வெள்ளத்திலடித்துச் செல்ல முடியுமானல், அவ்வாறு நடைபெருமல் தடுப்பதற்கான ஒரேயொரு வழி, ''கூட்டணி''தான், அதாவது, பூர்ஷ்வா வர்க்கத்துக்கும், குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தினருக்கும் இடையே நேச உறவு, ஒப்பந்தம். வேறு எதனையும் கற்பனை செய்து பார்க்க முடியாது!!

ஆனல் கூட்டணியை அரை வருட காலமாகச் சோதனை செய்து பார்த்தாய்விட்டது: அது சீரழிவுக்குக் கொண்டு

வந்து விட்டிருக்கிறது. எனது அருமையான, ஆனால் சிந்தனைத் திறனற்ற ''நோவயா ஷிஸ்ன்'' மக்களே! அந்தக் கூட்டணியை நீங்களே கைவிட்டு விட்டிருக்கிறீர்கள்.

ஆகவே இதிலிருந்து அறியக் கிடப்பது என்ன?

''நோவயா ஷிஸ்ன்'' மக்களே! நீங்கள் மிகவும் மூளைக் குழப்பமடைந்துவிட்டீர்கள். மதியிழந்து போகும் அளவுக்குப் பயத்திற்கு இடங்கொடுத்து விட்டீர்கள். ஐந்து வரை எண்ணுவதிருக்கட்டும், மூன்று வரை எண்ணுவது என்ற மிக அற்பமான விஷயத்தைப் பற்றியும்கூட உங்களால் கோவையாகச் சிந்திக்க முடியவில்லை.

ஒன்று: அதிகாரமனைத்தும் பூர்ஷ்வா வர்க்கத்துக்கே என்பது—வெகு காலமாக இதற்கு ஆதரவு காட்டுவதை நீங்கள் நிறுத்திவிட்டீர்கள். பூர்ஷ்வா வர்க்கமோ அதைப் பற்றிச் சூசகமாகக்கூடப் பேசுவதற்குத் துணியவில்லை. ஏனென்றால் ஏற்கனவே ஏப்ரல் 20-21ம் தேதிகளில்[32] தோளின் ஒரு குலுக்கால் மக்கள் அந்த விதமான அதிகாரத்தைத் தூக்கியெறிந்துவிட்டனர் என்பதையும், இப்பொழுது இன்னும் மூன்று மடங்கு மனவுறுதியுடனும் இரக்கமின்றியும் அதனைத் தூக்கி யெறிவர் என்பதையும் பூர்ஷ்வா வர்க்கம் அறிந்துள்ளது—அல்லது: குட்டிபூர்ஷ்வாக்களுக்கு அதிகாரம், அதாவது அவர்களுக்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்குமிடையே கூட்டணி (நேச உறவு, ஒப்பந்தம்); ஏனெனில், குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தினர் தன்னந் தனியாக, சுதந்திரமாக அதிகாரத்தை மேற்கொள்ள விரும்புவதுமில்லை; அவ்வாறு மேற்கொள்ளவும் இயலாது. இவ்வுண்மை எல்லாப் புரட்சிகளின் அனுபவத்தாலும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது, பொருளாதார விஞ்ஞானத்தாலும் மெய்ப்பிக்கப்படுகிறது. ஒரு முதலாளித்துவ நாட்டில் ஒருவன் மூலதனத்தின் சார்பில் நிற்க முடியும், அல்லது உழைப்பின் சார்பில் நிற்க முடியும், ஆனால் இரண்டுக்கும் நடுவே நிற்பது சாத்தியமல்ல என்று இப்பொருளாதார விஞ்ஞானம் விளக்குகிறது. ருஷ்யாவில் இக்கூட்டணி ஆறு மாத காலம் எத்தனையோ வழிகளை யெல்லாம் சோதித்துப் பார்த்தும் தோல்வியடைந்துவிட்டது.

அல்லது, கடைசியாக: பூர்ஷ்வா வர்க்கத்துக்கு எதிராக, அதன் எதிர்ப்பை முறிப்பதற்காக, அதிகாரமனைத்தும்

பாட்டாளி வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும் அளிப்பது. இது இன்னும் சோதிக்கப் படவில்லை. ''நோவயா ஷிஸ்னேச்'' சேர்ந்த கனவான்களே, நீங்கள் பூர்ஷ்வா வர்க்கத்திடம் உங்களுக்கு இருக்கும் பயத்தின் மூலம் மக்களையும் பயமடையச் செய்ய முயன்று கொண்டு, இந்த வழியை மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று அவர்கள் மனதைத் திருப்புவதற்குப் பார்க்கிறீர்கள்.

நான்காவது வழியெதுவும் கண்டுபிடிப்பது சாத்தியமில்லை.

ஆகவே ''நோவயா ஷிஸ்ன்'' பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் குறித்துப் பயமடைவதாக இருந்தால், தான் கூறுவது போல், பூர்ஷ்வாக்களால் பாட்டாளி வர்க்க அதிகாரம் தோற்கடிக்கப்படும் என்ற காரணத்திற்காக அதனை மறுத்துத் தள்ளுவதாக இருந்தால், அது முதலாளிகளுடன் சமரசம் செய்து கொள்ளும் நிலைக்கு மறைமுகமாக மீண்டும் போய்ச் சேருவது என்றுதான் பொருள்படும்!!! எதிர்ப்பைக் கண்டு யார் அஞ்சுகிறானோ, இந்த எதிர்ப்பை முறித்தெறிய முடியும் என்பதை யார் நம்பவில்லையோ, ''முதலாளிகளின் எதிர்ப்பைப்பற்றி அஞ்சுங்கள், அதனைச் சமாளிக்க உங்களால் இயலாது'' என்று யார் மக்களை எச்சரிக்கிறானோ, அவன் அதன் மூலம் மீண்டும் முதலாளிகளுடன் சமரசம் செய்துகொள்ள அழைக்கிறான். இது வெட்ட வெளிச்சமான உண்மை.

எல்லாக் குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளும் இப்போது குழப்பமடைந்தது போலவே ''நோவயா ஷிஸ்னும்'' மிக இரங்கத்தக்க நிலையில், படு மோசமாகக் குழப்பமடைந்துள்ளது. கூட்டணி சீரழிந்துவிட்டது என்பதை உணர்ந்துள்ள அந்த ஜனநாயகவாதிகள் வெளிப்படையாக அதனை ஆதரிக்கத் துணியவில்லை. அதே நேரத்தில் பூர்ஷ்வா வர்க்கத்தின் பாதுகாப்பில் இருந்து கொண்டு, பாட்டாளிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் முழு அதிகாரமும் மாற்றப்படுவதைக் குறித்துப் பயமடைகின்றனர்.

* * *

முதலாளிகளின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சுவது, அதே சமயத்தில் தன்னைப் புரட்சிவாதி என்று சொல்லிக்கொள் வது, தானும் சோஷலிஸ்டாக மதிக்கப்பட வேண்டும் என்று ஆசை கொள்வது—இது எவ்வளவு மானக்கேடான விஷயம்! சர்வதேச சோஷலிஸம், சந்தர்ப்பவாதத்தால் பீடிக்கப் பட்டு, கொள்கை ரீதியில் எவ்வளவு கீழ்த்தரமான நிலைக்கு வந்திருக்க வேண்டும், இத்தகைய குரல்கள் கிளம்புவது சாத்தியமாவதென்றால்!

முதலாளிகளுடைய எதிர்ப்பின் பலத்தை நாம் ஏற் கனவே கண்டுள்ளோம், மக்கள் அனைவரும் கண்டிருக்கின் றனர். ஏனெனில் மற்ற எல்லா வர்க்கங்களையும்விட முதலா ளிகள் மிகுந்த வர்க்க உணர்வு பெற்றவர்கள், ஆதலால் அவர்கள் சோவியத்துக்களின் முக்கியத்தை உடனே அறிந்து கொண்டனர், உடனே தங்கள் சக்தியனைத்தையும் திரட்டி, எல்லா வகையாலும் முயன்று, முடிந்ததெல்லாம் பார்த்து, நம்புதற்கே இயலாத பொய்களையும் அவதூறுகளையும் கூறி, ராணுவச் சதிகளைச் செய்து பார்த்தனர். எதற்காக? சோவியத்துக்களைச் செயலறச் செய்வதற்காக! அவைகளை ஒன்றுக்குமாகாமல் செய்து விட! (மென்ஷெவிக்குகள், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் உதவியால்) அவற்றை வேசிநிலைக்குக் கொண்டுவர! அவற்றைப் பேச்சுக்கூடங்களாக மாற்றிவிட! மாதக் கணக்கில் வீண் பேச்சை வளர்த்துக் கொண்டு, புரட்சி பற்றி விளையாடிக்கொண்டு, விவசாயி களையும் தொழிலாளிகளையும் சோர்வு கொள்ளச் செய்ய!

ஆனல் பாட்டாளிகள், ஏழை விவசாயிகளின் எதிர்ப்பு வன்மையை நாம் இன்னும் காணவில்லை. ஏனெனில் பாட் டாளி வர்க்கத்தின் கையில் அதிகாரம் வந்த பின்புதான் இந்த வன்மை முழு அளவில் வெளியாகும். அப்பொழுதுதான் வறு மையாலும் முதலாளித்துவ அடிமைத்தனத்தாலும் நசுக்கப் பட்டுக் கிடக்கும் கோடிக் கணக்கான மக்கள், அரசாங்க அதி காரம் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் கைக்கு வந்துவிட்ட தென்பதையும், நிலப்பிரபுக்களையும், முதலாளிகளையும் எதிர்த்துப் போராடுவதற்கு அந்த அதிகாரம் ஏழைக ளுக்கு உதவி செய்கிறதென்பதையும், அந்த அதிகாரம் நிலப் பிரபுக்கள், முதலாளிகளின் எதிர்ப்பை முறித்தெறிந்து

வருகிறதென்பதையும் தங்கள் அனுபவத்தில் கண்டு உணர்ந்து கொள்வார்கள். அப்பொழுதுதான் முதலாளிகளின் எதிர்ப்பை ஒடுக்குவதற்கு மக்களிடையே பயன்படுத்தப்படாமல் உள்ளடங்கிக் கிடக்கும் சக்திகள் எவ்வளவு உள்ளன என்பதை நாம் காண்போம்; அப்பொழுதுதான் எங்கெல்ஸ் கூறும் ''உள்ளடங்கியிருக்கும் சோஷலிஸம்''[33] என்பது வெளிப்படும்; அப்பொழுதுதான், சாத்வீக எதிர்ப்பாலோ அன்றி நேரடிச் செயலாலோ தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும், தொழிலாளி வர்க்க ஆட்சி முறையின் வெளிப்படையான அல்லது இரகசியமான பகைவர்களில் ஒவ்வொரு பத்தாயிரம் பேருக்கும் ஈடு கொடுக்குமாறு பத்து லட்சம் புதிய போராட்டக்காரர்கள் கிளம்புவதை நாம் காண்போம். இவ்வளவு காலம் வரை அவர்கள் அரசியல் உணர்வின்றி, வறுமையிலும் நிராசையிலும் சாரமற்ற வாழ்வு வாழ்ந்து, தாங்கள் மனிதர்கள் என்பதிலும், வாழ்வதற்குத் தங்களுக்கும் உரிமையுண்டென்பதிலும், மத்தியத்துவம் வாய்ந்த நவீனகால அரசாங்கத்தின் முழு சக்தியும் தங்களுக்காகச் சேவை புரிய முடியும் என்பதிலும், பாட்டாளி வர்க்க மிலீஷியா முழு நம்பிக்கையுடன் அரசாங்கத்தை நிர்வகிப்பதில் உடனடியாக, நேரடியாக, தினந்தோறும் பங்கு கொள்ளுமாறு தங்களையும் அழைக்கும் என்பதிலும் நம்பிக்கை இழந்தவர்களாய் இருந்து வந்திருக்கிறவர்கள்.

பிளெகானவ், பிரெஷ்கோவ்ஸ்கயா, த்ஸெரெத்தேலி, செர்னேவ் கூட்டத்தாரின் தயாளமிகுந்த உதவியைக் கொண்டு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் ஜனநாயகக் குடியரசைக் கறைப்படுத்துவதற்கு, பண மூட்டைகளுக்கு அடிமைத் தொண்டு செய்வதன் மூலம் ஜனநாயகக் குடியரசைக் கறைப்படுத்துவதற்கு, தங்கள் சக்தியாலாகிறது அனைத்தையும் செய்து பார்த்துவிட்டார்கள். பொது மக்கள் அக்கறையின்மைக்கும் அசிரத்தைக்கும் இரையாகும் அளவுக்கு அவர்கள் காரியம் புரிந்திருக்கிறார்கள். மக்களுக்கு எல்லாம் ஒன்றுதான்: பசித்தவன் குடியரசுக்கும் முடியரசுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்க்க முடியாது; பனியில் உறைந்து, காலுக்குச் செருப்பின்றி, களைத்துச் சளைத்துப் போய் அன்னியரின் நலன்களுக்காக உயிர்த்தியாகம் செய்யும் போர்

வீரர்கள் குடியரசின் மீது காதல் கொள்ளும் மனோநிலையில் இல்லை.

ஆனால் எப்பொழுது ஒவ்வொரு தேர்ச்சியற்ற தொழிலாளியும், ஒவ்வொரு வேலையற்றவனும், சமையற்காரியும், சீரழிந்த விவசாயியும். பாட்டாளி வர்க்க அரசாங்கம் பணக்காரர்களுக்குக் கைகட்டிச் சேவகம் செய்யாமல் ஏழைகளுக்கு உதவுகிறது என்பதையும், புரட்சி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள இவ்வரசாங்கம் தயங்குவதில்லை என்பதையும், புல்லுருவிகளிடமிருக்கும் தேவைக்கதிகமாயுள்ள உணவுப் பொருள்களை அது பறிமுதல் செய்து பசியால் வாடும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கிறது என்பதையும், அது வீடற்றவர்களைப் பணக்காரர்களின் வீடுகளில் பலவந்தமாகக் குடி வைக்கிறது என்பதையும், பணக்காரர்களைப் பாலுக்குப் பணம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்துகிறது, ஆனாலும் எல்லா ஏழைக் குடும்பங்களிலும் உள்ள குழந்தைகளுக்கும் போதுமான பால் வினியோகமாகும் வரை ஒரு சொட்டுப் பாலும் பணக்காரர்களுக்குக் கொடுப்பதில்லை என்பதையும், நிலம் உழைப்பவர்களுக்கு மாற்றப்படுகிறது என்பதையும், பாக்டரிகளும் பாங்கிகளும் தொழிலாளர் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகின்றன என்பதையும், தங்கள் செல்வங்களை மறைத்து வைக்கும் கோடீஸ்வரர்களுக்கு உடனடியாகக் கடுந்தண்டனை அளிக்கப்படுகிறது என்பதையும்—பத்திரிகைகள் வாயிலாக இல்லாமல்—கண்கூடாகப் பார்த்தறியும் பொழுது, ஏழைகள் பார்த்து உணரும்பொழுது, முதலாளிகள் அல்லது குலாக்குகளின் எந்தச் சக்திகளும், கோடிகோடியாகப் பணத்தைப் போட்டுப் புரட்டிக் கொண்டிருக்கும் உலக மூலதனத்தின் எந்தச் சக்திகளும் மக்கள் புரட்சியைத் தோற்கடித்து அழித்துவிட முடியாது. இதற்கு மாறாக, உலகமெங்கும் **மக்கள் புரட்சிதான்** வெற்றி கொள்ளும். ஏனெனில் எல்லா நாடுகளிலும் சோஷலிஸ்ட் புரட்சி பக்குவமடைந்து வருகிறது.

நமது புரட்சி தன்னைப் பற்றியே பயங்கொள்ளாதிருக்குமானால், பாட்டாளி வர்க்கத்துக்குப் பூர்ண அதிகாரத்தையும் மாற்றிவிடுமானால், நமது புரட்சியை எவராலும் தோற்கடிக்க முடியாது. நமக்குப் பின்பலமாக அளவிட முடியாத

வகையில் பெரிதான, அதிக வளர்ச்சியுடைய, ஸ்தாபனரீதியாக நன்கு திரட்டப்பட்டுள்ள உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சக்திகள் இருக்கின்றன. போரின் காரணமாக அவை தாற்காலிகமாக அடக்கப்பட்டுள்ளன, ஆனால் அழிந்துவிடவில்லை—அதற்கு மாறாக, போரால் அவை பன்மடங்கு பெருகியுள்ளன.

* * *

ஏழை விவசாயிகளின் மனப்பூர்வமான ஆதரவையும நிச்சயமாகப் பெறக் கூடிய போல்ஷெவிக் அதிகாரத்தை, அதாவது பாட்டாளி வர்க்கத்தின் அதிகாரத்தை, முதலாளிக் கனவான்கள் ''வெள்ளத்திலடித்துச் செல்வார்கள்'' என்று அஞ்சுவதா! என்ன கிட்டப் பார்வை இது! மக்களைக் கண்டு என்ன மானக் கேடான அச்சம்! என்ன பாசாங்கு! இந்த அச்சத்தை வெளிக்காட்டுவோர் ''உயர்ந்த'' (முதலாளி வர்க்கத்தால் அப்படிக் கருதப்படுகின்ற, ஆனால் உண்மையில் அழுகிப்போன) ''சமூகத்தைச்'' சேர்ந்தவர்களாவர். ''நியாயம்'' என்ற சொல்லை அந்தச் சமூகம் நம்பிக்கையின்றி, பழகிப்போன போக்கிலே, வெறும் வார்த்தையளவிலே, அதற்கு அர்த்தம் எதுவும் கொடுக்காமலே, உச்சரிக்கிறது.

இதோ ஓர் எடுத்துக்காட்டு:

திரு. பெஷெகோனவ் பிரபலமான அரைக் காடெட்டு. பிரெஷ்கோவ்ஸ்கயா, பிளெகானவ் போன்றவர்களின் மனப்போக்குடைய, மிதமிஞ்சிய மிதவாத துருதோவிக் இவரைப் போல் வேறொருவரைப் பார்க்க முடியாது. பூர்ஷ்வா வர்க்கத்துக்கு அடிபணிவதில் இவரை மிஞ்சின மந்திரி வேறு யாரும் இருந்ததில்லை. ''கூட்டணியையும்'', முதலாளிகளுடன் சமரசம் செய்து கொள்வதையும் இவரைவிட அதிக ஆர்வத்துடன் ஆதரிக்கும் வேறொருவரை உலகம் ஒருபொழுதும் கண்டதில்லை!

தற்காப்புவாதிகளின் ''இஸ்வேஸ்தியா'' என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளபடி ''ஜனநாயக'' (புலீகினின் என்று இதை வாசிக்க) மகாநாட்டில் தமது பேச்சில் இக்கனவான் கீழ்க்கண்ட விஷயங்களை ஒப்புக்கொண்டு தீரவேண்டியிருந்தது:

''இரண்டு வேலைத் திட்டங்கள் இருக்கின்றன. மக்கள் குழுக்களின் கோரிக்கைகளை, வர்க்க, தேசீயக் கோரிக்கைகளைக் கொண்டது ஒன்று. இத்திட்டத்தை மிக வெளிப்படையாக ஆதரிக்கின்றனர் போல்ஷெவிக்குகள். ஆயினும் ஜனநாயகத்தின் மற்றப் பிரிவினர்கள் இந்த வேலைத் திட்டத்தை எளிதில் தள்ளிவிட முடியாது. ஏனென்றால் உழைப்பாளி மக்களின் கோரிக்கைகள் அவை, ஏமாற்றப்பட்ட, ஒடுக்கப்பட்ட தேசீய இனங்களின் கோரிக்கைகள் அவை. ஆகவே போல்ஷெவிக்குகளுடன் உறவு அறுத்துக்கொள்வது, இந்த வர்க்கக் கோரிக்கைகளை மறுத்து விடுவது, அவ்வளவு எளிதல்ல. இதற்குப் பிரதான காரணம், இக்கோரிக்கைகள் சாராம்சத்தில் நியாயமானவை என்பதே. ஆனல் புரட்சிக்கு முன் நாம் எந்த வேலைத் திட்டத்தைக் கோரிப் போராடினேமோ, அதே வேலைத் திட்டம், எந்த வேலைத் திட்டத்துக்காக நாம் புரட்சியைச் செய்தோமோ, அதே வேலைத் திட்டம், மற்ற சந்தர்ப்பங்களில் நாம் ஏகமனதாக ஆதரிக்கக் கூடிய அதே வேலைத் திட்டம், இன்றைய நிலைமையில் மிகப் பெரிய அபாயமாக அமைந்துள்ளது. இந்த அபாயம் இன்று இன்னும் பெரிதாக இருக்கிறது. ஏனென்றால் அரசாங்கத்தால் ஏற்று நிறைவேற்றச் சாத்தியமற்ற நேரத்தில் இக்கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டியதாயிருக்கிறது. முதலில், நாம் முழுமையை—அரசாங்கத்தை—பாதுகாக்க வேண்டும், அதை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும். அவ்வாறு செய்வதற்கு ஒரே வழி என்ன வென்றால் எவ்வளவு நியாயமான, தர்க்கக் கட்டுள்ள கோரிக்கைகளாய்த் தோன்றினும் அவற்றை நிறைவேற்றுவதல்ல; அதற்கு மாருக, எல்லாப் பகுதியினரிடமிருந்தும் எளிமையும், தியாகமும் வரவேண்டும். (''இஸ்வேஸ்தியா த்ஸிக்'', செப்டம்பர் 17 தேதிய இதழ்.)

முதலாளிகள் அதிகாரத்தில் இருக்கும் வரை தாம் பாதுகாப்பது முழுமையை அல்ல, ருஷ்ய, ''நேசதேச'' ஏகாதிபத்திய முதலாளிகளின் சுய நலன்களையே என்பதைத் திரு. பெஷெகோனவ் அறியத் தவறிவிடுகிருர். முதலாளிகளுடன் உறவு முறித்துக் கொண்ட பிறகுதான், அவர்களுடைய இரகசிய உடன்படிக்கைகளுடனும், அவர்களுடைய நாடுபிடிக்கும் நடவடிக்கைகளுடனும், அவர்களுடைய பாங்கி மோசடிகளுடனும், நிதி மோசடிகளுடனும் உறவு முறித்துக் கொண்ட பிறகுதான் இந்த யுத்தம் நாடுபிடிக்கிற யுத்தமாக, ஏகாதிபத்திய யுத்தமாக, கொள்ளையடிக்கிற யுத்தமாக இருப்பது நிற்கும் என்பதைத் திரு. பெஷெகோனவ் அறியத்

தவறுகிறுர். இதன் பிறகுதான்—அதிகாரபூர்வமாக நியாய மான சமாதானப் பிரேரணையை முன்வைத்து, பகைவர் அதற்கு ஒத்து வராமற் போனுல் மட்டிலுமே—இப்போர் பாதுகாப்புப் போராக, நியாயமான போராக ஆகும் என் பதைத் திரு. பெஷெகோனவ் அறியத் தவறுகிறுர். முத லாளித்துவ நுகத்தடியைத் தூக்கியெறிந்துவிட்டு, விவசாயி களுக்கு நிலத்தை அளித்து, பாங்கிகளேயும் பாக்டரிகளேயும் தொழிலாளர் கட்டுப்பாட்டில் வைத்துள்ள நாட்டின் பாது காப்புச் சக்தி முதலாளித்துவ நாட்டின் பாதுகாப்புச் சக்தி யைவிடப் பல மடங்கு அதிகமாயிருக்கும் என்பதைத் திரு. பெஷெகோனவ் அறியத் தவறுகிறுர்.

இதில் பிரதான விஷயமென்ன வென்ருல், போல்ஷெ விஸத்தின் நியாயத்தை ஏற்றுத் தீர வேண்டிய நிர்ப்பந்தத் திலே, அதன் கோரிக்கைகள் ''உழைப்பாளி மக்களின்'', அதாவது பெரும்பாலான மக்களின் கோரிக்கைகளேயாகும் என்று ஏற்றுத் தீரவேண்டிய நிர்ப்பந்தத்திலே, அதன் மூலம் அவர் தமது நிலே முழுவதையும், குட்டி பூர்ஷ்வா ஜனநாய கம் முழுவதின் நிலே முழுவதையும், கைவிடுகிறுர் என்பதைத் திரு. பெஷெகோனவ் அறியத் தவறுகிறுர்.

இதில்தான் நமது பலம் அடங்கியுள்ளது. அதனுல்தான் நமது அரசாங்கம் எவராலும் வெல்ல முடியாததாயிருக்கும். ஏனெனில் நமது எதிரிகளுங்கூட போல்ஷெவிக் வேலேத் திட்டம் ''உழைப்பாளி மக்களின்'' வேலேத் திட்டம், ''ஒடுக் கப்பட்ட தேசீய இனங்களின்'' வேலேத் திட்டம் என்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றனர்.

என்ன இருந்தாலும், திரு. பெஷெகோனவ் காடெட்டு களின் அரசியல் நண்பர், ''யெதீன்ஸ்த்வோ'', ''தேலோ நரோதா'' ஆகியவற்றைச் சேர்ந்த குழுவினரின் அரசியல் நண்பர், பிரெஷ்கோவ்ஸ்கயா, பிளெகானவ் போன்றவர் களின் அரசியல் நண்பர் ஆவார். குலாக்குகளின் பிரதிநிதி அவர்; கர்னீலோவ் துருப்புகளாலோ, கெரேன்ஸ்கிய் துருப்பு களாலோ (இரண்டும் ஒன்றேதான்) போல்ஷெவிக்குகள் தோற்கடிக்கப்படுவார்களேயாஞல் கொல்லப்படாத போல் ஷெவிக்குகளின் கண்களேத் தங்கள் குடைகளால் குத்திப்

பிடுங்க நாளைய தினமே வந்து சேரக் கூடிய மனைவியரையும் சகோதரிகளையும் பெற்ற கனவான்களின் பிரதிநிதி அவர்.

அத்தகைய கனவான் போல்ஷெவிக்குகளின் கோரிக்கைகள் ''நியாயமானவை'' என்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்.

அவருக்கு ''நியாயம்'' என்பது வெற்றுச் சொல். ஆனல் அரைப் பாட்டாளிகளான ஜனத்திரளுக்கு, போரால் சீரழிவுற்று, வதைபட்டு, நொந்து போயுள்ள நாட்டுப்புற, நகர்ப்புறக் குட்டி பூர்ஷ்வாக்களின் பெரும்பான்மையோருக்கு அது வெற்றுச் சொல்லல்ல. அவர்களுக்கு அது, பட்டினிச் சாவு பற்றிய, ஒரு ரொட்டித் துணுக்கைப் பற்றிய, மிகக் கடுமையான, மிகமிக உடனடியான, மகத்தான பிரச்சினையாகும். அதனல்தான் பட்டினி கிடப்போர், சீரழிந்து போகிறவர்களின் நலன்களுக்கும் சுரண்டுவோர்கள் நலன்களுக்கும் இடையே ''கூட்டணியின்'', ''சமரசத்தின்'' அடிப்படையில் எந்தக் கொள்கையையும் உருவாக்கிக்கொள்ள முடியாது. அதனல்தான் இந்த ஜனக்கூட்டங்களில் மிகப் பெரும்பாலானவரின் ஆதரவு போல்ஷெவிக் அரசாங்கத்திற்குக் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அறிவுஜீவிகளும் சரி, பொருளாதார லோகாயதவாதத்தின் ''புட்டத்தைச் சிந்தனைக் கண்ணுலே தரிசித்திருக்கிறோம்'' என்ற உயர்வான அடிப்படையில் தங்களையும் மார்க்ஸீயவாதிகள் என்று பிரகடனப்படுத்திக் கொள்ள மனங் கொள்ளும் போக்கிரிகளும் சரி, நியாயம் என்பது ஒரு வெற்றுச் சொல் என்று கூறுகிறார்கள்.

கருத்துக்கள் மக்கள்திரளைக் கவர்ந்துவிடும் பொழுது ஒரு சக்தியாக மாறுகின்றன. குறிப்பாக இந்தச் சமயத்தில் தான் போல்ஷெவிக்குகள், அதாவது புரட்சிகரமான-பாட்டாளி வர்க்கச் சர்வதேசீய வாதத்தின் பிரதிநிதிகள், உலகெங்கும் எண்ணற்ற உழைப்பாளி மக்கள்திரளைச் செயலுக்குத் தூண்டிவரும் கருத்தைத் தங்களது கொள்கையிலே உருப்பெறச் செய்துள்ளனர்.

நியாயம் மட்டிலும், சுரண்டலுக்கு எதிராகவுள்ள பொது மக்களின் கோபம் மட்டிலும் அவர்களைச் சரியான சோஷலிஸப் பாதைக்கு ஒருபொழுதும் கொண்டுவந்திருக்க

முடியாது. ஆனால் இப்பொழுது முதலாளித்துவ அமைப்பு முறையின் காரணமாக பெரிய பாங்கிகள், ஸிண்டிக்கேட்டுகள், ரயில்வேக்கள், முதலியவற்றைக் கொண்ட பௌதீக சாதனம் வளர்ந்திருக்கிறது; வளர்ச்சியில் முன்னேறியுள்ள நாடுகளின் பெருத்த அனுபவம் இப்போது மிக அற்புதமான இயந்திரச் சாதனங்களை — அவற்றை உபயோகித்துக் கொள்ள முடியாதபடி முதலாளித்துவம் இடைஞ்சல் செய்து வருகிறது — சேகரித்து வைத்துள்ளது; வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள், எல்லா உழைப்பாளிகளின், சுரண்டப் பட்டோரின் ஆதரவுடன், இந்தப் பௌதீகச் சாதனத்தைத் திட்டப்படி கைப்பற்றிக்கொண்டு அதை இயக்கிச் செல்வதற்காக இரண்டரை லட்சம் அங்கத்தினர்களைக் கொண்ட கட்சியை இப்போது ஒன்றுதிரட்டியுள்ளனர். ஆக, இப்பொழுது இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கிற காரணத்தால், போல்ஷெவிக்குகள் தங்களிடையே பீதிக்கு இடங்கொடுக்காவிட்டால், அவர்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்வதில் வெற்றி பெறுவார்களேயானால், உலக சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெறும் வரை அவர்கள் அந்த அதிகாரத்தைத் தங்களது கையில் நீடித்து வைத்திருப்பதை உலகில் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

பின்னுரை

முன்னுள்ள வரிகள் ஏற்கனவே எழுதி முடிந்துவிட்ட பிறகு அக்டோபர் முதல் தேதி ''நோவயா ஷிஸ்ன்'' மற்றொரு மணியான முட்டாள்தனத்தைத் தலையங்கக் கட்டுரையில் வெளியிட்டிருந்தது. போல்ஷெவிக்குகளிடம் அனுதாபம் காட்டுவது போன்ற வேஷம் தாங்கியும், ''உங்களைத் தூண்டிவிடுவதற்கு இடங்கொடாதீர்கள்'' (தூண்டுதலைப் பற்றிய கூக்குரல் என்ற பொறியில் நாம் அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கவேண்டும், அதன் நோக்கம் போல்ஷெவிக்குகளைப் பீதியடையச் செய்து அவர்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளாமலிருக்கும்படி செய்வதுதான்) என்ற மதியூகி பிலிஸ்டைன் உத்தேசமாக வேஷம் தாங்கியும் வருவதினால் அது இன்னும் ஆபத்தானதாகும்.

அந்த மணி வாசகம் பின்வருமாறு:

''இயக்கம் அளித்துள்ள பாடங்கள், ஜூலை 3-5ன் பாடங்களைப் போன்றவை ஒரு புறமும், கர்னீலோவ் நாட்களின் அனுபவங்கள் மற்றொரு புறமுமாக நமக்கு மிகத் தெளிவாகக் காட்டுவது என்னவெனில் மக்களிடையே மிகுந்த செல்வாக்கையுடைய ஸ்தாபனங்களைத் தன் ஆணையின்கீழ் வைத்துக்கொண்டுள்ள ஜனநாயகம், உள்நாட்டுப் போரில் தற்காப்பு நிலையில் இருக்குமானால் தோற்கடிப்பதற்கு முடியாத வன்மையுடன் விளங்குகிறது; ஆனால் அது தாக்குதலைத் தொடங்கி நடத்த முற்படுமாகில், நடுவேயுள்ள, ஊசலாடும் பகுதியினரை யெல்லாம் இழந்து தோல்வியடைகிறது.''

இந்த வாதத்தில் வெளியிடப்படும் பிலிஸ்டைன் முட்டாள்தனத்துக்கு மிகச் சிறிதளவேனும், சிறு உருவிலேனும் போல்ஷெவிக்குகள் இணங்கி விடுவாராயின், அவர்கள்

தங்கள் கட்சியையும் புரட்சியையும் அழிவுக்கு ஆளாக்கு வார்கள்.

இந்த வாதத்தைக் கூறும் ஆசிரியர் உள்நாட்டுப் போரைப் பற்றிப் பேசும் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டு (எல்லா விதத்திலும் இனிய சுபாவம் படைத்த சீமாட்டிக்கு லாயக்கான விஷயம் இதுதான்) நம்புதற்கு முடியாத வேடிக்கையான விதத்தில் இப்பிரச்சினை பற்றி **வரலாறு கற்பிக்கும் பாடங்களைத்** திரித்துக் கூறியுள்ளார்.

பாட்டாளி வர்க்கப்-புரட்சிச் செயல்தந்திரங்களின் பிரதிநிதியும் ஸ்தாபகருமாகிய கார்ல் மார்க்ஸ், இந்தப் பாடங்களை, இந்தப் பிரச்சினை பற்றி வரலாறு கற்பிக்கும் பாடங்களைப் பின்வருமாறு தொகுத்துரைத்தார்:

''எழுச்சியும், போர் அல்லது மற்றவைகளைப் போலவே, ஒரு கலையாகும். அது சிற்சில செயல் முறை விதிகளுக்கு உட்பட்டதாகும். அவ்விதிகளைப் புறக்கணித்தால் அப்படிப் புறக்கணிக்கும் கட்சிக்குச் சீரழிவுதான் ஏற்படும். கட்சிகளின் இயல்பையும், இத்தகைய விஷயத்தில் எதிர்ப்படுகிற நிலைமைகளையும் ஒட்டி எழுகின்ற தர்க்கரீதியான அனுமானங்களாகிய இந்த விதிகள் மிகத் தெளிவாகவும் எளிமையாகவும் இருப்பதனுல் 1848ல் கிடைத்த குறுகிய அனுபவத்தைக் கொண்டு ஜெர்மானியர்கள் அவற்றை நன்கறிந்துகொண்டார்கள். முதலாவது, முடிவு வரை செல்வதற்கு (நேர்பொருள்: உங்கள் விளையாட்டின் விளைவுகளை எதிர்கொள்வதற்கு) திடசித்தம் இல்லாத நிலையில், எழுச்சி விஷயத்தோடு ஒரு பொழுதும் விளையாடாதீர்கள். எழுச்சியானது, நிச்சயமற்ற பரிமாணங்களைக் கொண்ட சமன்பாடாகும்; அந்தப் பரிமாணங்களின் மதிப்பு ஒவ்வொரு நாளும் மாறிக் கொண்டிருக்கக் கூடும். உங்களை எதிர்த்து நிற்கும் சக்திகளிடம் ஸ்தாபனம், கட்டுப்பாடு, வழக்கமாகச் செலுத்தும் செல்வாக்கு முதலிய சகல அனுகூலங்களும் இருக்கின்றன'' (மார்க்ஸ் எழுச்சியின் மிகக் ''கடினமான'' உதாரணத்தை மனதிற் கொண்டு கூறுகிருர்: அதாவது, ''உறுதியாக நிலைத்துள்ள'' பழைய அதிகாரத்தை எதிர்த்து, புரட்சியின் செல்வாக்காலும், அரசாங்கத்தின் ஊசலாட்டத்தாலும் இன்னும் உடைந்து சரிந்து போகாமலிருக்கிற சேனையை எதிர்த்துச்

செய்யப்படும் எழுச்சி பற்றிக் கூறுகிறார்); ''பகைவர்களுக் கெதிராக மிகுந்த படைபலம் திரட்டாவிட்டால் உங்களுக் குத் தோல்வியும் சீரழிவும் நிச்சயமே. இரண்டாவது, எழுச்சி யைத் தொடங்கிவிட்ட பிறகு மிகுந்த மனத்திண்மையுடன் செயல் புரிய வேண்டும், மேலேறித் தாக்கியபடியே இருக்க வேண்டும். தற்காப்பில் இருந்து கொள்வது ஒவ்வொரு ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கும் சாவாகத்தான் முடியும்; எதிரி களுடன் பலப் பரீட்சை செய்யுமுன்பே அது தோற்றுவிடும். எதிரிகளின் படைகள் சிதறுண்டு வருகையில், எதிர்பாராத விதத்தில் பகைவரைத் தாக்கவேண்டும். தினந்தோறும் புதிய புதிய வெற்றிகளை—எவ்வளவு சிறியவையாயிருந்தா லும் கவலையில்லை—தயாரித்துக் கொண்டிருப்பீராக. எழுச் சியில் ஏற்பட்ட முதல் வெற்றியால் கிடைத்த ஊக்கத்தின் ஏற்றத்தை இடைவிடாது உயர்ந்தெழச் செய்ய வேண்டும். அதிகப் பலம் வாய்ந்தவர்களை எப்பொழுதும் பின்பற்றுகிற, மிகப் பத்திரமான தரப்பு எது என்று எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிற, ஊசலாட்டமுள்ள பகுதியினரை இவ்வாறு உங்கள் பக்கம் இழுத்துத் திரட்டிக்கொள்ள வேண்டும். பகை வர்கள் உங்களுக்கு எதிராகத் தங்களுடைய படைப் பலத் தைச் சேகரித்துத் திரட்டிக்கொள்வதற்குமுன், அவர்களைப் பின்வாங்கும்படி செய்ய வேண்டும். புரட்சிக் கொள்கையில் இதுவரை நாமறிந்தவர்களில் தலைசிறந்த நிபுணரான தன் தோன் கூறுவதாவது: துணிச்சல், துணிச்சல், மேலும் மே லும் துணிச்சல்!'' (''ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட் சியும்'', ஜெர்மன் பதிப்பு, *1907*, பக். *118*).

''நோவயா ஷிஸ்னைச்'' சேர்நத ''நாங்களும் மார்க் ஸீயவாதிகளே'' என்போர் தங்களைப் பற்றி இவ்வாறு சொல் லலாம்: ''நாங்கள் அதையெல்லாம் மாற்றிவிட்டோம்; மும் மடங்கு துணிச்சலுக்குப் பதில் எங்களிடம் இரண்டு பண் புகள் உள்ளன: 'இரண்டு பண்புகள், ஐயா, நிதானம், கறார்'.[34] உலக வரலாற்றின் அனுபவமும், மகத்தான பிரெஞ்சுப் புரட்சியின் அனுபவமும் 'எங்களுக்குப்' பொருளில்லை. 'எங்களுக்கு' முக்கியமாயிருக்கும் விஷயம் மொல்சாலின் மூக்குக் கண்ணுடியின் மூலம் திரிபுற்றுத் தெரியும் 1917ம் வருடத்து இரண்டு இயக்கங்களின் அனுபவம்தான்.''

இந்த அழகிய மூக்குக் கண்ணுடி இல்லாமல் இவ் வனுபவத்தை நாம் பரிசீலனை செய்து பார்ப்போம்.

ஜூலை 3-5 தேதிய நிகழ்ச்சிகளை ''உள்நாட்டுப் போரு டன்'' நீங்கள் ஒப்பிடுகின்றீர்கள்; ஏனென்ருல் அலேக்ஸின் ஸ்கிய், பெரிவேர்ஸெவ் ஆகியோரையும் அவர்கள் கூட்டத் தாரையும் நீங்கள் நம்பினீர்கள். இத்தகைய மக்களை நம்புவ தும் (ஒரு பெரிய தினசரிப் பத்திரிகையின் சாதனம் அனைத் தும் தங்களுக்கிருந்த போதிலும் ஜூலை 3-5 தேதிய நிகழ்ச்சி களைப் பற்றிய தகவல் சேகரிக்கத் தாங்களாக எதுவுமே செய்யாதிருப்பதும்) ''நோவயா ஷிஸ்ன்'' கனவான்களுக் குரிய தனிப்பண்பாகும்.

ஜூலை 3-5 தேதிய நிகழ்ச்சிகள் உள்நாட்டுப் போரின் ஆரம்ப நிலை அல்லவென்றும், போல்ஷெவிக்குகள் அதை ஆரம்ப நிலைக்குள் அடக்கி வைத்திருக்கவில்லை யென்றும், அது உண்மையான உள்நாட்டுப் போர்தான் என்றும் ஒரு விஞடிக்கு வைத்துக் கொள்வோம். அப்படியே வைத்துக் கொண்டு பார்ப்போம்.

அவ்வாருயின், இந்தப் பாடம் எதை மெய்ப்பித்துக் காட்டுகிறது?

முதலாவது, போல்ஷெவிக்குகள் தாக்குதலில் இறங்க வில்லை. ஏனெனில் ஜூலை 3-4ம் தேதி இரவிலும், ஜூலை 4ம் தேதியிலும்கூட, அவர்கள் தாக்குதலில் இறங்கியிருந் தால் பெருமளவிற்கு வெற்றி கண்டிருப்பார்கள் என்பது வாதத்திற்கிடமற்ற விஷயமாகும். உள்நாட்டுப் போர் பற்றி (உண்மை விபரங்கள் காட்டுவது போல, தன்னியல்பாகத் தோன்றிய வெடிப்பை ஏப்ரல் 20-21ம் தேதியது போன்ற ஆர்ப்பாட்டமாக மாற்றுவதைக் குறித்துப் பேசாமல், ''நோ வயா ஷிஸ்ன்'' பேசுவது போல) நாம் பேசுவதானுல் போல் ஷெவிக்குகள் மேற்கொண்ட தற்காப்பு நிலைதான் அவர்களின் பலவீனமாயிருந்தது.

ஆகவே, ''நோவயா ஷிஸ்ன்'' மதியூகிகள் கூறுவது தவறு என்று இந்தப் ''பாடம்'' நிரூபிக்கிறது.

இரண்டாவதாக, ஜூலை 3-4ல் போல்ஷெவிக்குகள் எழுச்சி தொடங்குவதை நோக்கமாகவே கொள்ளவில்லை யென்ருல், போல்ஷெவிக்குகளின் ஒரு பிரிவுகூட அப்படிப்பட்ட

பிரச்சினையைக் கிளப்பவேயில்லை யென்றால், அதற் குரிய காரணம் ''நோவயா ஷிஸ்னுக்கும்'' நமக்குமுள்ள வாதத்திற்கு அப்பாற்பட்டது. ஏனெனில் நாம் இப்போது ''உள்நாட்டுப் போரின்'', அதாவது எழுச்சியின், பாடங்கள் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோமே தவிர, எழுச்சிக்குப் பெரும்பான்மையானவர்களின் ஆதரவு இல்லை யென்பது வெளிப்படையாக இருந்தமையால் புரட்சிக் கட்சி எழுச்சி பற்றிய சிந்தனையிலிறங்காமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டதைப்பற்றி யல்ல.

தலைநகரத்திலுள்ள சோவியத்துக்களிலும், நாட்டுப் புறத்திலுள்ள சோவியத்துக்களிலும் (மாஸ்கோவில் 49 சத வீத வோட்டுகளுக்கு அதிகமாகவே) 1917 ஜூலைக்கு மிகவும் பின்னாலேதான் போல்ஷெவிக்குகள் பெரும்பான்மை வோட் டுகளைப் பெற்றனர் என்பதை ஒவ்வொருவரும் அறிந்துள் ளனர். ஆகவே ''பாடங்கள்'' எல்லா விதத்திலும் இனிய சுபாவம் படைத்த சீமாட்டி ''நோவயா ஷிஸ்ன்'' விரும்பு வதற்கு மிகமிக மாறுபட்டவையாகவே இருக்கின்றன என் பது இதிலிருந்து தெரியக் கிடக்கின்றது.

வேண்டாம், வேண்டாம், ''நோவயா ஷிஸ்ன்'' கன வான்களே! நீங்கள் அரசியல் விஷயங்களில் தலையிடாமல் இருப்பதே நல்லது!

புரட்சிகரமான வர்க்கங்களின் முன்னணிப் படைகளி லும், நாட்டிலும் புரட்சிக் கட்சிக்குப் பெரும்பான்மையோ ரின் ஆதரவு இல்லையென்றால் எழுச்சியைப் பற்றிய பேச்சுக் கிடமில்லை. தவிரவும் எழுச்சிக்குத் தேவையாயிருப்பன: 1) நாடெங்கும் பரவிய அளவில் புரட்சியின் வளர்ச்சி; 2) நீதி நெறி, அரசியல் ஆகியவற்றில் பழைய அரசாங்கத்தின், உதாரணமாக ''கூட்டணி'' அரசாங்கத்தின், பூர்ணமான சீரழிவு; 3) நடுவாந்தரப் பகுதியினரின்—அதாவது நேற் றைய தினம் அரசாங்கத்தைப் பூர்ணமாக ஆதரித்து வந்து இன்று முழு ஆதரவு காட்டாமல் இருப்பவர்களின்—முகாமிலே கடுமையான ஊசலாட்டம்.

ஜூலை 3-5 தேதிய நிகழ்ச்சிகளின் ''பாடங்கள்'' பற்றிப் பேசுகையில் ''நோவயா ஷிஸ்ன்'' இந்த மிக முக்கியமான பாடத்தைக் கவனிக்கக்கூடத் தவறிவிட்டது ஏன்? ஏனெனில்

ஓர் அரசியல் பிரச்சினையை, அரசியல்வாதிகள் அல்ல, பூர்ஷ்வா வர்க்கத்தைக் கண்டு பீதியடைந்து நிற்கும் அறிவு ஜீவிகளின் குழு எடுத்துக் கொண்டது.

மேலே செல்வோம். மூன்றுவதாக, த்ஸெரெத்தேலி போன்ற கனவான்கள் தங்களுடைய ஜூலைக் கொள்கையின் மூலமாகத் தங்களை அம்பலப்படுத்திக் கொண்ட காரணத்தால்தான், போல்ஷெவிக்குகளே தங்களுடைய சொந்த முன்னணி வீரர்கள் என்றும், ''சோஷல்-பிளாக்கிஸ்டுகள்'' துரோகிகள் என்றும் மக்கள்திரள் கண்டறிந்ததின் காரணத்தால்தான், ஜூலை 3-4 தேதிக்குப் பிறகே சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் சீர்குலைவு தொடங்கியது என்று உண்மை விபரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே கர்னீலோவ் கலகத்திற்கு முன்பே ஆகஸ்டு 20ல் நடந்த பெத்ரோகிராத் தேர்தலில் இச்சீர்குலைவு பூர்ணமாக மெய்ப்பிக்கப்பட்டது. அதில் போல்ஷெவிக்குகள் வெற்றி கொண்டனர், ''சோஷல்-பிளாக்கிஸ்டுகள்'' தோற்றனர் (அண்மையில் ''தேலோ நரோதா'' எல்லாக் கட்சிகளுக்கும் கிடைத்த வோட்டு விவரங்களை மறைத்துவிட்டு இதனை மறுக்க முயன்றது. ஆனல் இது தன்னையே ஏமாற்றிக்கொள்வதும், தன்னுடைய வாசகர்களை ஏமாற்றுவதுமாகும்; ஆகஸ்டு 24 தேதியிட்ட ''டேன்''[35] என்னும் பத்திரிகையில் கண்ட கணக்கு விவரப்படி நகரில் மட்டும் போட்ட மொத்த வோட்டுகளில் காடெட்டுகளுக்குக் கிடைத்த பங்கு 22 சத விகிதம் இருந்தது—23 சத வீதமாக உயர்ந்தது; ஆனல் அவர்களுக்குக் கிடைத்த மொத்த வோட்டுகளின் எண்ணிக்கை 40 சத வீதம் குறைந்துவிட்டது. மொத்த வோட்டுகளில் போல்ஷெவிக்குகளுக்குக் கிடைத்த பங்கு 20 சத விகிதமாயிருந்தது—33 சத வீதமாக உயர்ந்தது. ஆனல் அவர்களுக்குக் கிடைத்த மொத்த வோட்டுகளின் எண்ணிக்கையில் குறைவு 10 சத வீதமே. எல்லா ''நடுவாந்தரக்காரர்களுக்கும்'' கிடைத்த பங்கு 58 சத வீதமாயிருந்தது—44 சத வீதமாகக் குறைந்துவிட்டது. ஆனல் அவர்களுக்குக் கிடைத்த மொத்த வோட்டுகளின் எண்ணிக்கை 60 சத வீதம் குறைந்தது!!).

ஜூலை நாட்களுக்குப் பிறகும், கர்னீலோவ் கலகத்துக்கு முன்பும் ஏற்பட்ட சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெ

விக்குகள் ஆகியோரின் சீர்குலைவு, அவ்விரு கட்சிகளிலும் ''இடது சாரிப்'' பிரிவின் வளர்ச்சியினாலும் மெய்ப்பிக்கப்படு கிறது. இந்தப் பிரிவு கிட்டத்தட்ட 40 சத வீதத்தை எட்டி யிருக்கிறது. கெரேன்ஸ்கிய் போன்ற கனவான்கள் போல் ஷெவிக்குகளை அடக்குமுறை வேட்டையாடியதற்கு இது ''பழிக்குப் பழி''யாகும்.

ஒரு சில நூறு உறுப்பினர்களை ''இழந்துவிட்ட'' போதிலும், ஜூலை 3-4 தேதிய நிகழ்ச்சிகளிலிருந்து பாட்டாளி வர்க்கக் கட்சி பிரம்மாண்டமான அளவுக்கு லாபமடைந்தது. ஏனெனில் இந்தக் கடுமையான நாட்களில்தான் இக்கட்சியின் விசுவாசத்தையும், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், மென் ஷெவிக்குகள் ஆகியோரின் துரோகத்தையும் மக்கள்திரள் பார்த்தறிந்துகொண்டது. ஆகவே, ''பாடம்'' ஒரு சிறிது கூட ''நோவயா ஷிஸ்ன்'' கூறுகிற ''பாடம்'' அல்ல, அடியோடு மாறுபட்ட பாடம் அது. அதாவது: கொந்தளித்துக் கொண்டிருக்கும் மக்கள் திரளை ''ஜனநாயகத்தின் மொல்சாலின்களுக்காகக்'' கைவிட்டு விடாதீர்கள்; மேலும், எழுச்சியைத் தொடங்கிவிட்டால், எதிரிப் படைகள் சிதறிக் கிடக்கையில் ஏறித் தாக்குங்கள், எதிர்பாராதிருக்கையில் எதிரியைத் தாக்குங்கள், என்பதே.

''நாங்களும் மார்க்ஸீயவாதிகளே'' என்று சொல்லிக் கொள்ளும் ''நோவயா ஷிஸ்ன்'' கனவான்களே, விஷயம் அப்படித்தானே?

அல்லது, ''மார்க்ஸீயம்'' என்பதின் அர்த்தம், யதார்த்த நிலைமையைக் கணக்காகச் சீர்தூக்கியறிந்து அதன் அடிப்படையில் செயல்தந்திரங்களை வகுப்பது அன்று, ஆனால் மதிகெட்ட ரீதியிலே, ஆய்ந்தோய்ந்து பாராமல், ''அரசியல் நிர்ணய சபையைக் கூட்டும் அதே காலத்தில் சோவியத்துக்களின் மகாநாடு'' என்பதனோடு ''உள்நாட்டுப் போர்'' என்பதையும் போட்டுக் குழப்புவது தானா?

கனவான்களே! இது வெறும் கேலிக் கூத்தாகும். இது மார்க்ஸீயத்தையும், பொதுவாகத் தர்க்கவியலையும் நையாண்டி செய்வதாக இருக்கின்றது!

''உள்நாட்டுப் போர்'' என்ற அளவிற்கு வர்க்கப் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதற்கு யதார்த்த நிலைமையிலே

காரணம் எதுவும் கிடையாது என்ருல், ''சோவியத்துக்களின் மகாநாடு, அரசியல் நிர்ணய சபை ஆகியவற்றின்'' சம்பந்தமாக நீங்கள் ஏன் ''உள்நாட்டுப் போரைப்'' பற்றிப் பேச வேண்டும்? (நாம் இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கும் ''நோவயா ஷிஸ்ன்'' தலையங்கக் கட்டுரையின் தலைப்பு இதுதான்). அப்படிப் பேசுவதானுல், யதார்த்த நிலைமையிலே உள் நாட்டுப் போருக்குரிய அடிப்படை ஒன்றும் இல்லை, ஆகவே சோவியத்துக்களின் மகாநாடு, அரசியல் நிர்ணய சபை போன்ற சாத்வீகமான, அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட, சட்டம், பார்லிமென்ட் நடவடிக்கை ஆகியவற்றின் நோக்குநிலையிலிருந்து பார்க்கும்போது ''சாதாரணமானவையாகத்'' தோன்றுகிற விஷயங்களையே செயல்தந்திரங்களுக்கு அச்சாணியாக வைத்துக்கொள்ள முடியும், வைத்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் தெளிவாக வாசகருக்குத் தெரிவித்து அதை நிரூபித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அப்படிப்பட்ட மகாநாடும், அப்படிப்பட்ட சபையும் உண்மையில் தீர்மானித்து முடிவு கட்டுவதற்குச் சக்தியுள்ளவைதான் என்று அபிப்பிராயம் கொள்வது சாத்தியமே.

ஆனுல், இப்பொழுதுள்ள யதார்த்த நிலைமையில் உள் நாட்டுப் போர் தவிர்க்க முடியாதது, அல்லது அநேகமாய் ஏற்படலாம் என்றிருக்குமாயின், நீங்கள் அதைப்பற்றி ''வீணுய்ப்'' பேசவில்லையென்ருல், உள்நாட்டுப் போருக்கான ஒரு நிலைமை இருப்பதைத் தெளிவாகப் பார்த்து, உணர்ந்து, அறிந்துதான் பேசியிருக்கிறீர்கள் என்ருல், சோவியத்துக்களின் மகாநாட்டையோ அல்லது அரசியல் நிர்ணய சபையையோ எவ்வாறு நீங்கள் அச்சாணியாக வைத்துக்கொள்ள முடிந்தது?? பசியால் வாடிக் கொண்டிருக்கும், வதைபட்டுக் கொண்டிருக்கும் மக்கள்திரளை ஏளனம் செய்வதாகும் இது! இரண்டு மாத காலம் ''காத்திருக்கப்'' பட்டினியால் தவிக்கும் மக்கள் சம்மதிப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது எந்தப் பொருளாதாரச் சீரழிவு அதிகரித்து வருவதாக நீங்களே நாள் தவருமல் எழுதியவாறிருக்கிறீர்களோ, அந்தப் பொருளாதாரச் சீரழிவு சோவியத்துக்களின் மகாநாட்டுக்காக அல்லது அரசியல் நிர்ணய சபைக்காகக்

''காத்திருக்கச்'' சம்மதிக்குமோ? அல்லது சமாதானத்துக் காகக் காரியப்பற்றுள்ள நடவடிக்கைகளை நாம் எடுக்காமல் விட்ட நிலையிலே (போரில் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளுக் கும் நியாயமான சமாதானம் பற்றிய அதிகாரபூர்வமான பிரேரணை வழங்காத நிலையிலே) ஜெர்மானியத் தாக்குதல் சோவியத்துக்களின் மகாநாட்டுக்கும் அரசியல் நிர்ணய சபைக்கும் ''காத்திருக்கச்'' சம்மதிக்குமா? அல்லது, பிப்ரவரி 28லிருந்து செப்டம்பர் 30 வரை மிகுந்த கொந்தளிப் போடும் என்றும் காணாத வேகத்தோடும் நடந்து முன்னே றிய ருஷ்யப் புரட்சியின் வரலாறு அக்டோபர் முதல் தேதி யிலிருந்து நவம்பர் 29 வரை[36] அதி நிம்மதியான, அமை தியான, சட்டபூர்வமான நடை போட்டுச் செல்லும் என் றும், வெடிப்புகள், திடீர்ப் பாய்ச்சல்கள், ராணுவத் தோல் விகள், பொருளாதார நெருக்கடிகள் அனைத்தையும் அது தவிர்க்கும் என்றும் நீங்கள் முடிவு கட்டுவதற்கு இடந்தரக் கூடிய உண்மை விபரங்கள் உங்களிடம் இருக்கின்றனவா? அல்லது, போல்ஷெவிக் கட்சியைச் சேராத துபாஸவ் என்ற ஆபீஸர் போர்முனையிலுள்ள ராணுவத்தின் சார்பாக அது ''சண்டை செய்யாது''[37] என்று அதிகார பூர்வமாக தெரி வித்திருக்கிற போர்முனையிலுள்ள அந்தச் சேனை, ''குறித்த'' நாள் வரை, பட்டினியாக, குளிரில் உறைந்தபடி பொறுமை யுடன் கிடக்குமா? அல்லது, நீங்கள் விவசாயிகளின் எழுச்சி யை ''அராஜகம்'' என்றும், ''இனக்கொலை'' என்றும் சொல்லி விட்டபடியாலோ, விவசாயிகளுக்கு எதிராக கெரேன்ஸ்கிய் ''ராணுவப்'' படைகளை அனுப்பி வைப்பார் என்பதனாலோ, அது உள்நாட்டுப் போரின் ஓர் அம்சமாக இருந்து வருவது நிற்குமா? அல்லது, விவசாயிகள் மிகுந்துள்ள ஒரு நாட்டில் விவசாயிகளின் எழுச்சியை நசுக்கி வரும் அதே அரசாங்கம் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதற்கு அமைதியாக, நேர்மையாக, பாசாங்கு இல்லாமல் வேலை செய்ய முடியும் என்பது சாத்தியமா, நினைக்கத்தான் முடியுமா?

கனவான்களே, ''ஸ்மோல்னிய் கல்விக் கழகத்தில்[38] நேர்ந்த குழப்பத்தைக்'' கண்டு சிரிக்க வேண்டாம்! உங்கள் அணிகளிலும் குழப்பத்திற்குக் குறைவில்லை. உள்நாட்டுப் போர் கிளத்துகிற பயமுறுத்தும் கேள்விகளுக்கு நீங்கள்

குழப்பமிகுந்த சொற்களைக் கொண்டும், இரங்கத்தக்க அரசியல் சட்டப் பிரமைகளைக் கொண்டும் விடையளிக்கிறீர்கள். அதனால்தான், போல்ஷெவிக்குகள் இவ்விதமான மனோநிலைகளுக்கு இடங்கொடுப்பார்களானால், அவர்கள் தங்கள் கட்சியையும் தங்கள் புரட்சியையும் அழிப்பார்கள் என்று சொல்கிறேன்.

அக்டோபர் 1, 1917

நி. லெனின்

1917ல், செப்டம்பர் முடிவு—
அக்டோபர் 1 (14)ல்
எழுதப்பட்டது.
1917, அக்டோபரில்
''புரோஸ்வெஷேனியே'' சஞ்சிகையில்,
எண் 1-2ல் வெளியிடப்பட்டது

குறிப்புகள்

1 **''போல்ஷெவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா?''** *என்னும் கட்டுரை 1917 அக்டோபரில், ''புரோஸ்வெஷேனியே'' என்ற சஞ்சிகையின் எண்கள் 1—2ல் முதலாவதாக வெளியாயிற்று.*

''புரோஸ்வெஷேனியே'' (அறிவொளி) என்பது தத்துவரீதியான போல்ஷெவிக் சஞ்சிகையாகும். அது 1911 டிசம்பரிலிருந்து 1914 ஜூன் வரை செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் சட்டபூர்வமாய் வெளியாகி வந்தது. முதல் உலக யுத்தம் தொடங்கு முன்னே அரசாங்கம் இதனைத் தடை செய்தது. 1917 இலையுதிர் காலத்தில் இது மீண்டும் துவக்கப்பட்டு ஒரே (இரட்டை) இதழ் தான் வெளி வந்தது. அத்துடன் அதன் பிரசுரம் நின்று விட்டது.

தலைப்புப் பக்கம்

2 **''ரேச்''** *(பேச்சு)—காடெட்டுக் கட்சியின் பிரதான தினசரிச் செய்தித்தாள். 1906ம் ஆண்டு பிப்ரவரி 23 (மார்ச் 8) முதல் பீட்டர்ஸ்பர்க் நகரில் பிரசுரிக்கப்பட்டது. 1917, பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தாற்காலிக அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளைத் தீவிரமாக ஆதரித்தது. வி.இ. லெனினுக்கும் போல்ஷெவிக்குகளுச்கும் எதிராகப் பலாத்கார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களைத் தூண்டிவந்தது. பெத்ரோகிராத் நகர சோவியத்துக்கு உட்பட்ட இராணுவ-புரட்சிக் கமிட்டியால் இந்தச் செய்தித்தாள் 1917, அக்டோபர் 26 (நவம்பர் 8)ந் தேதி நிறுத்தப்பட்டது. பிற்பாடு (1918, ஆகஸ்டுவரை) ''நாஷா ரேச்'' (நமது பேச்சு) ''ஸ்வபோத்னயா ரேச்'' (சுதந்திரப் பேச்சு), ''வேக்'' (நூற்றுண்டு), ''நோவயா ரேச்'' (புதிய பேச்சு), ''நாஷ் வேக்'' (நமது நூற்றுண்டு) என்ற பெயர்களில் தொடர்ந்து நடந்துவந்தது.*

பக்கம் 7

3 ''நோவயா ஷிஸ்ன்'' (புது வாழ்வு) — மென்ஷெவிக் போக்குள்ள தினசரிச் செய்தித்தாள். ''சர்வதேசீயவாதிகள்'' எனப்பட்ட சோஷல்-டெமாக்ராட்டுகள் குழுவின் பிரதானப் பத்திரிகை. மென்ஷெவிக்குகளும் மார்த்தவ் ஆதரவாளர்களும் அரை மென்ஷெவிக் போக்குள்ள தனிப்பட்ட அறிவுஜீவிகளும் இந்தக் குழுவில் ஒன்றிணைந்திருந்தார்கள். ''நோவயா ஷிஸ்ன்'' செய்தித்தாள் பெத்ரோகிராதில் 1917, ஏப்ரல் முதல் வெளிவரத் தொடங்கியது. அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சிக்கு எதிரான நிலையை மேற்கொண்டது. 1918, ஜூலையில் நிறுத்தப்பட்டது.

மென்ஷெவிக்குகள் — ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் இயக்கத்தில் இருந்த குட்டி பூர்ஷ்வா, சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள், தொழிலாளி வர்க்கத்திடையே பூர்ஷ்வா வர்க்கத்தின் செல்வாக்கைப் புகுத்தியவர்கள். இப்பெயர் 1903 ஆகஸ்டில் நடந்த ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் முதன் முதலாக உண்டாயிற்று. அதன் முடிவில், கட்சியின் மத்திய ஸ்தாபனங்களுக்குரிய தேர்தல்களில் அவர்களுக்குச் சிறுபான்மை வோட்டுகளே **(மென்ஷின்ஸ்த்வோ)** கிடைத்தன. அதே சமயத்தில் லெனின் தலைமையிலுள்ள புரட்சிகரமான சோஷல்-டெமாக்ராட்டுகள் பெரும்பான்மை **(போல்ஷின்ஸ்த்வோ)** வோட்டுகளைப் பெற்றனர். இதனுல் தோன்றியவைதான் போல்ஷெவிக்குகள், மென்ஷெவிக்குகள் என்ற இரண்டு பெயர்கள். பாட்டாளி வர்க்கத்துக்கும் பூர்ஷ்வா வர்க்கத்துக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்த முயன்று வந்தார்கள் மென்ஷெவிக்குகள். தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் சந்தர்ப்பவாதக் கொள்கையை அனுசரித்து வந்தனர். 1917, பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி, பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கம் ஒரு புறமும் சோவியத்துக்களின் வடிவில் பாட்டாளிகள், விவசாயிகளின் சர்வாதிகாரம் மறுபுறமும் நிலவிய இரட்டையாட்சிக் காலகட்டத்தைத் தோற்றுவித்தது. இந்தப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்ட்-புரட்சி வாதிகளுடன் மென்ஷெவிக்குகளும் பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்தில் பதவியேற்று அதன் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு ஆதரவளித்து, எழுச்சியுற்று வரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியை எதிர்த்துப் போராடினர். சோவியத்துக்களில் மென்ஷெவிக்குகள் அதே கொள்கையைத்தான் கடைப்பிடித்தனர் — தாற்காலிக அரசாங்கத்திற்கு ஆதர

வளிப்பது, மக்கள்திரளைப் புரட்சி இயக்கத்தினின்று விலக்கி நிறுத்துவது.

அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு மென்ஷெவிக்குகள் வெளிப்படையான எதிர்ப்புரட்சிக் கட்சியாய் விட்டனர். சோவியத் ஆட்சிக்கு எதிரான பல சதிகளையும் கலகங்களையும் தூண்டி, அவற்றில் பங்கு கொண்டனர்.
பக்கம் 7

4 **காடெட்டுக் கட்சி** *(கான்ஸ்டிட்யூஷனல்-டெமாக்ரடிக் கட்சி)* — ருஷ்யாவில் மிதவாத-முடியாட்சி வாதிகளான பூர்ஷ்வாக்களின் தலைமைக் கட்சி. இது *1905*, அக்டோபரில் நிறுவப்பட்டது. பூர்ஷ்வாக்கள், நிலப்பிரபுக்கள், பூர்ஷ்வா அறிவுஜீவிகள் ஆகியோரின் பிரதிநிதிகள் அதன் உறுப்பினர்கள் ஆனார்கள். பிற்பாடு காடெட்டுகள் ஏகாதிபத்தியவாதி பூர்ஷ்வாக்களின் கட்சியாக மாறிவிட்டனர். முதலாவது உலக யுத்தக் காலத்தில் ஜார் அரசாங்கத்தின் நாடு பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கையைக் காடெட்டுகள் தீவிரமாக ஆதரித்தார்கள். பிப்ரவரி மாத பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக் காலத்தில் அவர்கள் முடியாட்சியைக் காப்பாற்ற முயன்றார்கள். பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்தில் தலைமை இடத்தை ஏற்று, காடெட்டுகள் மக்களுக்கு எதிரான, புரட்சி எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார்கள்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு காடெட்டுகள் சோவியத் ஆட்சியின் தீவிரப் பகைவர்களாகச் செயல் புரிந்தார்கள். எல்லாப் புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் தலையீட்டாளர்களின் போர்களிலும் அவர்கள் பங்கு கொண்டார்கள். தலையீட்டாளர்களும் வெண்படையினரும் முறியடிக்கப்பட்ட பின்னர் அயல் நாடுகளில் குடியேறிய பிறகும் காடெட்டுகள் சோவியத் விரோத, புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்தவில்லை.

கர்னீலோவ் குழுவினர் — *1917*, ஆகஸ்டில் (செப்டம்பரில்) புரட்சி எதிர்ப்புச் சதிநடவடிக்கையை (குறிப்பு *30*ஐப் பார்க்க) ஒழுங்கமைத்த ஜெனரல் கர்னீலோவின் ஆதரவாளர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டார்கள்.
பக்கம் 7

5 தொழிலாளிகள், போர்வீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் முதல் அகில ருஷ்ய மகாநாட்டுக் கூட்டத்தை இது குறிக்கிறது. அது *1917* ஜூன் *3*லிருந்து *24* தேதிவரை (ஜூன் *16*லிருந்து ஜூலை *7* வரை) பெத்

ரோகிராத் நகரில் நடந்தது. ஆயிரம் பிரதிநிதிகளுக்கு மேல் வந்திருந்தனர். போல்ஷெவிக்குகளுக்கு 105 பிரதி நிதிகள் இருந்தனர். பெரும்பான்மையோர் சோஷ லிஸ்ட்-புரட்சிவாதிகளும் மென்ஷெவிக்குகளும் ஆவர். கீழ்க்கண்ட பிரச்சினைகள் நிகழ்ச்சி நிரலில் இருந்தன: தாற்காலிக அரசாங்கத்தின்பால் கொள்ள வேண்டிய கண் ணோட்டம், யுத்தம், முதலியன. வி.இ. லெனின் பேசிய பேச்சுக்களில் யுத்தத்தின் ஏகாதிபத்தியத் தன்மையினையும், பூர்ஷ்வாக்களுடன் சமரசம் பேசிக்கொண்டு போவதின் அழிவுக்கேடான விளைவுகளையும் அம்பலப்படுத்தி, அதிகார மனைத்தும் சோவியத்துக்களுக்கு அளிக்கப்பட வேண்டு மென்று கோரினார். அந்த மகாநாட்டுக் கூட்டம் பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்திற்கு ஆதரவு, சோவியத்துக் களுக்கு அதிகார மாற்றத்திற்கு எதிர்ப்பு என்ற சோஷ லிஸ்ட்-புரட்சிவாதிகள், மென்ஷெவிக்குகள் ஆகியோரின் போக்கிற்கிணங்க முடிவுகள் எடுத்தது. பக்கம் 7

6 லெனின் குறிப்பிடும் நிகழ்ச்சி, தொழிலாளிகள், போர் வீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துக்களின் முதலாவது அகில ருஷ்ய மகாநாட்டின் கூட்டத்தில், 1917, ஜுன் மாதம், 4 (17)ந் தேதியன்று நடந்தது. தாற்காலிக அரசாங்க மந்திரி, மென்ஷெவிக் த்ஸெரெத்தேலி நாட் டின் ஆட்சி அதிகாரம் அனைத்தையும் தன் கைகளில் எடுத்துக்கொள்ள இணங்கக் கூடிய அரசியல் கட்சி எதுவும் ருஷ்யாவில் இல்லை என்று வலிந்துரைத்துப் பேசிய போது, வி. இ. லெனின் தமது இடத்தில் இருந்தபடியே ''இருக்கிறது!'' என்று போல்ஷெவிக் கட்சியின் சார்பில் பதில் விடுத்தார். பின்பு மகாநாட்டு மேடையிலிருந்து பேசுகையில் போல்ஷெவிக் கட்சி ஒவ்வொரு நிமிடமும் ''ஆட்சி அதிகாரத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறது'' என்று பிரகடனம் செய்தார்.

பக்கம் 8

7 **சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள்** — ருஷ்யாவில் இருந்த குட்டி பூர்ஷ்வாக் கட்சி. பல்வகை நரோத்னிக் குழுக் கள் ஒன்றிணைந்ததன் விளைவாக 1901ன் முடிவிலும் 1902ன் தொடக்கத்திலும் உருவாகியது. முதலாவது உலக யுத்தக் காலத்தில் பெரும்பாலான சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் சோஷலிஸ்ட்-நாட்டு வெறிப் போக்கை மேற்கொண்டனர்.

1917ல் நடந்த பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் மென்ஷெவிக்கு

களுடன் சேர்ந்து புரட்சி எதிர்ப்பு பூர்ஷ்வாக்கள், நிலப் பிரபுக்களது தாற்காலிக அரசாங்கத்தின் பிரதான ஆதாரமாக விளங்கிஞர்கள். கட்சித் தலைவர்களோ (அவ்க்ஸேன்தியேவ், கெரேன்ஸ்கிய், செர்ஞேவ்) அதில் பதவி ஏற்ருர்கள். சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சி நிலப்பிரபுக்களின் நிலச் சொத்துரிமையை ஒழிக்க வேண்டும் என்ற குடியானவர்களின் கோரிக்கையை ஆதரிக்க மறுத்துவிட்டது, நிலத்தின்மீது நிலப்பிரபுக்களின் சொத்துரிமையைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது. நிலப்பிரபுக்களின் நிலங்களைக் கைப்பற்றிக் கொண்ட குடியானவர்களுக்கு எதிராகத் தாற்காலிக அரசாங்கத்தின் சோஷலிஸ்ட்-புரட்சிவாதி அமைச்சர்கள் தண்டனைப் படைப் பிரிவுகளை அனுப்பிஞர்கள்.

1917, நவம்பர் முடிவில் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கட்சியின் இடதுசாரியினர் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் பிரத்தியேகக் கட்சியை நிறுவினர். குடியானவர்கள் திரள்மீது தங்கள் செல்வாக்கைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் சோவியத் ஆட்சியைப் பெயரளவில் ஒப்புக்கொண்டனர், போல்ஷெவிக்குகளுடன் இணங்கிச் செயலாற்றினர். ஆஞல் விரைவிலேயே சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராட்டப் பாதையை மேற்கொண்டுவிட்டனர்.

வெளிநாட்டு இராணுவத் தலையீடும் உள்நாட்டுப் போரும் நிகழ்ந்த ஆண்டுகளில் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் புரட்சிக்கு எதிரான அழிவு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள், தலையீட்டாளர்களையும் வெண்படையினரையும் தீவிரமாக ஆதரித்தார்கள், புரட்சி எதிர்ப்புச் சதிகளில் பங்கெடுத்துக் கொண்டார்கள், சோவியத் அரசு, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்கு எதிராகப் பயங்கரச் செயல்களை நடத்துவித்தார்கள். உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் நாட்டுக்கு உள்ளேயும் வெளிநாடுகளில் இருந்த வெண்படை முகாமிலும் பகை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்திவந்தார்கள்.

பக்கம் 8

[8] **அலெக்ஸந்த்ரீன்ஸ்கிய் தியேட்டர்** பெத்ரோகிராதில் உள்ளது—அகில ருஷ்ய ஜனநாயக மகாநாடு அங்கு நடந்தது.

பக்கம் 8

9 அகில ருஷ்ய ஜனநாயக மகாநாடு இங்கே குறிக்கப்படு கிறது. சோவியத்துக்களின் மென்ஷெவிக்குகள், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் மத்திய நிர்வாகக் கமிட்டியால் இது கூட்டப்பட்டது. ஆட்சி அதிகாரம் பற்றிய பிரச்சினையைத் தீர்மானிப்பது குறித்து ஆலோசனைகள் நடத்தப்பட்டன. ஆனால் மகாநாட்டைக் கூட்டியவர்களின் திட்டப்படி அதன் உண்மையான நோக்கம் எழுச்சியுற்றுவரும் புரட்சியிலிருந்து மக்கள் திரளின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதே ஆகும். மகாநாடு செப்டம்பர் 12 (25)ந் தேதி தொடங்குவதாக இருந்தது. பிறகு ஒத்திப் போடப்பட்டு 1917, செப்டம்பர் 14 முதல் 22 வரை (செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 5 வரை) பெத்ரோகிராதில் நடைபெற்றது. 1,500க்கு மேற்பட்டவர்கள் அதில் கலந்துகொண்டார்கள். தொழிலாளர்கள், குடியானவர்கள் திரளின் பிரதிநிதித்துவத்தைப் பலவீனப்படுத்தவும், பல்வேறு குட்டி பூர்ஷ்வா, பூர்ஷ்வா ஸ்தாபனங்களிலிருந்து பிரதிநிதிகளின் தொகையை விஸ்தரிக்கவும், இவ்வாறு மகாநாட்டில் தங்கள் பெரும்பான்மைக்கு வகை செய்து கொள்ளவும் மென்ஷெவிக், சோஷலிஸ்ட்-புரட்சிவாதித் தலைவர்கள் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். மென்ஷெவிக்குகளையும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளையும் அம்பலப்படுத்துவதற்கான பிரசார மேடையாக இந்த மகாநாட்டைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் போல்ஷெவிக்குகள் இதில் கலந்துகொண்டார்கள்.

பூர்வாங்கப் பார்லிமென்டை (குடியரசின் தாற்காலிக ஆலோசனை சபையை) ஏற்படுத்துவதுபற்றிய தீர்மானத்தை ஜனநாயக மகாநாடு அங்கீகரித்தது. ருஷ்யாவில் பார்லிமென்ட் அமைப்பு நடப்புக்கு வந்துவிட்டது என்ற கண்மயக்கை ஏற்படுத்தும் பொருட்டுச் செய்யப்பட்ட முயற்சி இது. உண்மையிலோ, தாற்காலிக அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட்ட விதியின்படி பூர்வாங்கப் பார்லிமென்டு அரசாங்கத்திற்குக் கீழ்ப்பட்ட ஆலோசனை மன்றமாக மட்டுமே விளங்க வேண்டியிருந்தது.

''பித்தலாட்ட வீரர்கள் பற்றியும் போல்ஷெவிக்குகளின் தவறுகள் பற்றியும்'', ''கட்டுரையாளனின் நாட்குறிப்பிலிருந்து. நமது கட்சியின் தவறுகள்'', ''நெருக்கடி முற்றிவிட்டது'' என்னும் கட்டுரைகளில் லெனின் ஜனநாயக மகாநாட்டின்பால் கடைப்பிடிக்கப்பட்ட போக்கில் போல்ஷெவிக்குகளின் செயல்தந்திரத்தில் நிகழ்ந்த தவறுகளை விமர்சித்தார். பூர்வாங்கப் பார்லி

மென்டிலிருந்து போல்ஷெவிக்குகள் வெளியேறிவிட வேண்டும் என்று அவர் அழுத்தந் திருத்தமாகக் கோரினார். எழுச்சிக்கு ஆயத்தங்கள் செய்வதில் எல்லாச் சக்திகளையும் ஒருமுகமாக ஈடுபடுத்துவதன் இன்றியமையாமையை அவர் வலியுறுத்தினார். கட்சியின் மத்தியக் கமிட்டி லெனினது யோசனைபற்றி விவாதித்தது. காமினெவும் ரீக்கவும் பிற சரணாகதிவாதிகளும் பூர்வாங்கப் பார்லிமென்டில் பங்கெடுத்துக் கொள்வதை வற்புறுத்தி ஆதரித்தார்கள். மத்தியக் கமிட்டி அவர்களுடைய எதிர்ப்பைச் சமாளித்து, பூர்வாங்கப் பார்லிமென்டிலிருந்து போல்ஷெவிக்குகள் வெளியேறுவது பற்றிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. அக்டோபர் 7 (20)ந் தேதி, பூர்வாங்கப் பார்லிமென்டு தொடங்கிய முதல் நாளே, போல்ஷெவிக்குகள் தங்கள் பிரகடனத்தை முழங்கிவிட்டு அதிலிருந்து வெளியேறிவிட்டனர். பக்கம் 8

10 ''தேலோ நரோதா'' (மக்களின் இலட்சியம்)—தினசரி செய்தித்தாள். சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சியின் பிரதான வெளியீடு. பெத்ரோகிராதில் 1917 மார்ச்சிலிருந்து 1918 ஜூலைவரை பல மாற்றுப் பெயர்களுடன் வெளிவந்தது. இந்தச் செய்தித்தாள் தற்காப்புப் போக்கையும் சமரசவாதப் போக்கையும் மேற்கொண்டது, பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கத்தை ஆதரித்தது. 1918, அக்டோபரில் சமாராவிலும் (நான்கு இதழ்கள் வெளிவந்தன) 1919, மார்ச்சில் மாஸ்கோவிலும் (பத்து இதழ்கள் வெளிவந்தன) செய்தித்தாள் மீண்டும் பிரசுரமாயிற்று. எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளுக்காக இது மூடப்பட்டது. பக்கம் 9

11 பிப்ரவரி பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பின்பு, மக்கள் திரளின் நெருக்குதலின் காரணமாக, தாற்காலிக அரசாங்கம் **அரசியல் நிர்ணய** சபை கூட்டுவது பற்றிய அறிக்கை ஒன்றை மார்ச் 2ல் வெளியிட்டது. 1917, செப்டம்பர் 17ம் தேதி தேர்தலுக்காகக் குறிக்கப்பட்டிருந்தது. அதிகாரத்தைத் தன்னிடம் வைத்துக்கொள்ளும் பொருட்டும், புரட்சி வளர்வதைத் தடுத்து நிறுத்துவதன் பொருட்டும் முயற்சித்து வந்த தாற்காலிக அரசாங்கம், அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதில் மிகவும் தாமதமாகப் போய்க் கொண்டிருந்தது. அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகுதான் அது கூட்டப்பட்டது.

அக்டோபர் புரட்சிக்கு முன்னமே அரசியல் நிர்ணய சபைக்குரிய தேர்தல் பெரும் பகுதி நடநதுவிட்டதால், மென்ஷெவிக்குகள் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள், காடெட்டு கள் ஆகியோரின் பிரதிநிதிகள், நாட்டின் அதிகார பீடத் திலிருந்து வந்த ஒரு வரலாற்றுக் கட்டத்தையே சபையின் பெரும்பாலான உறுப்பினர் பிரதிபலித்தனர். உழைப்பாளி மக்களின் உண்மை நலன்களின்பால் விரோதம் காட்டிவந்த அரசியல் நிர்ணய சபை 1918 ஜனவரி 7ம் தேதியன்று கலைக்கப்பட்டது. பக்கம் 9

12 ''ரபோச்சிய் பூத்'' (தொழிலாளர் வழி) — ''பிராவ்தா வின்'' பெயர்களில் ஒன்று.

''பிராவ்தா'' (உண்மை): செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் வெளியாகிய, போல்ஷெவிக்குகளின் சட்டபூர்வமான தினசரிப் பத்திரிகை. செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தொழி லாளர்களின் முன்முயற்சியால் 1912 ஏப்ரலில் அது ஆரம்பமாயிற்று.

''பிராவ்தாவின்'' சித்தாந்தத் தலைமையை லெனின் ஏற்று நடத்தி வந்தார். அனேகமாக நாள்தோறும் அதில் எழுதினார், அதன் ஆசிரியர் குழுவுக்கு யோசனைகள் கூறினார். செய்தித்தாள் போராட்ட, புரட்சி உணர்ச்சி பொங்க நடத்தப்படுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

''பிராவ்தா'' இடைவிடாமல் போலீஸ் அடக்கு முறைக்கு உள்ளாகிவந்தது. 1914, ஜூலை 8 (21)ந் தேதி அது மூடப்பட்டது.

1917, பிப்ரவரி பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சிக்குப் பின்னர் ''பிராவ்தா'' மீண்டும் வெளிவரத் தொடங்கி யது. 1917, மார்ச் 5 (18) முதல் ''பிராவ்தா'' சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் மத்தியக் கமிட்டி, பீட்டர்ஸ்பர்க் கமிட்டி ஆகியவற்றின் பிரதானப் பத்திரிகை என்ற முறையில் வெளிவரலாயிற்று.

பெத்ரோகிராத் திரும்பியது முதலே லெனின் அதன் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தார். பூர்ஷ்வா-ஜன நாயகப் புரட்சியிலிருந்து சோஷலிஸப் புரட்சிக்கு மாறு வதுபற்றிய லெனினது திட்டத்தை ஆதரித்துப் ''பிராவ் தா'' விரிவான போராட்டம் தொடங்கியது.

1917, ஜூலை முதல் அக்டோபர்வரை புரட்சி எதிர்ப் புத் தாற்காலிக அரசாங்கத்தால் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்ட ''பிராவ்தா'' தனது பெயரைப் பல தட வைகள் மாற்றிக் கொண்டது. ''லிஸ்தோக் 'பிராவ்தி' ''

(உண்மை ஏடு), ''புரொலித்தாரிய்'' (பாட்டாளி), ''ரபோச்சிய்'' (தொழிலாளர்), ''ரபோச்சிய் பூத்'' (தொழிலாளர் வழி) என்ற பெயர்களில் அது வெளியாயிற்று. மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர், 1917, அக்டோபர் 27 (நவம்பர் 9) முதல் இந்தச் செய்தித்தாள் ''பிராவ்தா'' என்ற தனது முந்திய பெயரில் வெளிவரலாயிற்று.

பக்கம் 11

13 1917, ஜூலை 3 முதல் 5 வரை நடந்த நிகழ்ச்சிகள் நாட்டில் ஏற்பட்டிருந்த மிக ஆழ்ந்த அரசியல் நெருக்கடியின் வெளியீடாக விளங்கின. ஜூன் 18 (31)ந் தேதி கெரேன்ஸ்கியால் போர் முனையில் தொடங்கப்பட்ட ருஷ்யப் படைகளின் தாக்குதல் தோல்வியடைந்தது, ஏகாதிபத்திய வாதிகளின் திருப்திக்காகக் கொடுக்கப்பட்ட புதிய பலிகள், முதலாளிகளால் தொழில் நிலையங்கள் மூடப்பட்டதன் தொடர்பாக வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரிப்பு, விலைவாசிகளின் இடைவிடாத ஏற்றமும் உணவுப் பண்டங்களின் தீவிரப் பற்றுக்குறையும்—இவை எல்லாம் தாற்காலிக அரசாங்கத்தின் புரட்சி எதிர்ப்புக் கொள்கையின்பால் தொழிலாளர்கள், போர்வீரர்களின் விரிவான திரள்களிடையே ஆத்திரம் வெடித்தெழப் புரிந்தன. ஜூலை 3 (16)ந் தேதியன்று தாமாகவே ஆர்ப்பாட்டங்கள் கிளம்பின. தாற்காலிக அரசாங்கத்துக்கு எதிரான ஆயுத எழுச்சியாக இவை வளர்ந்துவிடும் அபாயம் ஏற்பட்டது.

போல்ஷெவிக் கட்சி அந்தச் சந்தர்ப்பத்தில் ஆயுத எழுச்சிக்கு எதிராயிருந்தது. ஏனெனில் புரட்சி நெருக்கடி இன்னும் முதிரவில்லை என்றும் இராணுவமும் மாநிலங்களும் தலைநகரில் ஏற்படும் எழுச்சிக்கு ஆதரவளிக்க ஆயத்தமாக இல்லை என்றும் அது கருதியது. ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் (போல்ஷெவிக்குகள்) கட்சியின் பெத்ரோகிராத் கமிட்டி, மத்தியக் கமிட்டிக்கு உட்பட்ட இராணுவ ஸ்தாபனம் ஆகியவற்றுடன் சேர்ந்து ஜூலை 3 (16)ந் தேதி நடந்த மத்தியக் கமிட்டிக் கூட்டம் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளிலிருந்து விலகியிருப்பது என முடிவு செய்தது. அதே சமயம் நடந்த போல்ஷெவிக்குகளின் இரண்டாவது அனைத்துப் பெத்ரோகிராத் நகர மகாநாடும் இதே தீர்மானத்தை மேற்கொண்டது. பொதுமக்கள் திரளை ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளிலிருந்து தடுத்து நிறுத்தும் பொருட்டு மகாநாட்டுப் பிரதிநிதிகள் வட்டாரங்களுக்குச் சென்றார்கள். எனினும்

ஆர்ப்பாட்டம் தொடங்கிவிட்டது, அதை நிறுத்துவது இயலாததாகப் பட்டது.

மக்கள் திரளின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, ஆர்ப்பாட்டத்துக்கு அமைதியும் ஒழுங்கும் கொண்ட தன்மையை அளிக்கும் நோக்கத்துடன் அதில் ஜூலை 4 (17)ந் தேதி கலந்துகொள்வது என மத்தியக் கமிட்டி, பெத்ரோகிராத் கமிட்டி, இராணுவ ஸ்தாபனம் ஆகியவற்றுடன் சேர்ந்து ஜூலை 3 (16)ந் தேதி இரவு தீர்மானித்தது. அந்தச் சமயத்தில் லெனின் பெத்ரோகிராதில் இல்லை. கடுமையான தளர்வு காரணமாக நோயுற்றிருந்தமையால் அவர் சில நாட்கள் நகருக்கு வெளியே ஓய்வு கொள்ளச் சென்றிருந்தார். நிகழ்ச்சிகள் பற்றித் தகவல் கிடைத்ததும் ஜூலை 4 (17)ந் தேதி காலை லெனின் பெத்ரோகிராதுக்கு வந்து, தொடங்கிவிட்ட நிகழ்ச்சிகளின் தலைமையைத் தாமே ஏற்றுக்கொண்டார்.

ஜூலை 4 (17)ந் தேதி ஆர்ப்பாட்டத்தில் ஐந்து லட்சம் பெயருக்கு மேல் பங்கு கொண்டார்கள். ''எல்லா அதிகாரமும் சோவியத்துக்களுக்கே!'' முதலிய போல்ஷெவிக் கோஷங்களுடன் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் 90 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்கள். அதிகாரம் அனைத்தும் சோவியத்துக்களின் கைகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை இந்தப் பிரதிநிதிகள் சோவியத்துக்களின் மத்திய நிர்வாகக் கமிட்டியிடம் சமர்ப்பித்தார்கள் ஆயினும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதி, மென்ஷெவிக் தலைவர்கள் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

மென்ஷெவிக், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கட்சிகளின் மத்திய நிர்வாகக் கமிட்டிகளுக்குத் தகவல் தெரிவித்து அவற்றின் சம்மதத்துடன் ஆர்ப்பாட்டத்தை ஆயுதபலத்தால் நசுக்குவது என்று தாற்காலிக அரசாங்கம் தீர்மானித்தது. தொழிலாளர்கள், போர்வீரர்களின் அமைதியான ஊர்வலத்துக்கு எதிராக இராணுவப் பயிற்சி மாணவர்களும் புரட்சி எதிர்ப்புக் கஸாக் படைத்தொகுதிகளும் ஏவப்பட்டனர். அவர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பிற்போக்குள்ள படைப்பிரிவுகள் போர்முனையிலிருந்து தருவிக்கப்பட்டன.

மத்தியக் கமிட்டி, பெத்ரோகிராத் கமிட்டி உறுப்பினர்களின் மகாநாடு வி. இ. லெனின் தலைமையில் ஜூலை 4 (17)ந் தேதி இரவு முதல் அடுத்த நாள் காலை வரை நடந்தது. ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கான முறையில் நிறுத்திவிடுவது என்று மகாநாடு தீர்மானித்தது.

கட்சி எடுத்துக்கொண்ட சரியான முடிவு ஆகும் இது. தக்க சமயத்தில் பின்வாங்கவும் பிரதானப் புரட்சிச் சக்திகளை முறியடிப்பிலிருந்து காக்கவும் இதனால் கட்சிக்கு இயன்றது.

ஆர்ப்பாட்டம் நசுக்கப்பட்ட பின்பு பூர்ஷ்வா தாற்காலிக அரசாங்கம் ஒடுக்குமுறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. போல்ஷெவிக் கட்சிமீது அது விசேஷ வெறுப்புடன் பாய்ந்தது. ''பிராவ்தா'', ''ஸல்தாத்ஸ்க்காயா பிராவ்தா'' (படைவீரனின் பிராவ்தா) ஆகியவையும் பிற போல்ஷெவிக் செய்தித்தாள்களும் மூடப்பட்டன. தொழிலாளர்களின் ஆயுதங்களைப் பறித்துக்கொள்வதும் கைது செய்தலும் சோதனையிடுதலும் படுகொலைகளும் தொடங்கின. பெத்ரோகிராதிலுள்ள புரட்சிகரப் பிரிவுகள், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவை, கலைக்கப்பட்டுப் போர்முனைக்கு அனுப்பப்பட்டன. மென்ஷெவிக்குகளும் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளும் உண்மையில் இந்தப் புரட்சி எதிர்ப்புக் கொலைபாதகத்தில் பங்கு கொள்பவர்களாகவும் துணையாட்களாகவும் விளங்கினர். *பக்கம் 12*

14 ருஷ்யக் கவி நி. அ. நெக்ராஸவ் என்பவரது ''மெல்லியல்பு வாய்ந்த கவிஞனே அருள் பெற்றவன்'' என்ற பாட்டிலிருந்து லெனின் மேற்கோள் காட்டுகிறார். *பக்கம் 16*

15 ருஷ்ய எழுத்தாளர் நி. வ. கோகல் என்பாரின் ''இறந்த ஆன்மாக்கள்'' என்னும் நாவலில் வரும் ஒரு பாத்திரம். *பக்கம் 18*

16 **புலீகின் டூமா**—*1905*ல் ஜார் அரசாங்கம் கூட்டுவதற்கிருந்த, பிரதிநிதித்துவமுள்ள ஓர் ஆலோசனை சபை. உள்நாட்டு மந்திரி புலீகின் என்பவர் தலைமையில் ஒரு குழு இந்த அரசாங்க டூமா ஏற்படுத்துவதற்குரிய சட்டத்தின் மசோதாவையும், அதற்குரிய தேர்தல் பற்றிய விதிகளையும் தயாரித்தது; அது ஜாரின் 1905 ஆகஸ்டு 6 தேதிய அறிக்கையுடன் சேர்த்து வெளியிடப்பட்டது. போல்ஷெவிக்குகள் புலீகின் டூமாவைச் செயல் பூர்வமாகப் பகிஷ்கரித்தனர். ''...புலீகின் டூமா கூட்டப்படவேயில்லை. கூடுவதற்குமுன்பே அதைப் புரட்சிப் புயல் அடித்துக் கொண்டுபோய்விட்டது.'' (வி. இ. லெனின்) *பக்கம் 19*

17 **குரியாக்கள்**—சொத்து, இனம், மற்றக் காரணங்கள், இவற்றின் அடிப்படையில் வாக்காளர்கள் தனித்தனித்

தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இந்தத் தொகுதிகள் குரியாக்கள் எனப்பட்டன. ருஷ்யாவில் அரசாங்க டூமாவுக்குத் தேர்தல்கள் நடக்கையில் குரியாக்கள் நிலவின.
பக்கம் 19

18 "ஸ்நாமியா த்ரூதா" (உழைப்பின் கொடி) — சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கட்சியின் பெத்ரோகிராத் கமிட்டியுடைய தினச் செய்தித்தாள். 1917, ஆகஸ்டு முதல் வெளிவரத் தொடங்கியது. 1917, நவம்பரில் 59வது இதழ் முதல் சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கட்சியின் பெத்ரோகிராத் கமிட்டி, சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்ய மகாநாட்டின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிப் பிரிவு ஆகியவற்றின் செய்தித்தாளாக வெளிவரலாயிற்று. 1917 டிசம்பரில், 105வது இதழ் முதல் இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிக் கட்சியின் பிரதானப் பத்திரிகை ஆயிற்று. 1918, ஜூலையில், இடதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கலகக் கிளர்ச்சியின்போது மூடப்பட்டது.
பக்கம் 20

19 ருஷ்ய உபயோகிப்போரின் கூட்டுறவுச் சங்கங்களில் தலைமை வகித்த சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளையும், மென்ஷெவிக்குகளையும் குறிக்கின்றது. பக்கம் 23

20 "வோல்யா நரோதா" (மக்களின் சித்தம்) — தினசரி செய்தித்தாள். சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் வலதுசாரிப் பகுதியின் பத்திரிகை. பெத்ரோகிராதில் 1917, ஏப்ரல் முதல் வெளிவந்தது; நவம்பரில் மூடப்பட்டது. பின்னல் வெவ்வேறு பெயர்களில் தோன்றியது. முடிவில் 1918 பிப்ரவரியில் தடை செய்யப்பட்டது.
பக்கம் 25

21 "யெதீன்ஸ்த்வோ" (ஒற்றுமை) — கி. வ. பிளெகானவைத் தலைவராகக் கொண்ட மென்ஷெவிக்-தற்காப்பு வாதிகளின் கடைக்கோடி வலதுசாரிக் குழுவின் செய்தித்தாள். பெத்ரோகிராதில் வெளியிடப்பட்டது. 1914 மே-ஜூன் மாதங்களில் நான்கு இதழ்கள் வெளியாயின. 1917, மார்ச் முதல் நவம்பர் வரை தினத்தாளாக வெளிவந்தது. 1917, டிசம்பர் முதல் 1918, ஜனவரி வரை "நாஷெ யெதீன்ஸ்த்வோ" (நமது ஒற்றுமை) என்னும் பெயரில் பிரசுரமாயிற்று. தாற்காலிக அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பதையும் பூர்ஷ்வாக்களுடன் கூட்டணி

அமைப்பதையும் ''உறுதியான ஆட்சியையும்'' தாங்கிப் பேசிய ''யெதீன்ஸ்த்வோ'' போல்ஷெவிக்குகளை எதிர்த்துப் போராடியது. சாக்கடைப் பத்திரிகை முறைகளை அடிக்கடி கையாண்டது. அக்டோபர்ப் புரட்சியையும் சோவியத் ஆட்சி அதிகாரம் நிறுவப்பட்டதையும் பகைமையுடன் எதிர்த்தது. பக்கம் 25

22 குலாக்குகள் — ''மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொழுத்துள்ள பணக்கார விவசாயிகள். பண்ணையாட்களைக் கூலிக்கு அமர்த்தியோ அல்லது வட்டிக்குக் கடன் கொடுத்தோ பிறர் உழைப்பைச் சுரண்டுபவர்கள்.'' (வி. இ. லெனின்) பக்கம் 25

23 1871ம் ஆண்டில் நடந்த பாரிஸ் கம்யூனைக் குறிக்கின்றது.

வரலாற்றில் காணும் முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே பாரிஸ் கம்யூன். பாரிஸ் நகரப் பாட்டாளி வர்க்கம் நடத்திய எழுச்சியின் விளைவாக 1871, மார்ச் 18ல் அந்தச் சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசாங்க இயந்திரத்தைத் தகர்த்து எறிந்துவிட்டு அதிகாரிகள், நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதியைச் செயல்படுத்தியது. மதம் அரசாங்கத்திலிருந்து வேறாகப் பிரிக்கப்பட்டது. பள்ளிகள் மதத்திலிருந்து வேறாகப் பிரிக்கப்பட்டன. சொந்தக்காரரர்கள் கைவிட்டுச் சென்ற ஆலைகள் தொழிலாளர் சங்கங்களிடம் கைமாற்றப்பட்டன. குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்பட்டது. இவையும் இன்னும் பல நடவடிக்கைகளும் தொழிலாளிகள், குட்டி பூர்ஷ்வாக்களின் நலன்களைக் கருதி எடுத்துக்கொள்ளப்பட்டன.

தனது செயல்களில் தேவையான உறுதியைக் காட்டாதுவிட்ட தவறை பாரிஸ் கம்யூன் செய்தது. பாரிஸைத் தாக்குவதற்கு தியேர் அரசாங்கம் வேர்ஸையில் எதிர்ப்புரட்சிப் படையைத் திரட்டிக் கொண்டிருந்தபொழுது, அதை உடனடியாக ஏறித் தாக்குவதற்குப் பதிலாக, கம்யூன் தயங்கி நின்றது. ''இத்தவறுகளெல்லாம் இருந்த போதிலுங்கூட 19ம் நூற்றாண்டின் மகத்தான பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது பாரிஸ் கம்யூன்'' என்று லெனின் குறிப்பிட்டுள்ளார்.

1871, மே 21ல் தியேரின் படைகள் பாரிஸில் நுழைந்தன. மிகுந்த வீராவேசத்துடன் பிரெஞ்சுத் தலை

நகரிலிருந்த தொழிலாளிகளும், அவர்களுடைய மனைவி மார்களும் குழந்தைகளும் எட்டு நாட்கள் சண்டை செய்தனர். ஆனால் கம்யூன் நசுக்கப்பட்டது. பூர்ஷ்வா வர்க்கம் தொழிலாளிகளை இரத்த வெள்ளத்தில் மூழ் கடித்தது. பல பெண்கள், குழந்தைகள் உள்பட சுமார் *30,000* பேர் வரை மிருகத்தனமாகக் கொலை செய்யப் பட்டனர். சுமார் *45,000* பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் ஆயிரக் கணக்கான பேர் கொலைத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனைக்குள்ளாயினர். பக்கம் 27

24 *1905-07* பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சியாகிய முதல் ருஷ்யப் புரட்சிக் காலத்தில் *1905*ல் தொழிலாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் முதன் முதலாகக் கூட் டப்பட்டன.

ஜாரிடம் தங்கள் குறைகளைப் பற்றிய விண்ணப் பத்தைச் சமர்ப்பிப்பதற்காக செயின்ட் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளிகளும் அவர்களின் மனைவிமாரும் குழந்தை களும் குளிர்கால அரண்மனைக்கு அமைதியான ஆர்ப் பாட்டம் நடத்திச் சென்றபொழுது ஜார் படைகள் அவர்களைச் சுட்டுத் தள்ளவே, *1905*, ஜனவரி *9*ல் புரட்சி துவங்கியது. ஆயிரக்கணக்கான பேர் கொல்லப்பட்டனர், காயமடைந்தனர்.

நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங் கள், ஆயுதமேந்திய கலகங்கள் கிளர்ந்தெழுந்தன. யதேச் சாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகக் குடியாட்சியை நிறுவவும், பெரிய நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகளை ஒழிக்கவும், எட்டு மணிநேர வேலை நாளை ஏற்படுத்தவும் புரட்சியின் விசைச் சக்தியாக நின்ற தொழிலாளிகள் போராடினர். *1905* கோடையில் இவானெவோ-வஸ்னெ ஸேன்ஸ்க் என்னும் நகரில் தொழிலாளிகள் பிரதிநிதி களின் முதல் சோவியத் அமைக்கப்பட்டது. சீக்கிரமாக மற்றத் தொழில் கேந்திரங்களிலும் சோவியத்துக்கள் தோன்றலாயின. பெரிய எஸ்டேட்டுகளை மக்களுக்கு மாற்றிவிட வேண்டுமென்ற கோரிக்கையுடன் விவசாயி களும் புரட்சியில் சேர்ந்தனர். ராணுவப் பிரிவுகளிலும் புரட்சி பரவியது. *1905* ஜூனில் கருங்கடல் கப்பற் படையிலிருந்த ''பொத்யோம்கின்'' என்ற கப்பலில் கலகம் மூண்டது.

அக்டோபரில் அரசியல்ரீதியான பொது வேலை நிறுத்தம் நடந்தது. , இயந்திரத் தொழிலும் போக்கு வரத்தும் எல்லாம் ஸ்தம்பித்துவிட்டன. தொழிலாளி வர்க்கத்தின் பிரம்மாண்டமான சக்தியை வேலை நிறுத்தம்

மெய்ப்பித்துக் காட்டியது. அக்டோபர் 17ல் ஜார் ஓர் அறிக்கை வெளியிட வேண்டியது அவசியமாயிற்று. அதில் அரசியல் சட்டம், பேச்சு சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் முதலியவை அளிப்பதாக வாக்குறுதி தரப்பட்டது. ஆனால் அவ்வாக் குறுதி ஒருபொழுதும் நிறைவேற்றப்படவில்லை.

டிசம்பரில் மாஸ்கோவில் ஆயுதந்தாங்கிய எழுச்சி ஒன்று கிளம்பியது. போல்ஷெவிக்குகளின் தலைமையில் தொழிலாளிகள் மிகப் பெருந் தொகையான படைகளை எதிர்த்து ஒன்பது நாட்கள் வீரத்துடன் போர் புரிந்தனர். செயின்ட் பீட்டர்ஸ்பர்கிலிருந்து புதிய படைகள் வந்த பிறகுதான் ஜார் அரசாங்கத்தால் கிளர்ச்சியை அடக்குவதற்கு முடிந்தது.

ஜார் ஆட்சி புரட்சி இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்கியது. தொழில் கேந்திரங்களுக்கும் விவசாயி இயக்கத்தின் கேந்திரங்களுக்கும் தண்டப் படைகள் அனுப்பப் பட்டன. ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

முதல் ருஷ்யப் புரட்சி தோல்வியில் முடிந்தது என்றாலும், அதன் சரித்திர முக்கியத்துவம் அளவற்றது. லெனின் கூறுவதுபோல, ருஷ்ய மக்களுக்கு அது ஒரு ''முழு ஒத்திகை'' யாயிருந்தது. அது இல்லாதிருப்பின், 1917 அக்டோபரில் தொழிலாளர் வர்க்க வெற்றி சாத்தியமாயிருக்க முடியாது. பக்கம் 31

25 ஸ்துருவே முறை — மார்க்ஸீயத்தின் மிதவாத-பூர்ஷ்வாத் திரிபு. ருஷ்யாவில் ''சட்டரீதியான மார்க்ஸீயத்தின்'' தலைமைப் பிரதிநிதி பி. பெ. ஸ்துருவேயின் பெயரையொட்டி இவ்வாறு அழைக்கப்படுவது. 19ம் நூற்றாண்டின் 90க்களில் ருஷ்யாவின் மிதவாத-பூர்ஷ்வா அறிவுஜீவிகளின் இடையே சமூக-அரசியல் போக்கு என்ற வடிவில் தோன்றியது ''சட்டரீதியான மார்க்ஸீயம்''. ஸ்துருவேயின் தலைமையில் ''சட்டரீதியான மார்க்ஸீயவாதிகள்'', பூர்ஷ்வாக்களின் நலன்கள் பொருட்டு மார்க்ஸீயத்தைப் பயன்படுத்த முயன்றார்கள். ஸ்துருவே முதலாளித்துவ அமைப்பைப் புகழ்ந்தார், ''முதலாளித்துவத்தினரிடம் கற்றுக்கொள்ளப் போகுமாறு'' அழைப்பு விடுத்தார். ஸ்துருவே முறை மிதவாத பூர்ஷ்வாக்களுக்கு ஏற்புடையவை எல்லாவற்றையும் மார்க்ஸீயத்திலிருந்து எடுத்துக்கொள்ளுகிறது என்றும் ஆனால் மார்க்ஸீயத்தின் ஆன்மாவை, அதன் புரட்சித் தன்மையை, முதலாளித்துவத்தின் தவிர்க்க இயலாத அழிவுபற்றியும் பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றியும்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றியும் போதனையை, அப்பால் எறிந்துவிடுகிறது என்றும் லெனின் சுட்டிக் காட்டினர். பக்கம் 32

[26] நித் நீத்திச் — ஆ. நி. அஸ்த்ரோவ்ஸ்கிய் நாடகங்கள் ஒன்றில் வரும் ஒரு பாத்திரம். பக்கம் 37

[27] "இஸ்வேஸ்தியா" — தினத்தாள். 1917 பிப்ரவரி 28ல் (மார்ச் 13ல்) "இஸ்வேஸ்தியா பெத்ரோகிராத்ஸ்கவோ சோவேத்தா ரபோச்சிஹ் இ ஸல்தாத்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ்" (தொழிலாளிகள், போர்வீரர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் செய்திகள்) என்ற பெயருடன் வெளி வரலாயிற்று. சோவியத்துக்களின் அகில ருஷ்ய முதல் மகாநாட்டில் தொழிலாளிகள், போர்வீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் மத்திய நிர்வாகக் கமிட்டி அமைக்கப்பட்ட பிறகு இது அக்கமிட்டியின் பத்திரிகையாக ஆகியது. 1917 ஆகஸ்டு 1 (14), (எண். 132) முதல் "இஸ்வேஸ்தியா த்ஸெந்திரால்னவோ இஸ்பல்னீத்தெல்னவோ கமித்தேத்தா இ பெத்ரொகிராத்ஸ்கவோ சோவேத்தா ரபோச்சிஹ் இ ஸல்தாத்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ்" (மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளிகள், போர்வீரர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத் ஆகியவற்றின் செய்திகள்) என்ற பெயருடன் வெளிவந்தது. 1917, செப்டம்பர் 29 (அக்டோபர் 12) (எண் 184) முதல் "இஸ்வேஸ்தியா த்ஸெந்திரால்னவோ இஸ்பல்னீத்தெல்னவோ கமித்தேத்தா சோவேத்தவ் ரபோச்சிஹ் இஸல்தாத்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ்" (தொழிலாளிகள், போர்வீர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் மத்திய கமிட்டியின் செய்திகள்) என்ற பெயருடன் வெளிவந்தது. இக்காலமெல்லாம் அது மென்ஷெவிக்குகள், சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகள் பிடியில் இருந்தது. போல்ஷெவிக் கட்சியை அது கடுமையாய்த்தாக்கி வந்தது.

சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்ய மகாநாட்டிற்குப் பிறகு "இஸ்வேஸ்தியா" ஆசிரியக் குழு மாற்றியமைக்கப்பட்டது, அந்தச் செய்தித்தாள் சோவியத் ஆட்சியின் அதிகாரபூர்வமான வெளியீடு ஆகிவிட்டது. சோவியத் அரசாங்கத்தின் முதலாவது முக்கிய தஸ்தாவேஜுகளும் வி. இ. லெனினது கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் அதில் பிரசுரிக்கப்பட்

டன. 1918, மார்ச்சில் ''இஸ்வேஸ்தியா'' பதிப்பகம் மாஸ்கோவுக்கு மாற்றப்பட்டது. இன்றளவும் அது ''இஸ்வேஸ்தியா சோவேத்தவ் தெப்புத்தாத்தவ் த்ரூத்யாஷிஃஸ்யா'' (உழைப்பாளிப் பிரதிநிதிகள் சோவியத்துக்களின் செய்திகள்) என்ற பெயருடன் வெளியிடப்படுகிறது. பக்கம் 42

28 மார்க்ஸ் ஏப்ரல் 12, 1871ல் குகல்மன் என்பவருக்கு எழுதிய கடிதம். பக்கம் 56

29 **உருமாலை முக்காடிட்டவர்** — அந்தோன் சேகவ் என்ற ருஷ்ய எழுத்தாளர் எழுதியுள்ள, இதே பெயரையுடைய கதையில் வரும் பிரதான பாத்திரம். புதியன வருவதையும் புதிய முயற்சிகள் செய்வதையும் கண்டு பயந்து வெறுக்கும், குறுகிய மனப்பான்மை கொண்ட பிலிஸ்டைன்களுக்கு இவன் ஓர் எடுத்துக்காட்டு. பக்கம் 56

30 **கர்னீலோவ் கலகம்**—1917, ஆகஸ்டில் பூர்ஷ்வாக்களும் நிலப்பிரபுக்களும் நடத்திய புரட்சி எதிர்ப்புக் கலகம். தரைப்படையின் தலைமைத் தளகர்த்தன், ஜாரின் ஜெனரல் கர்னீலோவ் கலகத்துக்குத் தலைமைதாங்கினன். பெத்ரோகிராத் நகரை வசப்படுத்தி, போல்ஷெவிக் கட்சியைச் சிதைத்துத் தகர்த்து, சோவியத்துக்களை விரட்டியடித்துவிட்டு, நாட்டில் இராணுவ சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவது, முடியாட்சியை மீண்டும் ஸ்தாபிக்க முன்னேற்பாடுகள் செய்வது — இவையே சதிகாரர்கள் கொண்டிருந்த நோக்கங்கள். தாற்காலிக அரசாங்கத்தின் தலைவன் அ. பி. கெரேன்ஸ்க்கிய் சதித்திட்டத்தில் பங்கு கொண்டான். ஆனல் கலகம் தொடங்கியதும், கர்னீலோவுடன் நாமும் துடைத்து ஒழிக்கப்பட்டுவிடுவோம் என அஞ்சி, அவனிடமிருந்து பிரிந்து ஒதுங்கி, அவனைத் தாற்காலிக அரசாங்கத்துக்கு எதிராகக் கலகம் செய்பவன் எனப் பிரகடனம் செய்தான்.

கலகம் ஆகஸ்ட் 25 (செப்டம்பர் 7)ந் தேதி தொடங்கியது.

போல்ஷெவிக் கட்சி கர்னீலோவுக்கு எதிராக மக்கள் திரளின் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியது. அதே சமயம், லெனின் கோரியது போன்றே தாற்காலிக அரசாங்கத்தையும் அதன் துணையாட்களாகிய சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளையும் மென்ஷெவிக்குகளையும் இடைவிடாது அம்பலப்படுத்தியது. போல்ஷெவிக் கட்சி மத்தியக் கமிட்டியின் அழைப்பை ஏற்று, பெத்

ரோகிராத் தொழிலாளர்களும் புரட்சிகரத் தரைப் படைவீரர்களும் கடற்படை வீரர்களும் கலகக்காரர்களை எதிர்த்துப் போருக்குக் கிளம்பினார்கள். தலைநகரின் தொழிலாளர்களது செங்காவற்படைப் பிரிவுகள் விரைவாக அமைக்கப்பட்டன. அனேக இடங்களில் புரட்சிக் கமிட்டிகள் நிறுவப்பட்டன. கர்னீலோவ் படையினரின் இயக்கம் தேக்கி நிறுத்தப்பட்டது. போல்ஷெவிக் பிரசாரத்தின் விளைவாக அவற்றினிடையே பிளவுகள் உண்டாகத் தொடங்கின.

கர்னீலோவின் படையெடுப்பு தொழிலாளர்களாலும் குடியானவர்களாலும் நசுக்கப்பட்டது. அவர்களைத் தலைமையேற்று நடத்தியது போல்ஷெவிக் கட்சி. பொது மக்கள் திரளின் வற்புறுத்தலுக்கு இணங்கித் தாற்காலிக அரசாங்கம் கர்னீலோவையும் அவனது கூட்டாளிகளையும் கைதுசெய்து கலகத்துக்காக அவர்கள் மேல் வழக்குத் தொடுக்க வேண்டியதாயிற்று.

பக்கம் 59

31 வாந்தே — பிரான்ஸில் ஒரு மாகாணம். பதினெட்டாம் நூற்றுண்டின் முடிவில் ஏற்பட்ட பிரெஞ்சு பூர்ஷ்வா புரட்சிக் காலத்தில் புரட்சிக் கன்வென்ஷனுக்கு விரோதமாகப் பின்தங்கிய விவசாயிகளின் எதிர்ப்புரட்சிக் கலகங்கள் அங்கு நிகழ்ந்தன. மதக் கோஷங்களின் கீழ் இக்கலகங்கள் நிகழ்ந்தன. இவைகளை நடத்தியவர்கள் எதிர்ப்புரட்சிக் குருமார்களும் நிலப்பிரபுக்களும்.

பக்கம் 65

32 ஏப்ரல் 20 (மே 3)ந் தேதி, வெளிவிவகார அமைச்சன் மிலியுக்கோவ் நேச நாடுகளின் அரசாங்கங்களுக்கு அனுப்பியிருந்த குறிப்புக் கடிதம் செய்தித்தாள்களில் வெளியாயிற்று. ஜார் அரசாங்கத்தின் எல்லா உடன்படிக்கைகளையும் ஏற்று அனுசரிப்பதாகவும் யுத்தத்தை வெற்றிகரமான முடிவுவரை நடத்திச் செல்வதாகவும் இதில் தாற்காலிக அரசாங்கம் உறுதியளித்திருந்தது. தாற்காலிக அரசாங்கத்தின் ஏகாதிபத்தியக் கொள்கை உழைப்பாளி மக்களின் விரிவான திரள்களுக்கு ஆத்திரமூட்டியது. ஏப்ரல் 21 (மே 4)ந் தேதி, பெத்ரோகிராத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்து சமாதானக் கோரிக்கையுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஒரு லட்சத்துக்கும் மேல் தொழிலாளர்களும் படைவீரர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள். மாஸ்கோ, உரால் பிரதேசம், உக்ரேய்னு, க்ரொன்ஷ்தாத் முதலிய பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்

களும் பொதுக்கூட்டங்களும் நடந்தன. மிலியுக்கோவின் குறிப்புக் கடிதத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பல நகரங்களின் சோவியத்துக்களிலிருந்து பெத்ரோகிராத் சோவியத்துக்கு அனுப்பப்பட்டன.

ஏப்ரல் ஆர்ப்பாட்டங்கள் அரசாங்க நெருக்கடிக்கு விதையூன்றின. பொதுமக்கள் திரளின் வற்புறுத்தல் காரணமாக அமைச்சர்கள் பா. நி. மிலியுக்கோவும் அ. இ. குச்கோவும் ராஜிநாமா செய்ய நேர்ந்தது. மே 5 (18)ந் தேதி முதலாவது கூட்டணி மந்திரிசபை அமைக்கப்பட்டது. பத்து முதலாளித்துவ அமைச்சர்களுடன் சமரசவாதிக் கட்சிகளின் தலைவர்களும் மந்திரிசபையில் இடம் பெற்றார்கள். அவர்களாவர்: சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளிலிருந்து அ. பி. கெரேன்ஸ்கியும் வி. மி. செர்னேவும் மென்ஷெவிக்குகளிலிருந்து இ. கி. த்ஸெரெத்தேலியும் மி. இ. ஸ்கோபெலேவும் பிற கட்சியினரும். பூர்ஷ்வாக்களின் தரப்புக்கு வெளிப்படையாகச் சென்றுவிட்ட சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளாலும் மென்ஷெவிக்குகளாலுமே பூர்ஷ்வா அரசாங்கம் காப்பாற்றப்பட்டது.
பக்கம் 66

33 1888, பிப்ரவரி 22ந் தேதி பி. எங்கெல்ஸ் பி. அ. ஸோர்கேக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்க. பக்கம் 69

34 இவை மொல்சாலினது சொற்கள். சிறந்த ருஷ்ய எழுத்தாளர் அ. செ. கிரிபொயேதவ் எழுதியுள்ள ''அறிவினால் விளைந்த துன்பம்'' என்ற நாடகத்தில் வரும் ஒரு பாத்திரம். பக்கம் 78

35 **''டேன்''** (நாள்) — மிதவாத பூர்ஷ்வா தினத்தாள். செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் 1912ல் மென்ஷெவிக்-லிக்விடேட்டர்களுடைய ஒத்துழைப்புடன் வெளிவரத் தொடங்கியது. 1917ல், பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப்பிறகு அவர்கள் கைக்கு முழுதும் மாறிவிட்டது. பெத்ரோகிராத் சோவியத்தின் ராணுவப் புரட்சிக் கமிட்டியால் 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)ல் தடை செய்யப்பட்டது. பக்கம் 81

36 புத்தகத்தில் சுட்டப்பட்டுள்ள தேதிகளைக் குறிப்பிடுகையில் லெனின் பின்வரும் விவரங்களைக் கருத்தில் கொண்டுள்ளார்: பிப்ரவரி 28 (மார்ச் 13)—பிப்ரவரி மாத பூர்ஷ்வா-ஜனநாயகப் புரட்சி; செப்டம்பர் 30 (அக்டோ

பர் 13)—அரசியல் சட்ட நிர்ணய சபை கூட்டுவதற்குத் தாற்காலிக அரசாங்கம் முதலில் விதித்த கெடு; 1917, நவம்பர் 28 (டிசம்பர் 11)ந் தேதி அரசியல் சட்ட நிர்ணய சபை கூடுவதாக இருந்தது. பக்கம் 84

37 1917 செப்டம்பர் 22ல் (அக்டோபர் 5ல்) கூடிய பெத்ரோகிராத் சோவியத்துக் கூட்டம் ஒன்றில் துபாஸவ் என்ற ராணுவ அதிகாரி பேசியதைக் குறிப்பிடுகிறார் லெனின். பக்கம் 84

38 வி. இ. லெனின், ''நோவயா ஷிஸ்ன்'' என்னும் செய்தித்தாளில் வெளியான ''இடி மீண்டும் முழங்கியது'' என்ற தலைப்புள்ள கட்டுரையிலிருந்து நி. ஸுகானவின் சொற்களை மேற்கோள் காட்டுகிறார்.

ஸ்மோல்னிய் கல்விக் கழகத்தின் கட்டிடத்தில் 1917, ஆகஸ்டு மாதம் முதல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளர்கள், போர்வீரர்கள் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத், இவற்றின் போல்ஷெவிக் பகுதியினர் தங்கியிருந்தார்கள். அக்டோபர் மாதம் இராணுவப் புரட்சிக் கமிட்டி அங்கே நிலவியது. பக்கம் 84

பெயர்ப் பட்டியல்

அலேக்ஸின்ஸ்கிய், கி. அ. *(பிறப்பு-1879)* — சோஷல்-டெமாக்ரட்டாயிருந்து, பின்னர் முடியரசுவாதி யானவன். 1917 ஜூலை நிகழ்ச்சிகளின் போது லெனினையும் போல்ஷெவிக்குகளையும் ஜெர்மன் உளவாளிகள் என்று காட்டி அவர்கள் மதிப்பைக் குலைப்பதற்காகக் கள்ள தஸ்தாவேஜுகளைத் தயாரித்தவன். 1918, ஏப்ரலில் ருஷ்யாவிலிருந்து தப்பி ஓடியவன்.—79.

அவ்க்ஸேன்தியேவ், நி. டி. *(1878 — 1943)* — வலதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் ஒரு தலைவன். 1917ல் கெரேன்ஸ்கியின் ஒரு கூட்டணி அரசாங்கத்தின் உறுப்பினனுயிருந்தான். அக்டோபர் புரட்சிக்குப் பின் சோவியத் அரசாங்கத்துக்கு விரோதமான எதிர்ப்புரட்சிக் கலகங்களில் பங்கெடுத்துக் கொண்டான்.—13.

எங்கெல்ஸ், பிரெடெரிக் *(1820—1895)*. —69.

கிஷ்கின், நி. மி. *(1864 — 1930)* — மருத்துவன், காடெட் தலைவர்களில் ஒருவன். தாற்காலிக அரசாங்க உறுப்பினன். அக்டோபர் புரட்சிக்கு முன்னே போல்ஷெவிக்குகளை எதிர்த்துப் போராடும் பொருட்டுப் பெத்ரோகிராத் சர்வாதிகாரியாக நியமிக்கப் பெற்றவன். — 11, 25, 26, 62.

குவோஸ்தேவ், கு. அ. *(பிறப்பு-1883)* — மென்ஷெவிக். தாற்காலிக அரசாங்கத்தின் ஒரு கூட்டணி மந்திரிசபையின் உறுப்பினன். — 33.

குஸ்கோவா, எ. டி. *(1869 — 1958)* —பூர்ஷ்வா அரசியல் எழுத்தாளர்களில் ஒருத்தி. ருஷ்ய சோஷல்-டெமாக்ரட்டுகளிடையே பொருளியல் வாதத்தின் முக்கியப் பிரதி

நிதி. காடெட் கட்சியை ஆதரித்தவன். அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் சோவியத் அரசின் தீவிர எதிரி. — *12.*

கெரேன்ஸ்கிய், அ. பி. *(பிறப்பு-1881) — 1917ல் ருஷ்யாவில் பூர்ஷ்வா எதிர்ப் புரட்சித் தாற்காலிக அரசாங்கத்தின் தலைவனுயிருந்தவன். சோஷலிஸ்ட்-புரட்சிவாதி. — 21, 22, 25, 33, 57, 59, 60, 61, 62, 63, 64, 73, 82, 84.*

கொனவாலவ், அ. இ. *(பிறப்பு-1875) — பெரிய துணி மில் முதலாளி. கெரேன்ஸ்கிய் மந்திரி சபையில் வியாபார, தொழில் மந்திரியாக இருந்தவன்.—11.*

சாய்கோவ்ஸ்கிய், நி. வ. *(1850 — 1926) — நரோத்னிக்; பிப்ரவரிப் புரட்சிக்குப் பின் வலதுசாரி சோஷலிஸ்ட்-புரட்சிவாதியானுன். 1918-19ல் அர்காங்கெல்ஸ்க்கில் எதிர்ப் புரட்சிக்காரர்களின் வெண்படை அரசாங்கத்தில் உறுப்பினனுயிருந்தான்.—12.*

செர்னேவ், வி. மி. *(1876 — 1952) — சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் தலைவன். கூட்டணித் தாற்காலிக அரசாங்கத்தில் விவசாய மந்திரி. சோவியத் அரசின் சத்துரு. — 25, 31, 32, 61, 69.*

டான், பி. இ. *(பி. இ. குர்விச்சின் புனைபெயர்) (1871 — 1947) — மென்ஷெவிக்குகளின் ஒரு தலைவன்.—31, 62.*

தன்தோன், ஜோர்ஜ் ஜாக் *(1759-1794) — 18ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் நடைபெற்ற பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியில் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டவர். —78.*

துபாஸவ் *— கட்சிச் சார்பற்ற ராணுவ அதிகாரி. போர் முனையில் செயலாற்றியவர்.—84.*

த்ஸெரெத்தேலி, இ. கி. *(1882 — 1959) — மென்ஷெவிக் தலைவர்களில் ஒருவன். பிப்ரவரிப் புரட்சிக்குப் பின் கூட்டணித் தாற்காலிக அரசாங்கத்தில் சேர்ந்து, முதலில் தபால்-தந்தி மந்திரியாகவும் பின்பு உள்நாட்டு மந்திரியாகவும் அங்கம் வகித்தான்.—7, 31, 32, 33, 46, 47, 60, 62, 69, 81.*

நிக்கீத்தின், அ.மி. *(பிறப்பு-1876)* — மென்ஷெவிக், கெரேன்ஸ்கியின் கடைசிக் கூட்டணி மந்திரி சபையில் அங்கத்தினன்.— *33, 62.*

பஸாரோவ், வி. *(வி. அ. ரூத்னேவ்) (1874—1939)*—பொருளாதார நிபுணன். *1904-1907* ஆண்டுகளில் போல்ஷெவிக்குகளுடன் சேர்ந்துகொண்டவன். பிற்போக்கு வெற்றிபெற்ற பிறகு அவர்களை விட்டு விலகிவிட்டான். *1917*ம் ஆண்டில் ''நோவயா ஷிஸ்ன்'' என்ற மென்ஷெவிக் செய்தித்தாளின் ஆசிரியர்களில் ஒருவஞக இருந்தான்.—*50, 52, 53.*

பிரியாண்ட், அரிஸ்தீத் *(1862-1932)* — பிற்போக்காளஞன பிரெஞ்சு ராஜதந்திரி. *1909* முதல் பலமுறை அரசாங்கத் தலைமை யேற்றவன்.—*35.*

பிரெஷ்கோ-பிரெஷ்கோவ்ஸ்கயா, எ. க. *(1844-1934)* — சோஷலிஸ்ட்-புரட்சிவாதிகளின் கட்சியின் அமைப்பாளர்களில் ஒருத்தி. சோவியத் அதிகாரத்தின் பரம வைரி. — *24, 25, 46, 47, 69, 71, 73.*

பிளெகானவ், கி. வ. *(1856-1918)* — ருஷ்ய, சர்வதேச சோஷலிஸ்ட் இயக்கத்தில் பிரமுகராயிருந்தவர். மார்க்ஸீயத்தைப் பரப்பியவர்களில் தலைசிறந்தவர். *1903*ல் அகில ருஷ்ய சோஷல்-டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸிற்குப் பின் மென்ஷெவிக்குகள் தரப்புக்குச் சென்றுவிட்டார்.—*24, 25, 69, 71, 73.*

புரொக்கோப்போவிச், சே. நி. *(1871 —1955)*—பூர்ஷ்வாப் பொருளாதார நிபுணன், கட்டுரையாளன். *1906*லிருந்து காடெட்டுக் கட்சியின் உறுப்பினன். *1917*ல் பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தில் பதவி வகித்தான்.—*33.*

பெரிவேர்ஸெவ், ப. நி. — சட்ட நிபுணன். சோஷலிஸ்ட் புரட்சிவாதிகளின் போக்கை ஆதரித்தவன். *1917*ல் முதலாவது பூர்ஷ்வாக் கூட்டணி மந்திரி சபையில் நீதி மந்திரியாக இருந்தவன். லெனினைப்பற்றி அலேக்ஸின்ஸ்கிய் தயாரித்த கள்ள தஸ்தாவேஜுகளைப் பிரசுரித்தவன்.—*79.*

பெர்கென்ஹைம், அ. ம. *(1880 — 1932)*—சோஷலிஸ்ட்-புரட்சிவாதி, *1917*ல் மாஸ்கோ நகரக் கவுன்சில் உறுப்பினஞயிருந்தவன்.—*12.*

பெஷெகோனவ், அ. வ. *(1867-1934)* — *மக்கள் சோஷலிஸ்ட் என்ற குட்டி பூர்ஷ்வாக் கட்சியின் தலைவர்களில் ஒருவன். பூர்ஷ்வாத் தாற்காலிக அரசாங்கத்தில் உணவு மந்திரியாக இருந்தவன். —71, 72, 73.*

மார்க்ஸ், கார்ல் *(1818—1883).—56, 77.*

மார்த்தவ், லே. (யூ. ஓ. த்ஸேதெர்பௌம்) *(1873—1923) — மென்ஷெவிக் தலைவர்களில் ஒருவன். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் ஆட்சிக்கும் தீவிர எதிரி.—29.*

லீபெர் (கோல்த்மன், மி. இ.) *(1880—1937)—லித்துவானியா, போலந்து, ருஷ்யா ஆகியவற்றில் இருந்த 'பூந்த்' எனப்பட்ட அகில யூதத் தொழிலாளர் சங்கத்தில் பிரமுகனாயிருந்தவன். முக்கிய அரசியல் பிரச்சினைகளில் இச்சங்கம் மென்ஷெவிக்குகளை ஆதரித்தது.—31.*

ஜொர்தானியா, நோ. நி. (கோஸ்த்ரோவ்) *(1870—1953), — ஜார்ஜியாவைச் சேர்ந்த மென்ஷெவிக் தலைவர்களில் ஒருவன்.—26.*

ஸ்தொலீபின், பி. அ. *(1862-1911)—1906 முதல் 1911 வரை மந்திரி சபைத் தலைவனாயிருந்தவன். 1905-07 வருடத்தியப் புரட்சியை ஒடுக்கியது, அதன் பின் ஏற்பட்ட அரசியல் பிற்போக்குக் காலம் ஆகியவற்றுக்கு இவனே பெரிதும் பொறுப்பாளி.—62, 63.*

ஷிங்கரேவ், அ. இ. *(1869-1918) — காடெட்டு. முதலாவது பூர்ஷ்வாக் கூட்டணித் தாற்காலிக அரசாங்கத்தில் விவசாய மந்திரி. இரண்டாவதில் நிதிமந்திரி.—37.*

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41-B, Sidco Industrial Estate, Ambattur Madras-600098

ஷோ-ரூம்

6/30, Mount Road, Madras-600002

கிளைகள்

80, West Tower St., Madurai-625001
87/89, Eppanakara St., Coimbatore-641001
Singarathope. Tiruchirappalli-620008
Cherry Road, Salem-636001

В. И. Ленин

УДЕРЖАТ ЛИ БОЛЬШЕВИКИ
ГОСУДАРСТВЕННУЮ ВЛАСТЬ

На тамильском языке